விலை: ரூபா 20 பக்கங்கள் 28

# உதயன்

சுடர் 30 கதிர் 236 வள்ளுவர் ஆண்டு 2046 ஆடி 4, திங்கட்கிழமை 20.07.2015

கடந்த வருடத்தில் 5,650 விவசாயிகள் தற்கொலை

பக்கம் 12

ஈராக்கில் 115 பேர் உடல் சிதறிச் சாவு

பக்கம் 13

## பிரதமர் தெரிவில் ஜனாதிபதிக்கும் அதிகாரமுண்டு

### சுட்டிக்காட்டுகின்றார் நீதி அமைச்சர்

கொழும்பு, ஜூலை 20

"பிரதமரைத் தெரிவுசெய்யும் விடயத்தில் ஜனாதிபதிக்கு எவ்வித அதிகாரமும் இல்லை" என முன்வைக்கப்பட்டுவரும் கருத்துக்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சி நேற்று பதிலளித்துள்ளது. இது விடயத்தில் ஜனாதிபதிக்கு அதிகாரம் இருக்கிறது" - என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரதமரைத் தெரிவுசெய்யும் விடயத்தில் ஜனாதிபதிக்கு அதிகாரம் இல்லையெனில், தான் ஜனாதிபதியானதும் பிரதமராக ரணில் விக்கிரம சிங்கவை ஜனாதிபதி எப்படி நியமித்திருக்கமுடியும்? அப்போது இந்த ஆட்சேபனையை எதிரணியினர் முன்வைத்திருக்கலாம் அல்லவா

பக்கம் 24

## வயலுக்கு நடுவே இருந்து குழந்தையின் சடலம் மீட்பு



- குஞ்சுப் பரந்தனில் நேற்றுப் பரிதாபம்.
- காணாமற்போன 3 வயதுப் பெண் குழந்தையினது எனச் சந்தேகம்.

கிளிநொச்சி, ஜூலை 20

குஞ்சுப் பரந்தன், பொறிக்கடை பகுதியில் நன்கு முற்றிய நெல் வயலுக்கு நடுவே பெண் குழந்தை ஒன்றின் சடலம் உருக்குலைந்த நிலையில் நேற்று மீட்கப்பட்டது.

கிளிநொச்சி உருத்திரபுரம் பகுதியில் ஒரு மாதத்திற்கு முன்னர் காணாமற்போன 3 வயதுப் பெண் குழந்தையின் சடலமாக இது இருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த மாதம் 21 ஆம் திகதி கிளி நொச்சி எள்ளுக்காட்டுப் பகுதியில் தாயார் குளிக்கச் சென்ற போது வீட்டிலே தனியாக இருந்த சந்திரகுமார் ஜெருசா (வயது 3) என்ற பெண் குழந்தை காணாமற்போனது. குழந்தையை காணவில்லை என கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் குழந்தையின் தாயாரால் முறைப்பாடு செய்யப்பட்டது.

14 வயதுச் சிறுவன் உட்பட குழந்தையின் உறவினர்களிடம்

பக்கம் 24

## கோத்தாவும் கோதாவில்

### மஹிந்தவின் குருநாகல் தேர்தல் பரப்புரைப் பொறுப்பு அவரிடம்



கொழும்பு, ஜூலை 20

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் குருநாகல் மாவட்ட தேர்தல் பரப்புரை முன்னெடுப்புகளுக்குப் பொறுப்பாக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

குருநாகல் மாவட்ட தலைமை வேட்பாளராகப் போட்டியிடும் தனது சகோதரர் மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றியை உறுதிசெய்யும் வகையில் இவர் அரசியல் களத்தில் பிரவேசித்துள்ளார் எனவும், இவரின் வருகையால் அந்த மாவட்ட அரசியல் களத்தில் சூடான மாற்றங்கள் ஏற்படலாம் எனவும் அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

தான் பாதுகாப்புச் செயலாளராகப் பணியாற்றுகையில், அரச அதிகாரியாக இருந்துகொண்டு கோத்தபாய ராஜபக்ஷ வெளிப்படையாகவே அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்தார். தற்போது அவர் அந்தப் பதவியில் இல்லை. எனவே, இதன் மூலமாக அவர் செயற்பாட்டு அரசியலில் இறங்கக்கூடும்

பக்கம் 24

## மயிலிட்டி மக்களை வேறிடத்தில் குடியேற்றக் கடற்படை திட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 20

மயிலிட்டிப் பிரதேச மக்களை, வளலாய்ப் பகுதியில் புதிய துறைமுகம் அமைத்து நிரந்தரமாகக் குடியமர்த்துவதற்குரிய திட்டத்தை கடற்படையினர் தயாரித்து வருகின்றனர். பலாலியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற உயர்மட்டக் கலந்துரையாடலின்போது கடற்படையினரால் இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் முப்படைத் தளபதிகள் பலாலி இராணுவத் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு இங்குள்ள இராணுவ அதிகாரிகளைச் சந்தித்துப் பேசினர். இதில் மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர், அரச அதிபர், பிரதேச செயலாளர்கள் ஆகி

பக்கம் 24

இலங்கையரின் கர்மவினை 30 நாள்களில் தெரிந்துவிடும்

பக்கம் 16

விதியின் விளையாட்டு

பக்கம் 17

## தமிழினம் என்றுமே அடிபணியாது என்பதை தெளிவாகக் காட்டுங்கள்

### சாவகச்சேரியில் நேற்று அறைகூவல் விடுத்தார் மாவை


தென்மராட்சி, ஜூலை 20

தமிழ் மக்களை தோற்றுப்போன சமூகமாக கருத்துக்களை வெளியிட்ட மஹிந்த ராஜபக்ஷவை எமது சமூகமே தோற்கடித்து வரலாறு படைத்தது. அதேபோன்று எமது கொள்கைகளை எங்களது இலட்சியத்தை எமது மண்ணிலே தோற்கடிக்க நினைப்போருக்கு இந்தத் தேர்தல் மூலம் பாடம் படிப்பிப்பதுடன்,

பக்கம் 24

## மஹிந்த விசுவாசிகளை களையெடுத்த மைத்திரி

### தேசியப்பட்டியலில் இருந்து நீக்கினாராம்



கொழும்பு, ஜூலை 20

மஹிந்த ராஜபக்ஷவால் தேசியப் பட்டியலில் உள்ளடக்கப்பட்ட மூவரின் பெயர்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடைசி நேரத்தில் நீக்கியுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமை ஊடகங்கள் மத்தியில் உரையாற்றுவதற்கு முன்னதாக மைத்திரிபால சிறிசேன கடும் நிலைப்பாட்டை எடுத்திருந்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலர் சுசில் பிரேமஜயந்த

பக்கம் 24

## கமரூனை வெல்ல வைத்தவர் ஐ.தே.கவுக்கும் ஆலோசனை

கொழும்பு, ஜூலை 20

பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூனின் தேர்தல் பரப்புரை நிபுணர் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆலோசகராகச் செயற்படவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் பிரிட்டனில் நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலின்போது பிரதமர் டேவிட் கமரூனின் பரப்புரைப் பணிகளுக்குப் பொறுப்பாகக் கடமையாற்றிய க்றொஸ்பி என்பவரே இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் ஆலோசகராக உள்வாங்கப்படவுள்ளார். கட்சியின் வெற்றியை உறுதிசெய்யும் நோக்கில் குறித்த நிபுணரை ஐக்கிய தேசியக் கட்சி அழைத்துவந்துள்ளதாகத் தெரிவிக்கப்படு

பக்கம் 24

## 1 கிலோ கிராம் கஞ்சா சிக்கியது யாழ்.நகரில்

யாழ்ப்பாணம், ஜூலை 20

யாழ்.முனீஸ்வரர் கோயிலுக்கு அருகாமையில் மோட்டார் சைக்கிளுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த



பக்கம் 24




தேர்தல் பரப்புரைச் சுவரொட்டிகளை அகற்றும் நடவடிக்கைகள் பொலிஸாரால் யாழ் நகரில்.மும்முரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தேர்தல் சுவரொட்டிள், கட்டவுட்கள்காட்சிப்படுத்துவது சட்டவிரோதமானது. அவ்வாறு காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் சுவரொட்டிகளை அகற்ற வேண்டுமென தேர்தல்கள் ஆணையாளர் கண்டிப்பான உத்தரவு பிறப்பித்ததையடுத்து சுவரொட்டிகள் அகற்றும் நடவடிக்கைகளை பொலிஸார் பரவலாக மேற்கொண்டு வருகின்றனர். பொது இடங்கள், விளம்பரப்பலகைகள், வீட்டு மதில்கள் என்பவற்றில் ஒட்டப்பட்டிருக்கும் சுவரொட்டிகள் அகற்றப்பட்டு வருகின்றன. அதேவேளை புறநகர்ப்பகுதிகளிலும் கிராமப் புறங்களிலும் பல்வேறு கட்சிகளின் சுவரொட்டிகள் பரவலாகக் காணப்படுகின்றன. (ற-135)

# மஹிந்தவின் பயணச் செலவு ரூபா 785 மில்.

## கடந்த மூன்றாண்டுகளில்

கொழும்பு, ஜூலை 20

மஹிந்த ராஜபக்ஷ கடந்த மூன்று ஆண்டுகளில் மாத்திரம் வெளி நாடுகளுக்கு மேற்கொண்ட பயணத்துக்காக 785 மில்லியன் ரூபாவைச் செலவு செய்துள்ளார். இதில் கடந்த ஆண்டு இறுதியில் மேற்கொண்ட பயணங்களுக்குரிய கொடுப்பனவுகள் இன்னமும் செலுத்தப்படாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

2012 ஆம் ஆண்டு தொடக்கம், 2014 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில், சிறிலங்கன் எயர் லைன்ஸ் நிறுவனத்தின், விமானங்களை, 90 பயணங்களுக்குப் பயன் படுத்தியுள்ளார். இதற்கான கட்டணமே 785 மில்லியன் ரூபா வாகும்.

சிறிலங்கன் எயர்லைன்ஸ் நிறுவனத்தின் ஒன்று அல்லது இரண்டு எயர்பஸ் ஏ-340 விமானங்களைப் பயன்படுத்துவது வழக்கம். இவற்றில் ஒன்று 243 ஆசனங்களையும், மற்றது 299 ஆசனங்களையும் கொண்டது. இவை சிறிலங்கன் நிறுவனத்திடம் உள்ள மிகப் பெரிய விமானங்களாகும். மஹிந்த ராஜபக்ஷ இவற்றை வாடகைக்கு அமர்த்தும் போது கட்டணம் செலுத்திப் பயணிப்போருக்கு இவற்றில் இடம் கிடைப்பதில்லை. பல நாள்களுக்கு இந்த நிலை இருக்கும்.

2012 ஜூன் மாதம், போர்த்துக்கல்லின் லிஸ்பன், கியூபாவின் ஹவானா, பிரேசிலின் ரியோ டி ஜெனீரோ, தென்னாபிரிக்காவின் ஜொஹானெஸ்பெர்க் நகரங்களுக்கு மேற்கொண்ட பயணங்களுக்கே, அதிகம் செலவாகியுள்ளது. இதற்கு 100 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

2013 மார்ச் மாதம், மத்தல விமான நிலையத்தின் திறப்பு விழாவுக்காக சிறிலங்கன் விமானம் ஒன்று 2 மில்லியன் ரூபாவுக்கு வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ளது. 2014 ஜூன் மாதம், மஹிந்த ராஜபக்ஷ தென்னாபிரிக்காவின் கேப் டவுண், பொலிவியாவின் சான்டா குரூஸ், மாலைதீவு, சிசெல்ஸ் போன்ற நாடுகளுக்கு மேற்கொண்ட பயணத்துக்காக 77 மில்லியன் ரூபா விமானக் கட்டணமாக செலவிடப்பட்டுள்ளது.

2014 டிசெம்பரில் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக, திருப்பதியில் வழிபாடு செய்வதற்காக வாடகைக்கு அமர்த்திய விமானத்துக்கான 4 மில்லியன் ரூபா கட்டணம் இன்னமும் செலுத்தப்படாமல் உள்ளது. அத்துடன் 2014 ஒக்ரோபரில் ரோம் மற்றும் வத்திக்கானுக்கும், 2014 நவம்பரில், காத்மண்டு மற்றும் மாலைதீவுக்கும் மேற்கொண்ட பயணங்களுக்கு வாடகைக்கு அமர்த்தப்பட்டதற்கான 45 மில்லியன் ரூபா கட்டணத்தையும் மஹிந்த ராஜபக்ஷ இன்னமும் செலுத்தவில்லை.

ஏனைய பெரும்பாலான பயணங்களுக்கான விமான வாடகைக் கட்டணம் அவர் ஆட்சியில் இருந்த போதே செலுத்தப்பட்டு விட் டது. (ற-5)

## திருநெல்வேலி சந்தையின் வெளிப்புற சுற்றாடல் புனர்நிர்மாணம்

யாழ்ப்பாணம், ஜூலை 20

திருநெல்வேலி மரக்கறி விற்பனைச் சந்தையின் வெளிச் சுற்றாடல் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளன. இந்தச் சந்தை கட்டடத்தின் கீழ் தள பிரதேசம் மற்றும் நடைபாதை என்பன சிமெந்தினால் நிர்மாணம் செய்யப்பட்டு நிறைவுற்றுள்ளதாக சபையின் தவிசாளர் ப.வசந்த குமார் தெரிவித்தார்.

மழை காலத்தில் சந்தை கட்டடத்துக்குச் செல்லும் நடைபாதை மற்றும் கீழ் தளப் பகுதி வெள்ளம் தேங்கி நிற்பதாலும் மற்றும் சேறு சகதியினால் சந்தைக்கு வருவோர் சிரமங் களை எதிர்நோக்கி வந்தனர். தற்போது இவை சீர்செய்யப்பட்டு சிமெந்தினால் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் சந்தையின் பாதுகாப்புக் கருதி சந்தைக்கு உள்ளே, வெளியே செல்லும் பகுதிக்கு பாதுகாப்பு கேற்கள் அமைக்கப்படவும் உள்ளன. அதனைவிட சந்தைக்கு இரவுக் காவலாளிகளும் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர். (ற-17)

## ராணுவ ட்ரக் மோதி குடும்பஸ்தர் சாவு

யாழ்ப்பாணம், ஜூலை 20

கிளிநொச்சியில் ராணுவ ட்ரக் மோதியதனால் படுகாயமடைந்த சைக்கிளில் சென்று கொண்டிருந்த குடும்பஸ்தர் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார்.

கிளிநொச்சி அறிவியல் நகரில் கடந்த வியாழக்கிழமை இரவு 7.30 அளவில் இந்த விபத்து இடம் பெற்றது. பாரதிபுரத்தைச் சேர்ந்த முனியாண்டி கதிரமலை (வயது 40) என்பவரே விபத்தில் உயிரிழந்தார். சைக்கிளில் வீதியைக் கடந்து மறுபுறம் சென்றபோது நடுவீதியில் வைத்து ராணுவ ட்ரக் மோதியதாக விசாரணையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. படுகாயமடைந்த அவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட போதும் சிகிச்சை பயனளிக்காது கடந்த வியாழக்கிழமை உயிரிழந்தார்.

விபத்தையடுத்து ராணுவ ட்ரக் வாகனத்தை செலுத்திச் சென்ற ராணுவ சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம் குமார் விசாரணை மேற்கொண்டார். விசாரணைகளின் பினன்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ற-4)

## யாழ்ப்பாணத்தில் உருவான சோதனைக்குழாய் குழந்தை

யாழ்ப்பாணம், ஜூலை 20

யாழ்.குடாநாட்டிலேயே உருவான முதலாவது பரிசோதனைக் குழாய் குழந்தை நேற்று யாழில் உள்ள நொதேர்ன் வைத்தியசாலையில் மூன்று வைத்தியர்களின் உதவியுடன் பிறந்துள்ளது.

வைத்திய கலாநிதிகளான சுரேஸ்குமார், அருள்மொழி.ஜானகி ஆகியோர் சத்திர சிகிச்சை மேற்கொண்டனர்.

தற்போதைய விஞ்ஞான வளர்ச்சிக்கமைய காலம் தாழ்த்திய மகப்பேற்றுத் தாய்மார்கள் பரிசோதனைக் குழாய்க் குழந்தையை பிரசவிக்கின்றமை வழமையாகி விட்டபோதும் இவ்வைத்திய வசதிகளுக்காக பெருந்தொகைப் பணச் செலவுடன் ஆரம்பகாலங்களில் இந்தியாவில் சிகிச்சை பெற்றார்கள். அதன்பிற்பாடு கடந்த 2003ஆம் ஆண்டு முதல் கொழும்பில் இச்சிகிச்சை வசதிகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்புக்கள் ஏற்பட்டன.

இருப்பினும் இச்சிகிச்சை முறையானது முதன் முதலில் தற்போது யாழ்.குடாநாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் முதலாவது ஆரோக்கியமான குழந்தை ஒன்று பிறந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-101)

## பிரிட்டனில் பந்து தாக்கி உயிரிழந்த பாவலனின் இறுதிக் கிரியை நேற்று

கரணவாய், ஜூலை 20

பிரிட்டனில் நடந்த உள்ளூர் கிரிக்கெற் சுற்றுப் போட்டியில் பந்து தாக்கி உயிரிழந்த பருத்தித்துறைப் பகுதியைச் சேர்ந்த பாவலனின் உடல் பல்லாயிரக்கணக்கான மக்களின் கண்ணீருடன் நேற்றுத் தீயுடன் சங்கமமாகியது.

கடந்த 5 ஆம் திகதி பிரிட்டன் தமிழர் கிரிக்கெற் சம்மேளனத்தின் ஆட்டம் ஒன்றில் பிரிட்டனில் உள்ள மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக் கழகத்தின் சகல துறை ஆட்டக் காரரும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவனுமான பத்மநாதன் பாவலன் (வயது - 24) பந்து தாக்கி உயிரிழந்தார்.

அவரது புதவுடல் அவரது சொந்த இடமான பருத்தித்துறைக்கு எடுத்து வரப்பட்டு இறுதி அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன. அதில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், கிரிக்கெற் வீரர்கள், மற்றும் அரசியல்வாதிகள் பொதுமக்கள் என பல்லாயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர்.

அன்னாரது இல்லத்தில் மருதங்கேணி கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.திரவியராசா தலைமையில் இடம்பெற்ற இறுதி அஞ்சலியில் தமிழரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் வேட்பாளருமான மாவை சேனாதிராசா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஏ.சுமந்திரன், வி.ஆனந்தசங்கரி, எஸ் .சந்திரகுமார், செ.கஜேந்திரன், வட மாகாண கல்விபண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சர் த.குருகுலராசா மற்றும் மாகாண சபை உறுப்பினர்களான எம்.கே. சிவாஜிலிங்கம், எஸ்.ஆர்னல்ட் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.

இறுதியில் கிரிக்கெற் வீரர்கள் கிரிக்கெற் மட்டைகளை கோபுரமாக உயர்த்திப் பிடித்தவாறு அஞ்சலி செலுத்த பூதவுடல் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு பருத்தித்துறை சுப்பர்மடம் இந்து மயானத்தில் தீயுடன் சங்கமமாகியது. (ற-108)

## கோப்பாய் பிரதேசத்தில் மீன் சந்தை அமைக்க கோரிக்கை

யாழ்ப்பாணம்,மே 15

கோப்பாய் பிரதேசத்தில் மீன் சந்தை வசதி இன்றி பொதுமக்களும் மற்றும் மீன்வியாபாரிகளும் சிரமப்பட்டு வருகின்றனர்.

மீன்களை வைத்து விற்பதற்குரிய விற்பனை நிலையம் இன்றி மீன் வியாபாரிகள் வீதியோரமாக அவற்றை விற்பனை செய்து வருகின்றனர்.

கோப்பாய் கைதடி வீதியில் மினக் கட்டான் வேம்படி பகுதியில் வைத்தே வியாபாரிகள் இந்த மீன்களை விற்பனை செய்து வருகின்றனர்.

மக்கள் மற்றும் வியாபாரிகளின் சிரமத்தைப் போக்க இந்தப் பிரதேசத்தில் சந்தைக் கட்டடம் ஒன்றை அமைக்க வலி.கிழக்கு பிரதேச சபை உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (17)

## தமிழரசுக் கட்சியின் தேர்தல் தொகுதி அலுவலகம் திறப்பு



தென்மராட்சி, ஜூலை 20

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சாவகச்சேரித் தொகுதி தேர்தல் பரப்புரை அலுவலகம் நேற்று சாவகச்சேரி நுணாவில் மத்தியில் திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் கலந்துகொண்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழ் அரசுக் கட்சித் தலைவருமான மாவை சேனாதிராசா கட்சி அலுவலகத்தை நாடாவை வெட்டி திறந்து வைத்தார்.

நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் வேட்பாளருமான ஈ.சரவணபவன், வட மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் உறுப்பினர்களான கேசவன், சயந்தன் பா.கஜதீபன், ஆர்னோல்ட் மற்றம் கட்சிப் பிரமுகர்கள் சாவகச்சேரி நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை, சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் சி.துரைராஜா உட்பட நகரசபை பிரதேச சபை உறுப்பினர்களும், ஆதரவாளர்களும் கலந்து கொண்டனர்.

சாவகச்சேரி நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தமிழ் அரசுக் கட்சியின் சாவகச்சேரி தொகுதி வேட்பாளர் க.அருந்தவபாலன் மற்றும் மாவை சேனாதிராசா, ஈ.சரவணபவன், வட மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் உறுப்பினர்களான கே.சயந்தன், பா.கஜதீபன், ஆர்னோல்ட் உட்பட பலர் உரையாற்றினர். (ற-9,131)

## காரில் வந்திறங்கி கஞ்சா நுகர்ந்தவருக்கு ஒரு மாத சிறை



யாழ்ப்பாணம், ஜூலை 20
கஞ்சா சுருட்டினை நுகர்ந்த தென்பகுதி நபருக்கு ஊர்காவற்றுறை நீதிமன்று ஒரு மாத சிறைத் தண்டனை விதித்தது. 10 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

சாட்டி கடற்கரையில் 3 பேருடன் காரில் வந்திறங்கிய குறித்த நபர் அந்த இடத்தில் வைத்துக் கஞ்சா போதைப் பொருளை நுகர்ந்துள்ளார். அதனால் அவர் உள்ளிட்ட 4 பேரும் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்திருந்தனர். எனினும் கஞ்சா போதைப் பொருளை நுகர்ந்தவருக்கு எதிராக மட்டுமே நீதிமன்றில் பொலிஸார் வழக்குத் தொடுக்க முடிந்தது. ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு வந்தபோது தென்பகுதியைச் சேர்ந்த புஸ்பகுமார என்ற குறித்த நபர் தன் மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டார். அதனையடுத்து அவருக்கு ஒரு மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அவர் தற்போது சிறைச்சாலையில் தண்டனை அனுபவித்து வருகிறார்.

வடக்கில் தற்போது போதைப் பொருள் பாவனை அதிகரித்துள்ள நிலையில் அது தொடர்பில் சட்டத்தை இறுக்கமான முறையில் நடைமுறைப்படுத்த கோரியிருந்த நிலையிலும் போதைப் பொருள் பாவனை தொடர்கின்றது.(ற-4)

# 271 ஆக உயர்ந்தது தேர்தல் விதி மீறல்

### 20 வன்முறைச் சம்பவங்களும் பதிவு

யாழ்ப்பாணம், ஜூலை 20
பொதுத் தேர்தல் தொடர்பில் தேர்தல்கள் செயலகத்துக்குக் கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை 271ஆக அதிகரித்துள்ளது. தேர்தல் வன்முறை தொடர்பில் மாத்திரம் 20 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக கபே தெரிவித்துள்ளது.

சட்டவிரோதமாக வழங்கப்பட்ட நியமனங்கள், பதவி உயர்வுகள் மற்றும் இடமாற்றங்கள் தொடர்பில் அதிகப்படியாக 110 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

இதனைத் தவிர சுவரொட்டிகள் மற்றும் பதாகைகள் காட்சிப்படுத் தப்பட்டமை குறித்தும் 35 முறைப் பாடுகள் கிடைத்துள்ளதாக தேர்தல்கள் செயலகத்தின் முறைப்பாட்டுப் பணியகம் தெரிவித்துள்ளது.

பொருள்கள் விநியோகிக்கப்பட்டமை தொடர்பில் 39 முறைப் பாடுகளும் அரச சொத்துக்களை தவறான முறையில் பயன்படுத்தியமை தொடர்பில் 35 முறைப்பாடுகளும் தேர்தல்கள் செயலகத்திற்கு கிடைத்துள்ளன அரச ஊழியர்கள் தேர்தல் பரப்புரைக்குப் பயன்படுத்தப்படுவதாகவும் ஏழு முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அதிகபடியான தேர்தல் முறைப்பாடுகள் கொழும்பு மாவட்டத்தில் 36 ஆகப் பதிவாகியுள்ளதாகவும் தேர்தல்கள் செயலகத்தின் முறைப் பாட்டு பணியகம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, கபே அமைப்புக்கு இதுவரை 261 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் தேர்தல் விதிமுறை மீறல்கள் தொடர்பில் 241 முறைப்பாடுகளும் தேர்தலுடன் தொடர்புடைய வன்முறைகள் தொடர்பில் 20 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன என்று கபே தெரிவித்துள்ளது.

அதில் ஒரு கொலையும் சட்டவிரோத தேர்தல் செயற்பாடுகள் தொடர்பில் 11 முறைப்பாடுகளும் அடித்துக் காயப்படுத்தியமை, அச்சுறுத்தல் விடுத்தமை தொடர்பில் 8 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன என்றும் கபே அமைப்புத் தெரிவித்துள்ளது. (ற-4)

## உள்ளூராட்சி உதவியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்குமாறு கடிதம்

### வடமாகாண உள்ளூராட்சி மற்றும் முதலமைச்சரின் செயலாளர் அனுப்பினார்

மானிப்பாய், ஜூலை 20
பட்டதாரி பயிலுநர் திட்டத்தின் கீழ் 1999இல் வடக்கு, கிழக்கில் உள்வாங்கப்பட்ட உள்ளூராட்சி உதவியாளர்களுக்கு 16.05.2004 முதல் செயற்படும் படியாக வகுப்பு II க்கு பதவி உயர்வு வழங்க வேண்டும் என்று வடமாகாண உள்ளூராட்சி மற்றும் முதலமைச்சரின் செயலாளர் கடிதம் மூலம் கோரியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

பட்டதாரி பயிலுநர் நியமனத் திட்டத்தின் கீழ் 1999 ஆம் ஆண்டு உள்வாங்கப்பட்ட பட்டதாரி நியமனங்களில் உள்ளூராட்சி உதவியாளர் பதவியும் அடங்குகின்றது. இந்தப் பதவிக்கான நியமனமானது மாகாண சபையால் வழங்கப் பட்டது.

எனினும் தற்போது கிழக்கு மாகாண சபையில் இவர்களோடு நியமனம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு 16.05.1999 திகதி முதல் செயற்படும் வண்ணம் வடக்கு கிழக்கு கௌரவ ஆளுநரால் அங்கீகரிக்கப்பட்ட மேற்படி சேவைக் குரிய சேவை பிரமாணக்குறிப்பின் பிரகாரம் வகுப்பு II க்கு 20040516 திகதி முதல் பதவி உயர்வு வழங்கப் பட்டுள்ளது.

எனினும் ஒரே நியமன அதிகாரியினால் நியமனம் வழங்கப்பட்டு தற்போது வடமாகாணத்தில் கடமையாற்றும் மேற்படி பதவியை வகிக்கும் உள்ளூராட்சி உதவியாளர்கள் பதவி உயர்வின்றி நியமன தரத்தில் கடமையாற்றி வருகின்றனர்.

மேலும் 1999.05.16 முதல் பட்டதாரி பயிலுநராக சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களினது நியமனத்திகதியானது பயிலுநராக கடமையாற்றிய காலத்தையும் சேர்த்து 1999.5.16 திகதியாக முற்திகதியிடப்பட்ட போதும், வடமாகாணத்தில் கடமையாற்றும் உளளூராட்சி உதவியாளர்களின் நியமனத் திகதியானது முற்திகதியிடப்படாது உள்ளது.

ஆனால் கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றும் உள்ளூராட்சி உதவியாளருக்கு நியமனத் திகதி முற்திகதியிடப்பட்டே பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

இந்தச் சேவை தொடர்பில் 16.5.1999 திகதியிடப்பட்ட சேவை பிரமாணக் குறிப்புக்குப் பின்னர் 16.5.2000 திகதி முதல் நடைமுறை ஆகும் வகையில் 20041001 திகதியில் பிறிதொரு சேவைப் பிரமாணக் குறிப்பு அவதானிக்கப்பட்டுள்ளது.- என்றுள்ளது. (ற-50)

# தெல்லிப்பழை சுகாதார தொண்டருக்கு நியமனம் வழங்க சட்டத்தில் இடமில்லை

### வடமாகாண சுகாதார அமைச்சு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 20
தெல்லிப்பழை வைத்தியசாலையில் நிரந்தரம் கோரும் சுகாதாரப் பணியாளர் விடயத்தில், சேவை வழங்கும் நிறுவனங்களின் சார்பில் பணிக்கு அமர்த்தப்பட்டவர்களை அரச சேவையில் நிரந்தரமாக நியமிப்பதற்கு எந்தவிதமான சட்ட ஏற்பாடுகளோ சுற்றறிக்கைகளோ இல்லை என்று வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் சி.திருவாகரன் தெரிவித்துள்ளார்.

தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிவந்த 32 சுகாதாரத் தொண்டர்கள், அவர்களது ஒப்பந்தகாலம் நிறைவடைந்துள்ளதாகத் தெரிவித்து பணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு அவர்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

இந்நிலையில் அதுபற்றித் தெளிவுபடுத்தி அனுப்பியுள்ள செய்திக் குறிப்பிலேயே செயலாளர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலைக்கு சுகாதார பணி உதவியாளர்களுக்கான அனுமதிக்கப்பட்ட 75 ஆளணியில் வெற்றிடங்கள் ஏற்பட்டிருந்ததைக் கருத்தில்கொண்டு குறிப்பிட்ட கடமைகளை நிறைவேற்றும் பணி தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்துக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதனடிப்படையில் தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்த தொழிலாளிகள் சிலர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் கடமைகளை நிறைவேற்றி, தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திடமிருந்து வேதனத்தைப் பெற்றுக்கொண்டுள்ளனர். இவர்கள் சுகாதார திணைக்களத்தினாலோ பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரினாலோ பணிக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் அல்ல. கடந்த மார்ச் மாதமளவில் அரச நிர்வாக சுற்றறிக்கையின்படி நிரந்தர நியமனம் செய்யப்பட்ட 57 இற்கும் மேற்பட்ட ஊழியர்கள் வைத்திய சாலையில் காணப்பட்ட 50 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நிரந்தரமாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதனடிப்படையில் ஏற்கனவே ஆளணிக்கு மேலதிகமாக ஊழியர்கள் நியமிக்கப்பட்டுள்ள நிலையில் தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினூடாக பெறப்பட்டு வந்த சேவை அவசியமற்றது என்ற அடிப்படையில் அதன் ஒப்பந்த காலம் கடந்த 30 ஆம் திகதி முடிவுறுத்தப்பட்டது.

குறித்த சில பணிகளை நிறைவேற்றும் பொருட்டு வெளிவாரி அடிப்படையில் சேவை பெறப்படும் பட்சத்தில் அந்த சேவை வழங்கும் நிறுவனங்களின் சார்பில் பணிக்கு அமர்த்தப்பட்டவர்களை அரச சேவையில் நிரந்தரமாக நியமிப்பதற்கு எவ்விதமான சட்ட ஏற்பாடுகளோ சுற்றறிக்கைகளோ இல்லை. - என்றுள்ளது. (ற-4)

## பஸ் தரிப்பு நிலையங்கள் அமைத்து தர கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 20
வலி.கிழக்கில் மேலும் மூன்று பஸ் தரிப்பு நிலையங்களை அமைத்துத் தருமாறு வலி.கிழக்கு பிரதேச சபை வடமாகாணசபையிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

மாசிவன் சந்தி, இருபாலைச் சந்தி, புத்தூர் சந்தி போன்ற இடங்களில் இந்த பஸ்தரிப்பு நிலையங்கள் இல்லாததால் பஸ்ஸுக்கு காத்து நிற்கும் மக்கள் சிரமப்பட்டு வருகின்றனர். இந்த நிலையில் மேற்படி மூன்று இடங்களில் இந்த பஸ்தரிப்பு நிலையங்களை அமைத்து தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேசமயம், இராஜவீதியில் கரந்தன் சந்தியில் பஸ்தரிப்பு நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது. வடமாகாண போக்குவரத்து அமைச்சு இந்த பஸ்தரிப்பு நிலையத்தை அமைத்து வருவதாக வலி. கிழக்கு பிரதேச சபையின் தலைவர் கே.துரைசிங்கம் தெரிவித்தார். இந்த பஸ்தரிப்பு நிலையம் விரைவில் திறந்து வைக்கப்படவும் உள்து.

அதேவேளை, நீர்வேலி பூதர்மடம் பகுதியில் பஸ்தரிப்பு நிலையம் இல்லாததால் மக்கள் சிரமப்பட்டு வருகின்றனர்.இந்தப் பகுதியிலும் பஸ்தரிப்பு நிலை யம் ஒன்றை அமைத்துத்தரவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-17)

## கசிப்பு காய்ச்சியவருக்கு மறியல்

தென்மராட்சி, ஜூலை 20
மட்டுவில் சந்திரபுரம் பகுதியில் கைது செய்யப்பட்ட கசிப்பு உற்பத்தியாளரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி பொலிஸாரால் மட்டுவில் சந்திரபுரம் பகுதியில் கசிப்ப உற்பத்தியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையில் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்ட நபர் நேற்றுமுன்தினம் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த நீதிவான் குறித்த நபரை எதிர்வரும் 30 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ற-9)

## சாவகச்சேரி மருத்துவமனை ஊழியருக்கு தியான பயிற்சி

தென்மராட்சி, ஜூலை 20
சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் ஊழியர்களுக்கு தியானப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

நோயாளர்களுடன் பழகும் மருத்துவமனை உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் பல நெருக்கடிகளுக்கு மத்தியில் பணியாற்றுவதால் அவர்கள் தம்மைத் தாமே ஆற்றுகைப்படுத்தும் வகையில் இந்தப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. அதில் மருத்துவமனையில் கடமையாற்றும் பெருமளவு உத்தியாகத்தர்கள் ஊழியர்கள் கலந்து கொள்கின்றனர்.

ஏற்கனவே விடுதி மற்றும் வெளிநோயாளர் பிரிவுகளில் சிகிச்சை பெறுவோருக்கு தியானப் பயிற்சிகள் வழங்கப்பட்டடு வருவதால் மருத்துவ மனை பொறுப்பதிகாரியின் வேண்டுகோளின் பிரகாரம் நேற்றுமுன்தினம் தொடக்கம் உத்தியோகத்தர் ஊழியர்களுக்கும் தியான பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப் பட்டது.(ற-9)

## உதவி முகாமையாளராக 4 ஆயிரம் பேர் நியமனம்

யாழ்ப்பாணம், ஜூலை 20
அரசஉதவிமுகாமையாளர்சேவைக்கு 4 ஆயிரம் பேரை இணைத்துக் கொள்வதற்கு அரசு தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்பட் டுள்ளது.

அவர்களைப் பல கட்டங்களின் கீழ் புதிய சேவையாளர்களை இணைத்துக் கொள்ளவுள்ளதாக அரச நிர்வாகம் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஜே.தடல்லகே தெரிவித்துள்ளார்.

அரச உதவி முகாமையாளர் சேவையாளருக்கான தேர்வு பரீட்சை பெறுபேறுகள் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளன. பெறுபேறுகளின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சை நடத்தவுள்ளதாகவும் அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார். நேர்முகப் பரீட்சைகள் அடுத்த மாதம் முதல்வாரத்தில் இடம்பெறும் எனவும் அரச நிர்வாக மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஜே.தடல்லகே தெரிவித்துள்ளார். எனினும் தற்போது தேர்தல் காலமாகையால் தேர்தல் நிறைவடைந்த கையுடன் அந்த நியமனங்கள் வழங்கப்படலாம் என்று கூறப்படுகிறது. (ற-4)

## பொதுச் சபை கூட்டம்

யாழ்ப்பாதணம், ஜூலை 20
இணுவில் மேற்கு விவசாய சம்மேளனத்தின் வருடாந்தப் பொதுச் சபைக்கூட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சம்மேளனத்தின் அலுவலகத்தில் எஸ்.இலகுநாதன் தலைமையில் இடம்பெறும்.

கூட்டத்தில் கடந்தகாலச் செயற்பாடு அபிவிருத்தி என்பன ஆராயப்பட்டு புதிய நிர்வாகத் தெரிவும் இடம் பெறும். (ற-17)

## வவுனியாவில் எழும்புக்கூடு மீட்பு

வவுனியா, ஜூலை 20

வவுனியா ஸ்ரீராமபுரம் மகாரம் பக்குளம் பகுதியில் மனித எலும்புக்கூடு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை அந்தப் பகுதியில் மக்கள் வசிக்கும் வீடுகளுக்கு அருகில் உள்ள காணியொன்றில் எழும்புக்கூடு இருப்பதை அவதானித்துள்ளனர் என்றும், அதுகுறித்து பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டதை அடுத்து பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து எலும்புக்கூட்டை மீட்டதுடன், விசாரணைகளையும் முன்னெடுத்தனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-402)





*கொழும்புத்துறை எழிலூர் கடற்கரை பகுதியில் கோவில் கொண்டுள்ள அன்னை வேளாங்கண்ணி ஆலய திருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை மிக சிறப்பாக இடம் பெற்றது. தொடர்த்து அன்னையின் செரூப பவனி இடம் பெற்று அன்னையின் சொரூப ஆசிவழங்கப்பட்டது. (ற-23)*

## மனித குல மேம்பாட்டுக்கான சமூகநல யாகம் இன்று

கரணவாய், ஜூலை 20

கரணவாய் மூத்த விநாயகர் கோவிலடி சுயம்பு அருள் மிகு மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம் அன்னையின் அருளாசியுடன் நடத்தும் இரண்டாவது சமூக நல யாகம் இன்று காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

மனித குல மேம்பாட்டுகும் உலக நலன் நாட்டு நலன் மற்றும் குடும்ப நலன் கருதி இடம்பெறும் இந்த யாகம் ஆன்மீக குரு அருள்திரு பங்காரு அடிகளாரின் அருளாசியுடன் நடைபெறவுள்ளது. (ற-108)

## மாணவியிடம் சேஷ்டை: இளைஞன் கைது



வவுனியா, ஜூலை 20

மாணவியுடன் பாலியல் ரீதியாக சேஷ்டை விட்ட இளைஞன் ஒருவர் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாலை கல்வி நிலையத்திற்கு சென்று வீடு திரும்பிக்கொண்டிருந்த மாணவியைத் தொட முற்பட்டார் என்றும் அதையடுத்து மாணவி கூக்குரலிட்டதை அடுத்து அயலவர்கள்கூடிஇளைஞரைபிடித்ததுடன்,பொலிஸாருக்கும் அறிவித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-402)

# அதிபர் நியமனங்களில் பாகுபாடு

## அதிபர்கள் தரப்பில் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 20

வடமாகாண கல்வி அமைச்சால் தரம் 1 அதிபர்கள் நியமனத்தில் பாகுபாடு காட்டப்படுகின்றது என்று அதிபர்கள் தரப்பில் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

வகை 1 ஏபி பாடசாலைகளில் இலங்கை அதிபர் சேவை தரம் 1ஐச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்பட வேண்டுமென கல்வி அமைச்சின் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. வடமாகாண கல்வி அமைச்சு வன்னிப் பிரதேச பாடசாலைகளில் அதனை நடைமுறைப்படுத்துகின்ற போதிலும் யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் அதனைப் புறக்கணித்து செயற்படுவதாக குற்றஞ்சாட்டப்படுகின்றது. அவ்வாறு பாதிக்கப்பட்ட அதிபர் ஒருவர் யாழ்ப்பாணத்தில் உள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிட்டுள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

அண்மையில் வெளியான இலங்கை அதிபர் சேவை தரம் ஒன்றுக்கு ஒவ்வொரு கல்வி வலயங்களிலிருந்தும் சில அதிபர்கள் தரமுயர்த்தப்பட்டனர். இதன் பின்னர் மாகாண கல்வி அமைச்சால் வெற்றிடமாக உள்ள வகை 1 ஏபி பாடசாலைகளுக்கென இலங்கை அதிபர் சேவை தரம் 1 அதிபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டன. இந்த விண்ணப்பங்களுக்கானநேர்முகப்பரீட்சை நடாத்தப்பட்ட பின்னர் ஒரு சில பாடசாலைகளுக்கு மட்டும் நியமனங்களை வழங்கி விட்டு சில பாடசாலைகளில் குறைந்த தகைமையுள்ள அதிபர்களை தொடர்ந்து கடமையாற்ற அனுமதித்துள்ளனர். இலங்கை அதிபர் சேவை தரம் 1 ஐச் சேர்ந்த அதிபர்களை வகை 1 சி மற்றும் வகை 11 பாடசாலைகளுக்கு நியமித்துள்ளனர். தகைமையுள்ள அதிபர்கள் இல்லாதவிடத்து அவ்வாறு நியமிப்பது ஏற்றுக் கொள்ளக் கூடியபோதிலும் தகைமையுள்ளவர்களை புறந்தள்ளும் செயற்பாடாக தரம் 1 அதிபர்களை வகை 1 சி வகை 2 பாடசாலைகளுக்கு நியமித்துவிட்டு அதிபர் சேவை 2:1. மற்றம் அதிபர் சேவை 2: 11 ஆகியவற்றைச் சேர்ந்தவர்களை வகை 1 ஏபி பாடசாலைகளில் தொடர்ந்து கடமையாற்ற அனுமதித்துள்ள தாகவும் குற்றஞ்சுமத்தப்பட்டுள் ளது.

சில வலயங்களில் தகைமையுள்ள அதிபர்கள் இருந்தபோதிலும் அவற்றுக்கு உரிய அதிபர்களை நியமிக்காமல் வெற்றிடமாக விட்டுள்ளதாகவும் குற்றஞ் சுமத்தியுள்ளனர். தகைமையுள்ள அதிபர்களை நியமிப்பதில் மாகாண கல்வி அமைச்சு எடுத்துள்ள நடவடிக்கையானது அந்தந்த வலயக் கல்விப் பணிப்பாளர்களின் கைப்பொம்மையான அமைச்சு மற்றும் மாகாணக் கல்வித்திணைக்கள அதிகாரிகள் செயற்படுகின்றனர் என்றும் குற்றஞ்சாட்டப் படுகின்றது. (ற-9)

## புட்கரிணி தீர்த்தக்கேணி ஆரம்ப நிகழ்வு

வடமராட்சி, ஜூலை 20

வடமராட்சி வதிரி பூவற்கரைப் பிள்ளையார் ஆலய புவற்கரையான் புட்கரிணி தீர்த்தக்கேணி ஆரம்ப நிகழ்வு இன்று 8.30 மணிமுதல் மு.ப.10 மணிவரை நடைபெறவுள்ளது.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் சி.பத்மராஜா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு விசேட விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர் வே.சிவயோகன், பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் சோ.கோகுலதாசன், சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி தெற்கு, மேற்குப் பிரதேச சபைத் தலைவர் பொ.வியாகேசு, கரவெட்டிப் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் செ.ரூபகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-422)

# தமிழரின் பாரம்பரிய காணிகளை சூறையிட அத்திபாரம் இட்டது ஐக்கிய தேசிய கட்சியே

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட வேட்பாளர் ஈ.சரவணபவன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 20

தமிழ் மக்களின் பாரம்பரிய காணிகளை சூறையிட அத்திபாரம் இட்டதே ஐக்கிய தேசியக் கட்சி தான். முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் ஆட்சியிலேயே தமிழ் மண்ணில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் மேற்கொள்ளப்பட்டது. இன்று அந்தக் காணிகளை மீளப்பெற நாம் பெரிய போராட்டங்களை நடத்த வேண்டி உள்ளது. ஐக்கிய தேசியக்கட்சி தமிழ் மக்களுக்குச் செய்ததுரோகத்தைதமிழ் மக்கள் மறந்துவிடவில்லை – இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை சரசாலை நித்தியா மன்றத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின்போதே இப்படிக் கூறினார். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நேற்று முன்தினம் வட்டுக்கோட்டை, வெற்றிலைக்கேணி பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர் அணி உறுப்பினர்கள் சமூக அமைப்புக்கள், மகளிர் அமைப்புக்கள் என்பவற்றின் உறுப்பினர்களையும் ஆதரவாளர்களையும் சந்தித்து உரையாடினார்.

இதன் ஒரு கட்டமாக சரசாலை வடக்கு நித்தியா மன்றம் ஏற்பாடு செய்திருந்த மக்கள் சந்திப்பு ஒன்றில் உரையாற்றிய ஈ.சரவணபவன் அங்கு மேலும் தெரிவித்ததாவது:–

2010 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலின் போது இராணுவ அடக்கு முறையினாலும், ஈ.பி.டி.பியினரதும் ஒட்டுக்குழுக்களினதும் அடாவடித்தனங்களினாலும் 38 சதவீதமானவர்கள் மட்டுமே வாக்களித்தனர். இதனாலேயே ஈ.பி.டி.பி.யின் மூவர் நாடாளுமன்றம் செல்ல நேரிட்டது. அதுவும் கூட அவர்களால் பணம் கொடுத்து வாங்கப்பட்ட 25 ஆயிரம்வாக்குகளின் மூலமே அந்த இடங்களைப் பிடித்தனர்.


இதனை நாம் நன்றாக மனதில் கொள்ள வேண்டும். மாகாண சபைத் தேர்தலின்போது வாக்களித்ததைப் போன்று அனைவரும் வாக்களிப்பதன் மூலம் தமிழ் மக்களை அடைவு வைத்து நாடாளுமன்றம் சென்றவர்களுள் ஒருவரைக் கூட வெற்றி பெறவிடாமல் அவர்களை வீட்டுக்கு அனுப்ப வேண்டும். அதனால் நாம் அனைவரும் அணி அணியாகச் சென்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வீட்டுச் சின்னத்துக்கே வாக்களிக்க வேண்டும்.

கடந்த காலங்களில் மஹிந்த ராஜபக்ஷவின் கொடுங்கோல் ஆட்சியில் இணக்க அரசியல் என்று கூறுபவர்களின் ஆதரவுடன் ஆயிரம் ஆயிரம் தமிழ் மக்கள் உயிருடன் புதைக்கப்பட்டனர். தீவகத்துக்குத் தேர்தல் பரப்புரைக்குச் சென்ற கூட்டமைப்பு உறுப்பினர்கள் இருவர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயம் அடைந்தனர். இதனைச் செய்தவர்கள் யார் என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவர்கள் உலகில் எந்த மூளையில் மறைந்து இருந்தாலும் சர்வதேச பொலிஸாரின் மூலம் இங்கு கொண்டுவரப்பட்டு தண்டனைக்கு உள்ளாக்கத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது.

படுகொலைகளைச் செய்தும் நாட்டின் தேசிய சொத்துக்களை சூறையாடி தீவைத்தும் நாசப்படுத்திய ஜே.வி.பி.யினருக்கு சிங்கள அரசு பொதுமன்னிப்பு வழங்கியது.

ஆனால், எந்தவிதமான கிரிமினல் சம்பவங்களிலும், பாரதூரமான குற்றச் செயல்களிலும் ஈடுபடாத தமிழர்கள் 25 வருடங்களுக்கு மேல் சிறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகத்தின் பேரில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் நம் உடன் பிறப்புக்கள் தம்மீது சுமத்தப்பட்ட அபாண்டமான குற்றச்சாட்டுக்களை ஒப்புக் கொண்டிருந்தாலும் ஆகக்கூடியதான ஏழுவருட சிறைத் தண்டனை முடித்து வீட்டுக்கு வந்திருப்பார்கள். ஆனால், அவர்கள்



உண்மை பேசுவதால் 15 முதல் 25 வருடங்கள் வரை சிறையில் வாடுகின்றனர்.

இவர்கள் அனைவருக்கும் விடுதலையைப் பெற்றுக் கொடுக்கவும் எம்மிடமிருந்து பலவந்தமாகப் பறிக்கப்பட்ட சொந்த மண்ணை மீட்டு எடுக்கவும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உள்ளார்ந்தமாகச் செயற்படுகின்றது. எந்த ஒரு சிங்கள அரசுமே தாமாக நமக்கு எதையும் செய்யப்போவதில்லை. எனவே சர்வதேச அமைப்புக்களின் ஆதரவுடன் பேரம் பேசும் வல்லமையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்க வேண்டும். அதனால் சிங்களக் கட்சிகளுக்கு காவடி தூக்குபவர்களை முற்றாக நிராகரிக்க வேண்டும்.

நமது இளைஞர்களை சிறையில் இருந்து மீட்க வேண்டும். சூறையாடப்பட்ட காணிகளை மீளப்பெற வேண்டும் என்ற நோக்கத்துடனேயே மைத்திரி பாலசிறிசேனவுக்கு ஆதரவளித்தோம். ஆனால் அவரது மந்தகதியான செயற்பாடும் திருப்தியாக இல்லை. சம்பூரில் நமது மக்களிடமிருந்து அபகரிக்கப்பட்ட காணிகளை மீளப்பெற நீதிமன்றத்தின் மூலம் பெறவேண்டியநிலை ஏற்பட்டது. அப்படியும் ஆயிரம் ஏக்கர் காணியை மட்டுமே பெற முடிந்தது. எமது முயற்சிகள் தொடரும். அதற்கு உங்களுடைய ஆதரவு அவசியம்.

ஐக்கிய தேசியக் கட்சியினர் கடந்த தேர்தலின்போது ஓர் ஆசனத்தைப் பெற்றதன் மூலம் இந்தமுறை மேலும் சில ஆசனங்களைப் பெற முடியும் என வியூகம் அமைக்க முனைகின்றனர். அவர்களது நம்பிக்கை விவேகமற்றதாகும். அவர்கள் செய்த துரோகச் செயல்களைத் தமிழ் மக்கள் மறந்துவிடவில்லை.

தமிழ் மக்களைத் தொடர்ந்தும் அடிமைப்படுத்தி வைத்து விடலாம் என்ற சிந்தனையுடன் செயற்படும் சிங்கள அரசுகளுடன் சர்வதேச இராஜதந்திரோபாயத்துடன் வென்றெடுக்கப் பேரம் பேசும் அதிகாரத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்க வேண்டும்.– என்றார். (ற)

# மஹிந்தவின் மீள் வருகை இனவாதத்தின் திரும்பல்

## சுயேச்சைக் குழுத் தலைவர் கணேஸ்வரன் சாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 20

மஹிந்தவின் மீள் வருகையானது இனவாதத்தின் வருகையாக இருக்கும். அத்துடன் அது பெரும் ஊழல் மோசடிக்கு வித்திடும்.

–இவ்வாறு தெரிவித்தார் சிவன் அறக்கட்டளையின் நிறுவுநரும் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் சுயேச்சைக் குழுவின் சார்பில் போட்டியிடுபவருமான கணேஸ்வரன் வேலாயுதம்.

தமிழ் மக்கள் நிதானமாகச் சிந்தித்து இம்முறை தங்களுடைய வாக்குகளை அளிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து சிவன் பவுண்டேசன் அமைப்பினர் சுயேச்சைக் குழுவாகப் போட்டியிடுகின்றனர். மாற்றுவலுவுள்ளோர் மற்றும் விசேட தேவையுடையோர் தொடர்பில் இலங்கை முழுவதிலும் பெரும் தொண்டாற்றி வருகின்றது சிவன் அறக்கட்டளை. மாற்றுத் திறனாளிகளுக்கென கண்டியில் தனியான பாடசாலை ஒன்றையும் நடத்தி வருகின்றது. மூவினத்தையும் சேர்ந்தவர்கள் இந்தப் பாடசாலை மூலம் பயன்பெற்று வருகின்றார்கள்.

மக்கள் சேவையின் அடுத்த கட்டமாக தேர்தலில் போட்டியிடுவது என்றும் சிவன் அறக்கட்டளையின் தலைவர் கணேஸ்வரன் முடிவு வெடுத்தார். சுயேச்சைக்குழுவாக அவர் தலைமையில் 10 வேட்பாளர்கள் யாழ்ப்பாணத்தில் களம் இறங்கியுள்ளனர்.

"புதிய அரசியல் கலாசாரம் ஒன்றை தோற்றுவிக்க வேண்டும்" என்பதே தமது இலக்கு என்று அவர்கள் கூறுகின்றனர். கேடயம் சின்னத்தில் அவர்கள் போட்டியிடுகின்றனர்.

தனது ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றிய போதே அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இலங்கையின் போர் முடிவுற்று ஆறு ஆண்டுகள் கடந்து விட்டன. ஆனால் புதிய ஆட்சியில்தான் இந்த மக்கள் ஓரளவு நிம்மதிப் பெருமூச்சுவிடும் நிலைக்குத் திரும்பியிருந்தனர். ஆனாலும் போரின் வடுக்களிலே தமிழர்கள் இன்னமும் தாங்கியிருக்கின்றார்கள். இவற்றைப் போக்குவதற்கு ஆறு மாத கால ஆட்சியில் பல்வேறு முயற்சி முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. ஆனாலும் எந்த மாற்றமும் நடைபெறவில்லை. கடந்த கால ஆட்சியாளர்கள் இந்த மக்களை நிரந்தரமாக அடக்கி ஆளும் நடவடிக்கைகளையே முன்னெடுத்து வந்துள்ளர்கள். இந்தப் போரை வைத்தே கடந்த கால அரசு ஆட்சி செய்தது. நிரந்தரமாக தமிழர்களை அடக்கி ஆளுவதன் மூலம் அவர்களுடைய ஆட்சியைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லமுடியும் என்ற அமைப்பிலே கடந்த கால ஆட்சிகள் காட்சிகளாக மாறியிருந்தன. ஆனாலும் ஜனவரி எட்டாம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் மூலம் கடந்த கால ஆட்சிக்கு இந்த நாட்டு மக்களால் தகுந்த பாடம் புகட்டப்பட்டது. புதிய ஜனாதிபதியை நம்பி இந்த நாட்டிலுள்ள 62 லட்சம் பேர் வாக்களித்தார்கள். நாட்டில் புதிய அரசியல் கலாசாரம் தோற்றுவிக்கப்படவேண்டும் எனக் கூறிக் கொண்டு புதிய ஜனாதிபதி மீண்டும் திருட்டுக் கும்பலுக்கு நாட்டை தாரை வார்த்துக் கொடுப்பதற்காக பொதுத் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ போட்டியிட அனுமதி வழங்கியமை இந்த நாட்டுக்கும், இந்த நாட்டு மக்களுக்கும் அவர் இழைத்த துரோகமாகும்.

இந்தச் செய்தி இந்ந நாட்டு வரலாற்றில் கசப்பான செய்தியாக எழுதப் படவுள்ளது. அதேவேளை இந்த நாட்டில் சிங்களத் தலைவர்களை எவரையுமே நம்ப முடியாது என்ற நிலையையும் உறுதி செய்துள்ளது. மீண்டும் மஹிந்த இந்த நாட்டு மக்களுடைய குருதியை உறிஞ்சிக் குடிக்கும் நோக்கோடு தேர்தல் களம் புகுந்துள்ளார். திருட்டுக் கும்பலுடன் இனவாதக் கோஷத்துடன் வரும் இவரை மீண்டும் தோல்வியுற்றுச் செய்யும் வகையில் மக்களுடைய வாக்குகள் சரியான முறையில் பயன்படுத்தப்பட வேண்டும்.

தான் சிறுபான்மையின மக்களால் தோற்கடிக்கப்பட்டேன் என்று மஹிந்த ராஜபக்ஷ அடிக்கடி முன்வைத்த கோஷம்கூட சிங்கள மக்கள் மத்தியில் இனவாத்தை தூண்டக் கூடிய வகையிலேதான் அமைந்திருந்தது. அப்பொழுது இருந்தே இவர் மீண்டும் அரசியலுக்குள் வருவர் என அனுமானிக்க முடிந்தது. இவரது வரவினால் இந்தத் தேர்தலில் பெரும் மாற்றம் எதுவும் நடக்கப்போவதில்லை. என்றாலும் மக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும்.

இதேவேளை – எமது அமைப்பு இந்த நாட்டில் ஒரு புதிய அரசியல் கலாசாரத்தை தோற்றுவிக்கப் பாடுபடுகிறது. குடாநாட்டில் முகாம்களில் அல்லலுற்று துன்பட்டு கொண்டு வாழும் மக்களுக்காக தொடர்ச்சி யான மனிதாபிமான உதவிகளைச் செய்வதற்கு நாங்கள் முன்வந்தோம். ஆனால் அரசியல் புதிய மாற்றங்களைக் காணும் போதும் நம்பிக்கையற்ற அரசியல் தலைவர்கள் இந்த நாட்டில் இருக்கும் வரையிலும் எதையும் மனச் சந்தோஷத்துடன் திருப்திகரமாக செய்ய முடியவில்லை. எனவேதான் அரசியலுக்குள் நேரடியாக வரவேண்டியிருக்கிறது. முழு நாட்டை ஒரு தலை சிறந்த நாடாக மாற்றியமைப்பதற் காகவே எமது சுயேச்சைக் குழு கேடயச் சின்னத்தில் போட்டியிடுகிறது.

இந்த மாவட்டத்தில் எங்களுடைய சுயேச்சைக் குழு யாரும் எதிர் பார்த்திருக்க முடியாதளவுக்குப் பெரும் வெற்றயை ஈட்டும் என உறுதியாகத் தொவித்துக் கொள்கின்றேன்– என்றார்.

# மைத்திரியின் அரசியல் ஞானம் அவரது உரையில் தெரிகின்றது

## நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ கூறுகின்றார்



கொழும்பு, ஜூலை 20

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை துரோகி என்றும் கட்சியை காட்டிக்கொடுத்தவர் என்றும் சிலர் குற்றஞ்சுமத்தி வந்தாலும், அவர் அரசியல் ஞானத்துடன் தெளிவாக செயற்பட்டு வருகின்றார் என்பதை அவரது உரை மூலம் உணரக்கூடியதாக உள்ளதாக நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலை அடுத்து ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியமைத்தால் நாட்டுக்கு பெரியளவான வெளிநாட்டு முதலீடுகள் கிடைக்குமெனவும் அவர் தெரிவித்தார்.

கடந்த ஆறு மாத காலமாக வெளிநாட்டு முதலீடுகளில் வீழ்ச்சி ஏற்படக் காரணம், இலங்கையின் ஸ்திரமற்ற ஆட்சி நிலையே யாகுமென தெரிவித்த அவர், தேர்தலின் பின்னர் இந்த நிலையில் மாற்றம் ஏற்படுமென தெரிவித்துள்ளார்.

இதேவேளை–கடந்த ஆட்சிக்காலத்தில் வெளிநாடுகளில் பதுக்கிவைக்கப்பட்டுள்ள பணம் தொடர்பில் தற்போது விசாரணை நடைபெற்று வரும் நிலையில், விரைவில் குறித்த பணம் நாட்டுக்கு கொண்டுவரப்படும் எனவும் தெரிவித்தார். (ற)

# மஹிந்த ஒரு விஷப்பாம்பு ரணில் ஒரு நச்சுப் பாம்பு

## வடமாகாண சபை உறுப்பினரான கஜதீபன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 20

மஹிந்த ஒரு விஷப்பாம்பு என்றால் ரணில் பூஞ்சோலைக்குள் மறைந்திருக்கும் ஒரு நச்சுப் பாம்பு. இதைத் தமிழ் மக்கள் நன்கு அறிவார்கள். எவருமே எமது உரிமைகளைத் தாம்பாளத்தில் வைத்துத் தரப்போவதில்லை. பேரம் பேசி வென்றெடுக்கும் சக்தியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்க வேண்டும். இது தன்மானமிக்க தமிழர்களின் கட்டாய கடமையாகும் என்கிறார் வட மாகாண சபை உறுப்பினரான பா.கஜதீபன்.

நேற்றுமுன்தினம் சரசாலையில் முன்னாள் யாழ். மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவனுக்கு ஆதரவு திரட்டும் மக்கள் சந்திப்பின்போதே கஜதீபன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சரசாலை நித்தியா மன்றத்தின் தலைவி திருமதி கமலேஸ்வரி ஞானச்சந்திரன் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் மாகாண சபை உறுப்பினர் கஜதீபன் தொடர்ந்து உரையாற்றும்போது தெரிவித்ததாவது:–

நானும் ஒரு தமிழ் பெண் என்று கூறிக்கொண்டு ஒரு சிங்களக் கட்சிக்கு வாக்குக் கேட்கும் ஒருவர் நம்மை அழித்தவர்களை அழித்து விடுங்கள் என்று முதலைக் கண்ணீர் வடிக்கின்றார். எம்மை அழித்தவர்கள் யார்? தென்கிழக்காசியாவிலேயே தனித்துவம் மிக்கதாக விளங்கிய யாழ்.நூலகத்தை தீ வைத்து கொளுத்தியது யார்? 1983ஆம்ஆண்டில்இனக்கலவரத்தை ஏற்படுத்தி ஆயிரம் ஆயிரமாக உயிருடன் எரித்தும் கோடி கோடியாக தமிழர்களின் உடைமைகளைச் சூறையாடியும் அழித்தும் தரைமட்டமாக்கியது யாருடைய ஆட்சியில் என்பதை இவர் மறந்து விட்டாலும் மக்கள் மறந்து விடவில்லை.

மஹிந்தவின் ஆட்சியில் 60 வீதமான தமிழ் மக்கள் அழிக்கப்பட்டனர். 40 வீதமானவர்கள் அழிக்கப்பட்டது. இந்த ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் தான். இப்பொழுது நம்மை அழித்தவர்களை நாம் அழிக்க வேண்டும். எனக் கூறிக்கொண்டு யானையின் வாலைப் பிடித்துக் கொண்டு வந்து நம்மிடம் வாக்கு கேட்கின்றார். இவருக்கு நாம் நல்ல பாடம் புகட்ட வேண்டும். சிங்களக் கட்சிகளுக்கு வக்காலத்து வாங்குபவர்கள் நமக்கு வேண்டாம். இந்த அம்மையார் கூறியது போல நம்மை அழித்தவர்களை நாம் இல்லாதொழிக்க வேண்டும்.

நமது தமிழ் மண்ணில் 11 அரசியல் கட்சிகளும் 6 சுயேச்சை குழுக்களும் களத்தில் இறங்கி உள்ளன. இவற்றின் மூலம் 170 பேர் போட்டியிடுகின்றனர்.

தமிழ் தேசிய கூட்டமைப்பைத் தவிர அனைவரும் தோல்வியடைவார்கள் என்பது அவர்களுக்கே தெரியும். ஆனால் இவர்கள் வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் போட்டியிடவில்லை. தமிழ் தேசியக் கூட்டமைப்பை தோல்வியடையச் செய்ய வேண்டும் என்ற குரோதத்துடனேயே போட்டியிடுகின்றனர். இதனை மக்கள் நன்கு அடையாளம் கண்டு கொண்டனர்.

நம்மை அடைவு வைத்து இந்த இனவாத அரசில் 18 வருடங்கள் அமைச்சராக இருந்தவர். இணக்க அரசியல் என்று கூறிக் கொண்டு மஹிந்தவுக்கு காவடி தூக்கியவர். இப்பொழுது நானும் தமிழன்தான் என வீணையைத் தூக்கிக் கொண்டு வருகின்றார். இந்த 18 வருடங்களில் சுகம் அனுபவித்தவர் தமிழ் மக்களுக்காக எதையுமே செய்யவில்லை.

மாகாண சபையில் துரதிர்ஷ்ட வசமாக ஒரே ஒரு இடத்தைப் பெற்ற இவர்கள் இன்று அதையும் இழந்து ஒன்றும் இல்லாமல் நிற்கின்றனர். அதேபோன்று இந்த முறை நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தலில் ஒன்றைக் கூட பெற விடக்கூடாது.

அன்றும்– இன்றும் –என்றும் – தமிழ் மக்களுக்காகவும், தமிழ் மண் ணுக்காகவும் அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒன்றுதான். அதனைச் சர்வதேசம் அறியும் வகையில் கொண்டு சென்றது உதயன் ஊடகம் தான். அதன் நிறுவுநர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன். மக்கள் சேவைக்காக தன்னை அர்ப்பணித்துச் செயற்படுபவர். அவரை வெற்றி பெறச் செய்யவேண்டியது தமிழ் மக்களின் கடமை. எனவே அனைவரும் ஒட்டுமொத்தமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வீட்டுச் சின்னத்துக்கு வாக்களித்து அமோக வெற்றி பெறச் செய்யவேண்டும். அதில் சரவணபவனை மீண்டும் நாடாளுமன்றத்துக்கு அனுப்ப வேண்டும். அவருக்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும். – என்றார்.

# நீதியான தேர்தல் நடக்க இறைவனை வேண்டுக


## ஜம்இய்யதுல் உலமா தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 20

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் முஸ்லிம் சமூகத்துக்கும், நாட்டுக்கும் பொருத்தமான தேர்தலாக அமைய வேண்டி இறைவனிடம் பிரார்த்திக்குமாறு அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா வின் தலைவர் அஷ்ஷெய்க் எம்.ஐ. எம்.றிஸ்வி முப்தி கோரிக்கை விடுத்தார்.

கொழும்பு பெரிய பள்ளிவாசலில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற புனித ஷவ்வால் மாத தலைப்பிறையை தீர்மானிக்கும் மாநாட்டின் பின்னர் தேர்தல் தொடர்பில் கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இறைவனிடம் துஆ செய்துவிட்டே இந்தத் தேர்தலில் வாக்களியுங்கள். இலங்கை வாழ் முஸ்லிம்கள் எப்போதும் ஏனைய மதத்தவர்களுக்கு முன்மாதிரியானவர் களாக நடந்துகொள்ள வேண்டும். முஸ்லிம்கள் சண்டை சச்சரவுகளில் ஈடுபடாது ஒற்றுமையானவர் களாக எப்போதும் செயற்பட வேண்டும். இந்த ஒற்றுமை–வீடு,குடும்பம்,பள்ளிவாசல்கள் மற்றும் அமைப்புக்கள் எனஅனைத்து இடங்களிலும் காணப்பட வேண்டும்– என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ற–10)



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** குடும்பத்தினர் நலன் சிறக்கப் பாடுபடுவீர்கள். தொழில், வியாபாரம், வளர்ச்சி பெறும். நிலுவைப் பணம் கிடைக்கும். சேமிக்க வாய்ப்புண்டு. புத்திரர் விரும்பியதை வாங்கித் தருவீர்கள்.

**இடபம்:** குடும்பப் பிரச்சினையைப் பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சி உண்டாகும். திடீர் செலவுக்காகக், கடன் வாங்க நேரிடும். வாகனப் போக்குவரத்தில் கவனம் தேவை.

**மிதுனம்:** நண்பரின் ஆலோசனையால் முன்னேறு வீர்கள். தொழில், வியாபாரத்தில், இலாபம் அதிகரிக்கும். ஆதாய நோக்கில் வெளியூர் பயணம் செல்ல நேரிடும். பிள்ளைகளின் செயற்பாடு மகிழ்ச்சி தரும்.

**கடகம்:** ஆர்வம் நிறைந்த மனதுடன் செயற்படுவீர்கள். கடந்த கால உழைப்புக்கான நன்மை சேரும். தொழில், வியாபாரத்தில், அதிக இலாபம் கிடைக்கும். புத்திரரின் எதிர்காலம் குறித்து சிந்திப்பீர்கள்.

**சிங்கம்:** மன உறுதியுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரம், சீரான வளர்ச்சி பெறும். குடும்பத்தினருக்காக மருத்துவச் செலவு செய்ய நேரிடும். மாணவர்கள் ஆர்வமுடன் படித்து முன்னேறுவர்.

**கன்னி:** மனதில் உற்சாகம் நிறைந்திருக்கும். உறவினர்களுக்கு உதவி செய்வீர்கள். தொழிலில் பணவரவு அதிகரிக்கும். வீடு, வாகன வகையில் பராமரிப்புப் பணி செய்வீர்கள். உடல்நலனில் கவனம் தேவை.

**துலாம்:** பணியில் குளறுபடி ஏற்படலாம். விழிப்புடன் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில், சுமாரான இலாபம் கிடைக்கும். காலமுறை உணவுப் பழக்கம் உடல் நலனைப் பாதுகாக்க உதவும்.

**விருச்சிகம்:** தொழில், வியாபாரத்தில், வளர்ச்சி பெறப் புதிய திட்டம் தீட்டுவீர்கள். விடாமுயற்சியால் வருமானம் கூடும். இயன்ற அளவில் தானதர்மம் செய்வீர்கள்.


**தனுசு:** சமயோசிதமாகச் செயற்படுவீர்கள். எதிரித் தொல்லை நீங்கும். தொழில், வியாபாரத்தில், திட்டமிட்ட இலக்கை அடைவீர்கள். வீட்டுக்குத் தேவையான பொருள் வாங்குவீர்கள். நண்பர்கள் உதவி செய்வர்.

**மகரம்:** பொது இடத்தில் விவாதிப்பதைத் தவிர்க்கவும். தொழில், வியாபாரத்தில், ஆதாயம் காண்பீர்கள். ஆடம்பரச் செலவைத் தவிர்ப்பது நல்லது. அரசியல்வாதிகள் எதிர்பார்த்த பதவி கிடைக்கும்.

**கும்பம்:** எதிலும் அமைதி காப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில், சுமாரான இலாபம் கிடைக்கும். உடல்நலனில் அக்கறை ஏற்படும். பணியாளர் பாதுகாப்பு நடைமுறையில் கவனம் செலுத்தவும்.

**மீனம்:** பொறுப்புணர்வுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில், நல்ல வளர்ச்சி உண்டாகும். சேமிப்பு உயரும். நீண்ட நாள் பிரச்சினை, நல்ல முடிவுக்கு வரும். மனைவியால் பெருமை உண்டாகும்.

## சாவை நினைவூட்டிய திருமணத் தம்பதிகள்





தமது திருமண ஒளிப்படங்கள் மங்கலகரமாக இருக்க வேண்டும் எனத் திருமண பந்தத்தில் இணையும் ஜோடிகள் விரும்புவது வழமை. ஆனால் பிரேதச் சடங்குகளுக்கான ஏற்பாடுகளை வழங்குபவர்களாக பணியாற்றும் ஜென்னி டாய் மற்றும் தரென் செங் ஆகியோர் தமது திருமண ஒளிப்படங்களை பிரேதபெட்டியொன்றினுள் அமர்ந்தும் அதற்கு அருகில் நின்றும் படம் எடுத்துள்ளனர்.

இந்த ஒளிப்படங்கள் சிங்கப்பூரில் புங்கொல் நகரிலுள்ள பூங்கா ஒன்றில் எடுக்கப்பட்டுள்ளது.

மக்கள் வாழ்க்கையின் அங்கமாகவுள்ள சாவு குறித்து சௌகரியமாக உணர வேண்டும் என்று தாம் விரும்புவதாக ஜென்னியும் தரெனும் தெரிவித்துள்ளனர்.

## ரிலாக்ஸா வாசியுங்க...

1. அடுத்தவர்கள் குடும்பத்தை எப்படி கெடுப்பது,
2. அன்னியர்கள் சொத்தை எப்படி அபகரிப்பது,
3. மாமியாரை எப்படி வீட்டை விட்டு வெளியேற்றுவது,
4. மருமகளை எப்படி மகனிடம் இருந்து பிரிப்பது,
5. பெற்றோருக்கு தெரியாமல் எப்படியெல்லாம் தவறு செய்யலாம்
6. அதை எப்படியெல்லாம் மறைக்கலாம்,
7. அக்கம் பக்கம் பக்கத்தினர் உடன் எப்படியெல்லாம் புறம் பேசலாம்,
8. கணவருக்கு எப்படி அடங்காமல் நடக்கலாம்,
9. மனைவியை எப்படி அடிமை படுத்தலாம்,
10. எல்லோரையும் எப்படி பழிக்குப்பழி வாங்கலாம். கொலை, கொள்ளை, ஏமாற்றம், அபகரிப்பு, ஆள் கடத்தல், வஞ்சகம், கள்ளக் காதல், கூட்டி கொடுத்தல் என்று எல்லாத்தையும் அழகாகத் தெளிவாக சொல்லி தருவதுதான் நாடகம் (சீரியல்) மு.ப. 10 மணியிலிருந்து இரவு 11 மணிவரை இந்த சீரியலுக்கு அடிமையாகி பல பெண்கள் இருக்கி றாங்க. குடும்பத்தில் வரும் பிரச்சனைக்கு 70 சதவீதம் இந்த சீரியல் தான்.. முடிந்தவரை சீரியல் பார்ப்பதை தவிர்த்து கொள்ளுங்கள்.

## வசூலிக்கின்றது பாகுபலி

தெலுங்கு திரைப்பட உலகின் பிரபல இயக்குநர் எஸ்.எஸ். ராஜமௌலி இயக்கத்தில் பாகுபலி திரைப்படம் வெளியானது. அந்தத் திரைப்படம் வெளி யான ஒரே நாளில் இந்திய மதிப்பில் 60 கோடியை வசூல் செய்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரண்டு பாகங்கள் கொண்ட இந்தப் படத்தின் முதல் பாகம் தற்போது வெளியாகியுள்ளது. இதில் பிரபாஸ், ராணா டக்குபாதி, தமன்னா, அனுஷ்கா, நாசர், சத்யராஜ் எனப் பலர் நடித்துள்ளனர். உலகம் முழுக்க வெளியாகியுள்ள இந்தப் படம் முதல் நாளில் இந்திய மதிப்பில் 60 கோடியை வசூல் செய்துள்ளது. இந்த வார இறுதியில் இது 100 கோடியை வசூல் செய்து சாதனை படைக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று சினிமா வர்த்தக ஆய்வாளர் திரிநாத் கூறியுள்ளார்.

அமெரிக்காவில் மட்டும் 15 கோடியை வசூல் செய்துள்ளது இந்தப் படம். தெலுங்கு, தமிழ், மலையாளம் மற்றும் ஹிந்தி என நான்கு மொழிகளில் வெளியாகியுள்ள இந்தப் படம், இந்தியா முழுக்க சுமார் 4 ஆயிரத்துக்கும் அதிகமான திரையரங்குகளில் திரையிடப்பட்டுள்ளது.

## விலைகொடுத்து வாங்கிய வில்லங்கம்

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஒருவர், லண்டனில் இருந்து கிளாஸ்கோ செல்வதற்காக விமான நிலையத்துக்குச் சென்றார். குறிப்பிட்ட அளவை விட அதிக எடையுள்ள பைகளை கொண்டுவந்ததால் விமான அதிகாரிகள் அவரை தடுத்து நிறுத்தி ஒரு பையை மட்டுமே எடுத்துச் செல்ல அனுமதித்தனர்.

இதனால் அவர் தந்திரமாகச் செயற்படுவதாக நினைத்து தனது பைகளில் எடுத்து வந்திருந்த அனைத்து உடைகளையும் வெளியே எடுத்து பைகளை காலியாக்கினார். பின்னர் 6 ரி–சேர்ட்கள், 3 ஜீன்ஸ் உட்பட மொத்தம் 12 உடைகளை ஒன்றின் மீது ஒன்றாக தனது உடலில் உடுத்திக் கொண்டார்.

அதனோடு விமானத்துக்குள் நுழைந்தார். அதிக உடைகள் அணிந்திருந்ததால் அவரால் இருக்கையில் சரியாக அமர முடியவில்லை. மேலும் உடலில் அதிகமான உஷ்ணம் ஏறி வியர்த்துக்கொட்ட தொடங்கியது. சிறிது நேரத்தில் அவர் மயக்கம் போட்டு விழுந்தார். இதனால் விமான சிப்பந்திகள், அவரது ஆடைகளை அகற்றி அவருக்கு முதல் உதவி சிகிச்சை அளித்தனர்.



# இந்து மதத்தின் வளர்ச்சிப் பாதையில் சர்வதேச இந்துகுருமார் ஒன்றியம்

■ செ.ரமேஷ்

இந்துமதம் ஏனைய மதங்களைப் போன்று அல்லாது பல கட்டமைப்புக்களைக் கடந்து பரந்து விரிந்து வியாபித்துச் செல்லும் மதம் ஆகும். இந்துமத வளர்ச்சியின் அபிவிருத்திக்கு பல கட்டுக் கோப்பான பல நிறுவனங்கள், அமைப்புக்கள் இருந்த போதிலும், எமது மண்ணில் சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்தின் பங்கு, அதன் சேவை முன்னெடுப்பு என்பது இன்று முதன்மையானதாக எல்லோராலும் உணரப்படுகின்றது.

2010 இல் சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத்தின் புதிய நிர்வாகம் பொறுப்பேற்றபோது, சிவஸ்ரீ.தா.மகாதேவக் குருக்கள், வாழ்நாள் பேராசிரியர் பிரம்மஸ்ரீ.ப.கோபாலகிருஸ்ண ஐயர், சிவஸ்ரீ.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள், சிவஸ்ரீ.கை. வாமதேவக் குருக்கள், முன்னைநாள் தலைவர் சிவஸ்ரீ . ப.மனோ கரக் குருக்கள் ஆகியோரின் வாழ்த்துக்களுடன், தனது சேவையை யாழ்.ஆனைப்பந்தி குருகுல கட்டடத்தில் உள்ள சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்தில் இருந்து ஆரம்பித்தது.

இந்த ஒன்றியம் சிவஸ்ரீ. சபா.வாசுதேவக் குருக்கள் தலைமையில் தனது பரந்துபட்ட சேவையை இந்துமதம் சார்ந்த இலக்கு மட்டுமன்றி, அனைத்து மதம் சார்ந்த மக்களின் வாழ்விலும் ஒளியேற்றும் நிறுவனமாகவும் செயற்பட்டு வருகிறது. நல்ல சமய, கல்வி மற்றும் ஆன்மிக விழுமியங்களை எடுத்துச் செல்கின்ற சமூக நிறுவனமாகவும், இலங்கையில் மட்டுமன்றி சர்வதேசத்திலும் இந்து மதம் சார்ந்தவர்களையும் தொட்டு நிற்கின்ற உயர்ந்த நிறுவனமாக இன்று சர்வதேச இந்து குருமார் ஒன்றியம் மேலோங்கி நிற்கின்றது. இதில் சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்தின் தலைவரான சிவஸ்ரீ.சபா.வாசுதேவக் குருக்கள் சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியம் பன்முக சேவைகளை ஒருங்கே வியாபித்துச் செல்வதற்கு ஊன்றுகோலாகச் செயற்படுபவர் எனினும் இந்து மதத்துக்கு என தனித்துவமில்லாத தலைமைத்துவமில்லாத போக்கு என்பது, இந்து சமயத்தை இந்து குருமார் ஒன்றியத்தை விமர்சிக்கின்ற தன்மை என்பது அதிகரித்தே வருகின்றது. அதற்கு அடிப்படைக் காரணமாக அமைவது ஆலயம் சார்ந்தோருக்கு சமய அறிவு இன்மை, இந்து குருமார்களிடையே ஒற்றுமையின்மை தங்களுக்குள்ளேயே ஒருவருக்கொருவர் பகைமை உணர்வுடன் செயற்படுதல் போன்றவையாகும். இவை இந்து மதம் பிளவுபட்டுச் செல்வதற்கும் காரணமாக அமைகின்றன.

இவ்வாறானசூழ் நிலைகளின் மத்தியிலும் வித்தியாசே கரம் சிவ் ஸ்ரீ.சபா. வாசுதேவக்குருக்கள் தலைமையிலான சர்வதேச இந்து குருமார் ஒன்றியம் கடந்த 5 வருடங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட சமூக சமய ஆன்மிக மற்றும் பொது நோக்கிலான சேவைகளை முன்னிறுத்தி வெற்றி கொண்டுள்ளதை இந்தச் சமூகம் அறியும். அதில் குறிப்பாகக் கிழக்கு மாகாணத்திலும், மலைநாட்டிலும் இயற்கை அழிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாவட்ட மட்டத்தில் உலர் உணவுப் பொருள்கள், உடுபுடவைகள், மருந்துவகைகள் முதலான உதவிகளை அள்ளி வழங்கியமை. சித்தன்கேணி ஞானரத்தின அமைப்பின் அனுசரணையுடன் சிவபூமி முதியோர் இல்லம், சங்கானை அரசினர் வைத்தியசாலை ஆகியவற்றுக்குச் சென்று பிரார்த்தனைகளில் ஈடுபட்டனர். வலி.வடக்கில் ஸ்ரீமுருகன்பாடசாலை யில் மாணவர்களது தண்ணீர்த் தொட்டியில் விஷம் கலந்த விடயத்தில் பாதிக்கப்பட்ட மாணவர்களது நலன்வேண்டி பிரார்த்தனை செய்யப்பட்டதுடன் நூல்கட்டி ஆசிர்வதிக்கப்பட்டு மாணவர்களது பயப்பீதியை போக்கியதை நாம் இலகுவில் மறந்துவிட முடியாது.

வடமாகாணத்தில் மாணவர்களின் ஆலய வழிபாட்டு முறைகளை விவரிக்கும் சிவஸ்ரீ.சபா.வாசுதேவக் குருக்கள் ஆக்கத்தில் உருவான ஆலயம் தொழுவது சாலவும் நன்று எனும் விபரணச் சித்திரமும் வெளியிடப்பட்டது. இது முன்னாள் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தலைமையில் வெற்றிகரமாக மாணவர்களிடத்தில் கொண்டு செல்லப்பட்டது. இதனைவிட போரினால் பாதிக்கப்பட்ட வன்னிப் பிரதேச அந்தணர் குடும்பங்களின் நல்வாழ்வுக்கு உதவியளித்தமை. வட மாகாணத்தின் 280 சமய பாட ஆசிரியர்களுக்கு வழிகாட்டல் கருத்தரங்குகளை ஒழுங்கு செய்து நடத்தியமை, அதற்கான பாதாதைகள் வழங்கி அபிவிருத்தி செய்தமை போன்றவற்றையும் இங்கு சுட்டிக் காட்டப்பட வேண்டியவை. மேலும் ஒழுக்க விழுமியத்தையும் இந்துமத உயர் செல்நெறியையும் மேலோங்கச் செய்த ஓம் நம சிவாய மந்திரத்தை அகில இலங்கைமட்டுமன்றி உலகறியச் செய்த பெருமையும் சிவஸ்ரீ. சபா.வாசுதேவக் குருக்களையே சென்றடையும். இவ்வாறான பல நூற்றுக்கணக்கான திட்டங்கள், நிகழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டு பன்முகப்பார்வையில் இந்துமதம் ஒரு நேரிய பாதையில் செல்வதற்கு ஒரு கட்டுக்கோப்பான ஒரு நிறுவனமாக இந்த அமைப்பு புடமிட்டுக் காட்டியுள்ளது.

எனினும் சர்வதேச இந்து குருமார் ஒன்றியம் இந்துக் குருமார்களுக்கு ஆங்கிலக் கல்வியின் அவசியத்தைக் கருதி முன்னெடுத்த திட்டம் தொடர்ந்து முன்னெடுக்க முடியாத நிலையில் பின்தள்ளப்பட்டது. மேலும், குருகுலத்தில் முதியோர் இளைப்பாற்று குடில் அமைக்க முன்னெடுத்த திட்டம் இடைநடுவில் தடுத்து நிறுத்தப்பட்டது. அத்துடன் குருமார்களது சிறப்புக்களை வெளியுலகுக்கு உடனுக்குடன் வெளிப்படுத்த ஆரம்பிக்கப்பட்ட இணையத்தளம் ஆரம்பித்த அன்றே மூடுவிழாவும் கண்டது. இவ்வாறானபல முன்னோக்குத்திட்டங்கள் முன்னெடுத்த நிலையில் இந்து குருமார்களது கருத்தொருமித்த இணக்கச் செயற்பாடு இல்லாத காரணத்தினால் வித்தியாசாகரம் சிவஸ்ரீ.ச பா.வாசுதேவக் குருக்கள் தலைமையில் உருவான திட்டங்கள் மழுங்கடிக்கப்பட்டன. இதனைவிட மேலானதாக பசுவதைக்கும் மிருகபலியிடலுக்கும் எதிர்ப்பு தெரிவித்து அதற்கான தொடர் நடவடிக்கையில் முன்னிறுத்தி இன்றும் எதிர்ப்புக்குரல் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இவ்வாறான சமூகப் பணிகளின் தன்னை அர்ப்பணித்துள்ள இந்துக் குருமார் ஒன்றியத்தின் பணிகள் சிறந்த தகுதியுடைய அந்தணர்களின் வழிகாட்டலில் மேலும் பல பணிகளை முன்னெடுக்க தன்னைத் தயார்ப்படுத்தி வருகிறது.


September 12 யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் வகுப்புக்கள்




Now prepare for your Accademic / General

IELTS

BRITISH COUNCIL IELTS Students Registration center

Speciality of our course
- Special attention to Advanced Grammar
- 12 Practice tests with explanation
- Unlimited hours for listening practice
- Speaking practice

வகுப்புக்கள் 20-07-2015 ல் ஆரம்பம்

COURSE SCHEDULE

| | Saturday & Sunday | Mon,Tues,Wed,Thur |
|---|---|---|
| Duaration | 8 Week | 8 Week |
| Time | 8.00 - 11.00 | 8.30 - 11.00, 5.00 -7.00 |

IELTS வகுப்புகள் இப்பொழுது நடைபெறுகின்றன.

BRITISH COLLEGE OF ENGLISH

No 192, Navalar Road, Jaffna. (பெருமாள் கோவிலுக்குச் சமீபமாக)

Tel : 021 222 0384 தொ.பே : 0778803887



கார் தேவை

Toyota/ Honda 2006ம் ஆண்டுக்கு பின் வந்த வெள்ளை நிற கார் உடன் தேவை.

தொடர்பு: 077 010 9562
077 474 4680



கார் விற்பனைக்கு

ஓர் மதகுருவின் சொந்த பாவிப்பில் மிகவும் நல்ல நிலையில் உள்ள TATA INDIGO வகை NPJQதொடர் இலக்கத் தைக் கொண்ட கார் விற்பனைக்கு உண்டு .

தொடர்பு: 077 232 7058



பாராட்டி வாழ்த்துகிறோம்

செல்வி ஜனனி சிவாஜி

கடந்த 17.07.2015 வெள்ளிக்கிழமை (UNIVERSITY OF GREENWICH LONDON) இல் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் (BACHELOR OF SCIENCE With SECOND CLASS HONOURS IN COMPUTING ) பட்டம் பெற்ற நவாலி - வடக்கைச்சேர்ந்த சிவாஜி கலாவதி தம்பதிகளின் செல்வப்புதல்வி செல்வி ஜனனி அவர்களை பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேலும் பல பட்டங்கள் பெற்று நீடூழி காலம் வாழவேண்டும் என ஸ்ரீசிந்தாமணி விநாயகனை பிரார்த்தித்து வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்:
அம்மா, அப்பா, தம்பிகளான சஞ்சு, பிரியன் மற்றும் உறவினர்கள்.

நவாலி - வடக்கு, மானிப்பாய்






சரவணா ரெக்ஸ்
SARAVANA TEX

நல்லூரில் மட்டும் தான் சரவணாரெக்ஸ் உள்ளது

நல்லூரில் மட்டும் தான் ஆடித்தள்ளுபடி ஆகஸ்ட் 18 வரை.



நீங்கள் ஒரு சாறி வாங்கும் பணத்துக்கு இரண்டு சாறி வாங்கலாம்

ஆடி சேல் அதிஸ்டசேல்

526, 529, பருத்தித்துறை வீதி, நல்லூர். [சிவன்கோயில் அருகாமை] யாழ்ப்பாணம்.

# யாழில் வளர்ப்பு நாய்களுக்கு விலங்குவிசர் நோய்த்தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஜூலை 20

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் அமைந்த குருநகர் 11 பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்குவிசர் நோய்த்தடுப்பூசி கீழ்வரும் இடங்களில் வைத்து வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

20.07.2015 காலை 9 – மு.ப. 11 மணிவரை புதிய பூங்கா வீதி, மு.ப. 11.30 – ஒரு மணிவரை புதிய வீடமைப்புத் திட்ட வீதி, பி.ப. 2 – 3.30 மணி வரை தொடர்மாடி குடியிருப்பு சனசமூக நிலையம்–

21.7.2015 காலை 9 – மு.ப. 11 மணிவரை உயர் தொழில்நுட்பக்கல்லூரி பகுதி குருநகர், மு.ப. 11.30 – ஒரு மணிவரை இறால் வளர்ப்புத் திட்டம் பகுதி குருநகர், பி.ப. 2 – 3.30 மணி வரை பழைய பூங்கா வீதி சிறுவர் நீதிமன்றப் பகுதி–

22.07.2015 காலை 9 – மு.ப. 11 மணிவரை திருநகர் மாணவர் படிப்பகம், மு.ப. 11.30 – ஒரு மணி வரை மத்தியூஸ் சென்சாள்ஸ் ஆரம்பப் பாடசாலை, பி.ப. 2 – 3.30 மணி வரை இராஜசிங்கம் வீதி மாதா சிலையடிப் பகுதி.

23.07. 2015 காலை 9 – மு.ப. 11 மணிவரை மத்தியூஸ் வீதி, மு.ப. 11.30 –ஒரு மணிவரை அச்சுக் கூட வீதி– அச்சுக்கூட ஒழுங்கை, பி.ப. 2 – 3.30 மணி வரை குருசோ வீதி–

24.07.2015 காலை 9 – மு.ப. 11 மணிவரை கொய்யாத்தோட்ட வீதி பழைய பூங்கா வீதிச் சந்தி, மு.ப. 11.30 – ஒரு மணிவரை சென்.ஜோன்ஸ் கல்லூரி கண்டிவீதி சந்தி, பி.ப. 2 – 3.30 மணி வரை சுவ்வாட்ஸ் லேன்.

27.07.2015 காலை 9 – மு.ப. 11 மணிவரை யு.எஸ் ஹொட்டல் அண்மைய பகுதி, மு.ப. 11.30 – ஒரு மணிவரை சோமசுந்தரம் வீதி , பி.ப. 2 – 3.30 மணி வரை சோமசுந்தரம் வீதி சோம சுந்தரம் லேன் ஒழுங்கை–

28.07.2015 காலை 9 – மு.ப. 11 மணிவரை கச்சேரி வை.எம்.சி.ஏ கட்டடத்தின் அருகில் , மு.ப. 11.30 – ஒரு மணிவரை பழைய பூங்கா வீதி, பி.ப. 2 – 3.30 மணி வரை கச்சேரி கிழக்கு வீதி.

29.07.2015 காலை 9 – மு.ப. 11 மணிவரை கச்சேரி கிழக்கு சென் ஆன்ஸ் வீதி சந்தி , மு.ப. 11.30 – ஒரு மணிவரை சந்தன மாதா கோவிலடி, பி.ப. 2 – 3.30 மணி வரை பிரதான வீதி சுண்டிக்குளி சந்தி.


30.07.2015 காலை 9 – மு.ப. 11 மணிவரை கோவில் வீதி புகையிரத தண்டவாளம் அருகில் , மு.ப. 11.30 – ஒரு மணிவரை கோவில் வீதி அருள்மாதா கோவிலடி.


04.08.2015 காலை 9 – மு.ப. 11 மணிவரை பிரதானவீதி சென்சாள்ஸ் பாடசாலை அருகில், மு.ப. 11.30 – ஒரு மணிவரை சென்பற்றிக்ஸ் வீதி சவக்காலை அருகில், பி.ப. 2 – 3.30 மணி வரை கதிற்றல் வீதி கதிற்றல் ஒழுங்கைப் பகுதி.

05.08.2015 காலை 9 – மு.ப. 11 மணிவரை டேவிற் வீதி கதிற்றல் வீதி சந்தி, மு.ப. 11.30 – ஒரு மணிவரை இராஜேந்திரா வீதி சந்தி, பி.ப. 2 – 3.30 மணி வரை டேவிற் வீதிச் சந்தி.

06.08.2015 காலை 9 – மு.ப. 11 மணிவரை செபஸ்ரியார் வீதி, மு.ப. 11.30 – ஒரு மணிவரை மவுண்காமல் வீதி, பி.ப. 2 – 3.30 மணி வரை கடற்கரை வீதி டேவிற் வீதி.


07.08.2015 காலை 9 – மு.ப. 11 மணிவரை இந்த இடங்களில் தடுப்பூசி ஏற்றல் இடம் பெறும். (த)









ஐயனார் துணை



# அனலைதீவு - நயினாகுளம் கூழாவடியுறை அருள்மிகு பூர்ணாதேவி புஸ்கலாதேவி சமேத ஹரிஹர புத்திரர் ஆலய வருடாந்த மஹோற்சவ பெருந்திருவிழா சிறப்பிதழ் - 2015

**கொடியேற்றம்**
**22.07.2015**

அத்த குந்துரு மைந்தர்க்கு அரிகர
புத்தி ரன்எனும் நாமம் புனைந்து பின்
ஒத்த பான்மை உருத்திரர் தம்மொடும்
வைத்து மிக்க வரம் பல நல்கியே

**தேர்த்திருவிழா**
**30.07.2015**

## விழாக்கால நிகழ்வுகள்

| | |
|---|---|
| 21.07.2015 | செவ்வாய் மாலை பூர்வாங்க கிரியைகள் ஆரம்பம் |
| 22.07.2015 | புதன் முதலாம் திருவிழா முற்பகல் 11.30 மணியளவில் துவஜாரோகணம் (கொடியேற்றம்) மாலை யாக பூஜை சுவாமி வலம் வருதல் |
| 23.07.2015 | வியாழன் 2ஆம் திருவிழா மாலை பூச்சொரியும் உற்சவம் |
| 24.07.2015 | வெள்ளி 3ஆம் திருவிழா பகல் 108 சங்காபிஷேகம் மாலை வேத பாராயணத் திருவிழா |
| 25.07.2015 | சனி 4ஆம் திருவிழா பகல் விஷேட திரவிய அபிஷேகம்,விஷேட திரவிய ஹோமம், பகல் பக்தி முத்தி பாவனோற்சவம் |
| 26.07.2015 | ஞாயிறு 5ஆம் திருவிழா பகல் 108 சங்காபிஷேகம் மாலை வசந்த உற்சவம் |
| 27.07.2015 | திங்கள் 6 ஆம் திருவிழா பகல், இரவு கைலாசவாகனம் |
| 28.07.2015 | செவ்வாய் 7 ஆம் திருவிழா பகல் 108 சங்காபிஷேகம் இரவு வேட்டைத்திருவிழா |
| 29.07.2015 | புதன் 8ஆம் திருவிழா பகல் 108 சங்காபிஷேகம், சந்தன அலங்காரம், மாலை சப்பைரத உற்சவம் (சப்பறத் திருவிழா) |
| 30.07.2015 | வியாழன் 9ஆம் திருவிழா பகல் தேர்த்திருவிழா முற்கல் 10.00 மணிக்கு இரத ஆரோகணம், வீதியுலா,பச்சை சாத்துதல் மஹா அபிஷேகம், (108 சங்காபிஷேகம்) பஞ்சமுக அர்ச்சனை |
| 31.07.2015 | வெள்ளி 10 ஆம் திருவிழா தீர்த்தத்திருவிழா முற்பகல் 10.30 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும்,யாக கும்ப அபிஷேகமும் நடைபெறும்,மாலை துவஜா அவரோகணம்,(கொடியிறக்கம்) சண்டேஸ்வரர் உற்சவம்,ஆச்சாரியார் உற்சவம் நடைபெறும். |
| 01.08.2015 | சனி 11 ஆம் திருவிழா பகல் 1008 சங்காபிஷேகம் மாலை திருக்கல்யாண உற்சவம் |
| 02.08.2015 | ஞாயிறு மாலை வைரவர் பொங்கல் |

அடியார்கள் யாவரும் தங்களால் இயன்ற வகையில் பால், தயிர், இளநீர் போன்ற அபிஷேகப் பொருள்களையும் பூக்கள் போன்றவற்றையும் ஆலயத்தில் கொடுத்து திருவிழா சிறப்புற நடைபெற ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**11 தினங்களும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.**
**நிதியுதவி வழங்க விரும்பும் அடியார்கள் பரிபாலன சபையினருடன் தொடர்புகொள்ளவும்.**

"அனைவரும் வருக" ஐயன் அருள் பெறுக!!!
"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

அனலைதீவு- 05

பரிபாலன சபையினர்,
ஐயனார் ஆலயம்.

குறிப்பு: அடியார்களுக்கான விசேட பஸ் சேவை நடைபெறும்



# மலேசியாவில் சிறந்த கம்பனியில்

## 40 பேருக்கு உடனடி வேலைவாய்ப்பு

**தொழிற்சாலை ஊழியர்கள் | Factory Workers**

**ஊதியம் 900 RM | மேலதிக கொடுப்பனவு உண்டு**

## நிபந்தனைகள்

* 1RM = 42 LKR

* ஒப்பந்த காலம் 3 வருடம் * தங்குமிடம், போக்குவரத்து,வைத்திய வசதி நிறுவனத்தினால் வழங்கப்படும்.
* ஒப்பந்த கால முடிவின்போது திரும்பி வருவதற்கான விமான டிக்கட் வழங்கப்படும். உணவுக்கான கொடுப்பனவு வழங்கப்படாது * வயதெல்லை 20 -35 * சேவை நேரம் கிழமைக்கு 48 மணித்தியாலயம்
* ஏனைய நிபந்தனைகள் அந்நாட்டு சட்டத்திட்டத்திற்கமைய இடம்பெறும். * CV Collection Only

20 வருட கால அனுபவத்தை கொண்ட

# SIO INTERNATIONAL
**Recruitment Agency**

No. 77, First Floor, People Park Shopping Complex, Gas Work Street, Colombo - 11, Sri Lanka.
T.P: + 94 11 5330032, Fax: +94 11 2332977, Hotline: + 94 72 2364655, 72 7977977
யாழ்ப்பாணத்தில் தொடர்புகொள்ள: + 94 72 2269876, 72 2269874
WWW Siojobs.com

(63238) (45.7)

# கட்டுப்பாட்டை இழந்து கடைக்குள் புகுந்த பஸ்

யாழ்ப்பாணம், ஜூலை 20

யாழ்ப்பாணம் முட்டாஸ் கடைச் சந்தியில் நேற்றுமுன்தினம் தனியார் பஸ் ஒன்று ஹைஏஸ் வாகனத்தை மோதியதுடன் கட்டுப்பாட்டை இழந்து அருகில் உள்ள கணினி விற்பனை நிலையத்துக்குள் புகுந்தது.

இதன்போது கணினி விற்பனை நிலையத்தின் முன்பக்க கண்ணாடிகள் முற்றாக நொறுங்கின.

நேற்று பிற்பகல் 1.45 மணியளவில் அளவெட்டியில் இருந்து யாழ் நோக்கிப் பயணிகளுடன் பயணித்த தனியார் பஸ்ஸே இவ்வாறு விபத்துக்குள்ளானது.

குறித்த தனியார் பஸ் தேர்தல் திணைக்களத்துக்குச் சொந்தமான ஹைஏஸ் வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியதுடன்சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து இரண்டு மோட்டார் சைக்கிள்களுடன் மோதுண்டு அருகில் இருந்த கணினி விற்பனை நிலையத்துக்குள் புகுந்தது.

இந்த விபத்தின்போது கடையில் இருந்தவர்களும் ,பஸ்ஸில் பயணித்தவர்களும் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர். விபத்து சம்பவம் தொடர்பில் யாழ். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-ரி-101)

## மேட்டுப் பயிர்ச்செய்கையாளர் விவரங்கள் சேகரிப்பு

வரணி, ஜூலை 20

சாவகச்சேரி கமநல சேவை நிலையம் பிரதேச விவசாய அமைப்புக்களிடம் இருந்து உப உணவுப் பயிர்களான மேட்டுப்பயிர் செய்கையாளர் பற்றிய விவரங்களைக் கோரியுள்ளது. மிளகாய், கத்தரி, வெண்டி, பயிற்றை மற்றும் வெங்காயப் பயிர்ச் செய்கையாளர்களின் பெயர், அடையாள அட்டை இல, பயிர்செய்கை பண்ணும் நிலத்தின் பரப்பளவு போன்ற விவரங்களே கோரப்பட்டுள்ளன. அத்துடன் நெற்செய்கையாளர்கள் பற்றிய விவரங்களையும் கோரியுள்ளது. பெயர், அடையாள அட்டை இலக்கம், வயற்காணியின் பெயர் சொந்தம், குத்தகை, போன்ற வற்றின் பரப்பளவு என்பவற்றையும் கோரியுள்ளது.

மேற்படி விவரங்களை தத்தமது பிரதேசத்தில் இயங்கும் கமக்கார அமைப்புக்களிடம் கையளிக்கலாம் எனக் கூறப்பட்டது. (ற-122)

---

## துயர் பகிர்வோம்

கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது (சங்கீதம் 116:15)



மண்ணில் 24 . 07 . 1963

கிறிஸ்துவுக்குள் 13 . 07 . 2015

**ராஜலிங்ஸ் ரஞ்சினி**

இல - 145 ஆனைவிழுந்தான்

கிளிநொச்சி

நம்முடைய உண்மையான மக்களுடைய வாழ்க்கையை கர்த்தர் (இயேசு) கவனமாய் பார்த்துக்கொண்டிருக்கிறார். அவர்களுடைய மரணசூழ்நிலையின் மேல் கவனத்தை செலுத்துகிறார். அவர்கள் மரிக்கும்போது அவர் அவர்களுடன் அங்கே இருக்கிறார். அவர்களுடைய மரணம் அவருக்கு மிகுந்த விலை மதிப்புடையது. அவர்கள் எல்லாம் பொல்லாப்பில் நின்றும் விடுவிக்கப்பட்டு இந்த வாழ்க்கையில் நின்றும் எடுபட்டு பாக்கியமான வெற்றிக்கும் இயேசுவை முகம் முகமாக தரிசிக்கவும் பரலோகத்திற்கு கொண்டு செல்லப்படுகிறார்கள்.

இந்த சகோதரியின் மரணமும் பாக்கியமானது என நம்புகின்றோம்.

அருட் சகோதரன்
எட் வேட் சார் சிவலிங்கம்.
இலங்கை மெதடிஸ்த திருச்சபை

---

## 14 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் J.S. சத்தியநாதன்**

(ஓய்வுபெற்ற கணக்கு பதிவாளர் பனை அபிவிருத்திச் சபை)

நித்தியமும் சத்தியமாய் வாழ்ந்த என் அப்பப்பாவே!
நித்தமும் என்னை சத்தியநாதனின்
பேரனாய் புகழ்ந்து போற்றும் சமூகத்தில்
நீர்மட்டும் என் கண்ணில் தரிசனம் இன்றியே......
யேசப்பாவுடன் இருக்கிறீர்களோ ..........ஒருமுறை
திரு இவனை பார்த்திடவே
வாரும் அப்பப்பாவே!

அன்புப் பேரன் S.J. மிதுநுஜன்
(மனைவி ,மகன்,மருமகள்)

எங்களுக்காக 29.05.1944

கர்த்தரிடம் 20.07.2001


மடத்துக்கடவை அல்வாய் மேற்கு.
077 662 4408

---

## 45 நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்

தோற்றம் 05.11.1978

மறைவு 06.06.2015



கடந்த06.06.2015 சனிக்கிழமை இறைபதமடைந்த எமது குடும்ப விளக்கு

அமரர்

**செல்வராசா பிரசன்னா**


அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (20.07.2015) திங்கட்கிழமை காலை 5.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். தொடர்ந்து மதியம் 12.30 மணியளவில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மோட்டன்சீமா
அல்வாய் கிழக்கு .அல்வாய்
021 2262907

குடும்பத்தினர்.

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்

**சின்னத்துரை ஸ்ரீஸ்கந்தராஜா**

(இளைப்பாறிய I.P.T - Srilanka Telecom)

தோற்றம் 08.03.1954

மறைவு 22.06.2015

கடந்த (22.06.2015) திங்கட்கிழமை சிவபதமடைந்த அமரர் சின்னத்துரை ஸ்ரீஸ்கந்தராஜா எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (20.07.2015) திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் (22.07.2015) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டி நிற்கின்றோம்.

22, புகையிரத வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
076 626 5534

மனைவி, மகன்,
குடும்பத்தினர்.

---

## கண்ணீர் அஞ்சலி

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் புலோப்பளை ஆயுர்வேத மருந்தக மருத்துவரும் சங்க உறுப்பினருமான **செல்வி சண்முகப்பிரியா சச்சிதானந்தனின்** பாசமிகு தந்தையார்



**செல்லையா சச்சிதானந்தன்**

**(அண்ணா தாசன்)**


அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, ஊழியர் நலன்புரிச் சங்கம்.

---

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை மார்க்கண்டு



தோற்றம் 29.09.1927 மறைவு 16.07.2015

யாழ்/புங்குடுதீவு 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், புங்குடுதீவு 3ஆம் வட்டாரம், 206 மாயவனூர் வட்டக்கச்சி, 59/2/1 கல்லூரி வீதி(College Road) கொழும்பு 13ஐ வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை மார்க்கண்டு16.07.2015 வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப் பிள்ளை நாகவல்லி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அண்ணாமலை - சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் யோகம்மாவின் பாசமிகு கணவரும் கௌரிதேவி, யோகராணி, டயனீஸ்வரன், சுகுனேஸ்வரன்,குகனேஸ்வரன், சியாமளா ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான நல்லதங்கம் நடராசா, கனகம்மா, அழகம்மா, சேதுபதி மற்றும் சிவபாக்கியம், சுப்பிரமணியம், தெய்வநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரரும், மதியழகன், கணேசலிங்கம், சிவதர்சினி, கௌசலா, நந்தகுமாரி ஆகியோரின் அன்பு மாமனாரும்.காலஞ்சென்றவர்களான சுந்தரம்பிள்ளை நாகநாதர், K.சுந்தரம்பிள்ளை ஆறுமுகம் மற்றும் புஸ்பமலர், தியாகராஜா, விக்கினேஸ்வரி காலஞ்சென்ற மாணிக்கம் மற்றும் நாகம்மா, காமாட்சி ஆகியோரின் அன்பு மைத்துனரும் மதுஷா, திரிஷா, சஜீவா, அபோணா, கிஷோனா, கிஷோர், சஜிலா, அபிஷன், அதுர்ஷன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2015) திங்கட்கிழமை மு.ப 10 மணியளவில் 59/2/1, கல்லூரி வீதி, கொழும்பு - 13 இல் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப 2மணிக்கு பொரளை கனத்தை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

---

## மரண அறிவித்தல்

### செல்வி மேரி பூரணம் உவில்லியம்

(ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியை வேம்படி மகளிர்கல்லூரி, பதுளை பெண்கள் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, அச்சுவேலி சென்திரேசா மகளிர் கல்லூரி)



அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட மேரி பூரணம் உவில்லியம் ஞாயிற்றுக்கிழமை காலை (19.07.2015) கர்த்தருக்குள் நித்திரையடைந் தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான உவில்லியம் - நேசரத்தினம் தம்பதிகளின் மூத்த மகளும் காலஞ்சென்ற அன்னரத்தினம் மற்றும் செல்வராசா, ஞானசோதி, செல்வராணி, சாந்தம் ஆகியோரின் சகோதரியும் சபாபதிப்பிள்ளையின் மைத்துனியும் கலாநிதி. ஜூலியன், கலாநிதி றூபன் ஆகியோரின் பெரியதாயும் ஜெசிக்காவின் மாமியும் ஜூட்டின் பேர்த்தியுமாவார்.

நாளை மறுதினம் (22.07.2015) புதன்கிழமை முற்பகல் 10மணிக்கு அன்னாரின் இல்லத்தில் அஞ்சலியும் இறுதி வழிபாடும் நடைபெற்று அச்சு வேலி தென்னிந்திய திருச்சபை சேமக்காலையில் திருவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சந்நிதி வீதி,
அச்சுவேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

---

## மரண அறிவித்தல்

### இராஜேஸ்வரி செல்வராசா



யாழ்ப்பாணம் அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடா பிரம்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி செல்வராசா அவர்கள் 18.07.2015 சிவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை நல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இராஜேந்திரம் செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச்சங்க மின்தெறி ஆலையில் பணியாற்றிய செல்வராசா(கனடா) அவர்களின் அன்பு மனைவியும் பிரபாவதி (பிரபா - கனடா), யசோதரா (யசோ - கனடா), குணநிதி (நிதி - கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் தியாகமூர்த்தி (தியாகி - கனடா), பரமேஸ்வரன்(ஆசிரியர் ஈழநாடு பத்திரிகை), சூரிய குமாரன் (பாபு) ஆகியோரின் அன்பு மாமியாரும் சுருதியா, ஜவகர், தாட்சாயினி, கார்த்திகன், ஆரணி, பிரணவன் ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும் திருமதி மகிலேஸ்வரி, மகேந்திரன் (மலர் - கொழும்பு) அவர்களின் அன்புச் சகோதரியும் மகேந்திரன் (கொழும்பு) காலஞ்சென்றவர்களான வி. பொன்னம்பலம் (வி.பி) திருமதி சி. விசாலாட்சி, திருமதி க. செங்கமலம், மாசிலாமணி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் மயூரன்(கொழும்பு), ரம்மியா (கொழும்பு) ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 19.07.2015 ஞாயிற்றுக் கிழமை இலக்கம் 8911 Wood - bine Ave, Markham, ON L3R 5G1 Canada இல் அமைந்துள்ள Chapel Ridge Funeral Home இல் மாலை 4.00 மணி முதல் 9.00 மணி வரை அஞ்சலிக்கு வைக்கப்பட்டு மறுநாள் 20.07.2015 திங்கட் கிழமை இதே இடத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: தியாகமூர்த்தி 001 647 978 2178
சூரியகுமாரன் பரமேஸ் 001 416 841 9600
பாபு 001 416 841 1974
நிதி 001 647 218 1596 / 001 905 794 5916

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணி

# தேசத்தை உயிரூட்டுவோம் புதிதாகவே ஆரம்பிப்போம்

இலங்கைத் தாயின்
அன்புப் பிள்ளைகளே,
அனுபவத்தின் படிப்பினையால்
தேசத்தைக் கட்டியெழுப்பிடவும்,
தேசத்தை உயிரூட்டிடவும்,
இடைநிறுத்திய இடத்திலிருந்து
மீண்டும் ஆரம்பிப்பதற்கான
புதிய பயணத்தில் எம்முடன்
ஒன்றிணைந்திட
உங்கள் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.



பாகிஸ்தானில் ரம்ழான் பண்டிகைக் கொண்டாட்டங்களின் போது.....


## அமெரிக்காவில் காட்டுத் தீ



நியூயோர்க், ஜூலை 20
அமெரிக்காவில் ஏற்பட்ட வரலாறு காணாத காட்டுத் தீயினால் வனப் பகுதி வழியாகக் சென்ற 20க்கும் மேற்பட்ட வாகனங்கள் தீயில் எரிந்து சாம்பலாயின.
சான் பெர்னார்டினோ கவுன்டிப் பகுதியில் உள்ள நெடுஞ்சாலையின் இரு புறமும் அடர்ந்த காடுகள் உள்ளன. இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு வனப்பகுதியில் திடீரெனத் தீ பரவியது. காற்றின் வேகம் அதிகமாக இருந்ததால் மளமளவெனப் பரவிய தீ நெடுஞ் சாலையின் இரு புறமும் பரவியது. நெடுஞ்சாலையின் இருபுறமும் கொளுந்துவிட்டு எரிந்த தீ, அந்த வழியாகச் சென்ற 20க்கும் மேற்பட்ட வாகனங்களையும் பதம் பார்த்தது. அதனைத் தொடர்ந்து அந்த நெடுஞ்சாலை தற்காலிகமாக மூடப்பட்டு மீட்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. ஹெலிகொப்டர் மூலம் வான்வழியாக தீயை அணைக்கும் பணிகள்மும்முரமாக நடைபெற்று வருகின்றன.
தீயின் கோரத்தாண்டவத்தைக் கட்டுப்படுத்தும் பணியில் ஆயிரத்துக்கும் அதிகமான தீயணைப்புபடை வீரர்கள் ஈடுபட்டுள்ளனர். (ஐ)

# கடந்த வருடத்தில் 5,650 விவசாயிகள் தற்கொலை

புதுடில்லி,ஜூலை 20
இந்தியாவில் கடந்த வருடத்தில் மட்டும் 5,650 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக ஆய்வறிக்கை ஒன்று தகவல் தெரிவித்துள்ளது. மத்திய உள்துறையின் கீழ் செயற்படும் தேசிய குற்ற ஆவணக் காப்பகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்தத் தகவல் இடம்பெற்றுள்ளது.
இந்தி யாவில் 2014 ஆம் ஆண்டு விபத்துகளால் உயிரிழந்தோர் மற்றும் தற்கொலை செய்து கொண்டோர் என்ற தலைப்பில் இந்த ஆய்வறிக்கை வெளியிடப்பட்டது.
இந்தியாவில் விவசாயத்தை நேரடியாகவோ, மறைமுகமாகவோ 48.4 சதவீதம்பேர்சார்ந்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.



கடந்த வருடத்தில் மட்டும் 5 ஆயிரத்து 650 விவசாயிகள் தற் கொலை செய்து கொண்டுள்ளதாகவும் அவர்களில் 5 ஆயிரத்து 178பேர்ஆண்கள் என்றும்,472பேர் பெண்கள் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. வங்கிக் கடன்களைச் செலுத்த முடியாமல் தற்கொலை செய்து கொண்ட விவசாயி களே அதிகம் என்றும் அந்த ஆய் வறிக்கை தெரிவித்துள்ளது.
மகாராஷ்டிரா மற்றும் தெலுங்கானாவில் தான் விவசாயிகளின் தற்கொலை அதிகம் எனவும் கூறப்பட்டுள்ளது. (ஐ)

# 240

## கைதிகள் சிரியாவில் விடுதலை

ரம்ழான் பண்டிகையை முன்னிட்டு தீவிரவாதத் தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களில் 25க்கும் மேற்பட்ட பெண்கள் உட் பட 240 பேரை சிரியா அரசு விடுதலை செய்துள்ளது.
சிரியாவில் ஷியா பெரும்பான்மை அரசை எதிர்த்து சிறுபான்மை சன்னி கிளர்ச்சியாளர்கள் ஆயுதப் போராட்டம் நடத்தி வருகிறார்கள். கடந்த சில வருடங்களாக நடைபெற்று வரும் இந்த உள்நாட்டுப் போர் காரணமாக லட்சக்கணக்காக மக்கள் அகதிகளாக வெளியேறியுள்ளனர். அரசுக்கு எதிராகச் செயற்பட்டோரை அரசு கைது செய்து தீவிரவாதத் தடுப்புச் சட்டத் தின் கீழ் சிறையில் அடைத்து வருகிறது.
இவ்வாறு ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.
சிரியாவில் இரண்டு லட்சத்துக்கும் மேற்பட்டோர் இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் சிறுவர்கள் உட்பட 13 ஆயிரம் பேர் சிறையில் சித்திரவதைக்கு உட்பட்டு சாவடைந்துள்ளனர். கடந்த வருடம் சிரிய ஜனாதிபதி; பஷார் அல்–ஆசாத் ஆயிரக் கணக் கான அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்க உத்தர விட்டார். (ஐ)

# பிரான்ஸில் அதிகரிக்கும் வெப்பம்

பாரிஸ்,ஜூலை 20
பிரான்ஸ் நாட்டில் நள்ளிரவு வேளையிலும் வெப்பநிலை அதிகமாக உள்ளதால் மக்கள் பெரும் அவதிக்குள்ளாகியுள்ளனர். பிரான்ஸ் நாட்டில் அண்மைக்காலமாக வெப்பத்தின் அளவு அதி கரித்து வருகிறது. இந்த நிலையில் அந்த நாட்டின் வடக்குப் பகுதியில் உள்ள நகரங்களில் இரவிலும் வெப்பம் நிலவியதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.
ஏனைய பகுதிகளிலும் இரவு நேரத்தில் வெப்பத்தின் தாக்கம் அதிகரித்து வருகிறது, இந்நிலையில் பிரான்ஸில் கடந்த மாதத்தில் வெயிலின் தாக்கத்தால் 700 பேர் வரை உயிரிழந்தமை குறிப்பிடத் தக்கது. (ஐ)



## பாதிக்கப்பட்ட பெண்களுக்கு புதிய சட்டம்

புதுடில்லி,ஜூலை 20
இந்தியாவில் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகும் பெண் ஊழியர்களுக்கு, சம்பளத்துடன் கூடிய 3 மாத விடுப்பு வழங்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.
பெண்களுக்கு எதிரான பாலியல் அச்சுறுத்தல்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இந்த நிலையில் பணிக்குச் செல்லும் பெண்கள், பாலியல் ரீதியிலான துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டால், அவர்களுக்குச் சம்பளத்துடன் கூடிய 3 மாதங்கள் விடுமுறை வழங்கப்பட வேண்டும் எனப் பணியாளர் மற்றும் பயிற்சித் துறை உத்தரவிட்டுள்ளது.
மேலும் அவ்வாறு அளிக்கப்படும் விடுமுறை அந்தப் பெண் ஊழியரின் ஆண்டு விடுமுறை கணக்கில் இருந்து கழிக்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஐ.எஸ். திட்டங்கள் முறியடிப்பு சவூதி அரேபியா அறிவிப்பு

ரியாத், ஜூலை 20
தங்கள் நாட்டில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து ஐ.எஸ். தாக்குதல் திட்டங்களையும் முறியடித்து விட்டதாக சவூதி அரேபியா அறிவித்துள்ளது.
ஈராக் மற்றும் சிரியாவின் ஒருசில பகுதிகளைப் பிடித்து வைத்துள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் அந்தப் பகுதிகளை இஸ்லாமிய நாடாக அறிவித்துள்ளனர். மேலும் அவர்கள் பல்வேறு நாடுகளில் தீவிரவாதச் செயல்களிலும் ஈடுபட்டு வருகிறார்கள். அவர்களின் முக்கிய இலக்குகளில் ஒன்று சவூதி அரேபியா. கடந்த மே மாதம் சவூதியில் ஐ.எஸ். தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில் 21 பேர் கொல்லப்பட்டனர். இந்த நிலையில் நேற்று சவூதியின் உள்துறை அமைச்சர் வெளியிட்டுள்ள அறிக்கையில், அண்மைக்காலங்களில் எங்கள் நாட்டில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து ஐ.எஸ். தாக்குதல் நடவடிக்கைகளும்முறியடிக்கப்பட்டுவிட்டன எனக் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## கிரீஸ் வங்கிகள் இன்று திறப்பு




ஏதென்ஸ்,ஜூலை 20

கடந்த மூன்று வாரங்களாக மூடப்பட்டிருந்த கிரீஸ் வங்கிகள், இன்று திறக்கப்படும் என, அந்த நாட்டின் அரசு அறிவித்துள்ளது. பன்னாட்டு நிதியத்துக்குக் கடன் தவணையைக் கட்டத் தவறியதை அடுத்து, கிரீஸ் வங்கிகள், கடந்த வாரங்களில் மூடப்பட்டன. இந்த நிலையில் கிரீஸ் சமர்ப்பித்த சீர்திருத்தத் திட்டத்தை, ஐரோப்பிய நாடுகளின் நிதியமைச்சர்கள் கூட்டம் ஏற்றுக் கொண்டன. அதனால், கிரீஸுக்கு அடுத்த மூன்று வருடங்களில் 6 லட்சம் கோடி ரூபாய் கடன் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதையடுத்து, இன்று தொடக்கம் கிரீஸ் வங்கிகள் செயற்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வங்கிகள் மூடப்பட்டதால், கிரீஸ் நாட்டுக்கு பெரும் நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது. (ஐ)

## சாலமன் தீவுகளில் நிலநடுக்கம்



சிட்னி,ஜூலை 20

ஆஸ்திரேலியா அருகேயுள்ள சாலமன் தீவுகளில் கடும் நிலநடுக்கம் ஏற்பட்டதால் மக்கள் பீதி அடைந்துள்ளனர்.

ஆஸ்திரேலியா அருகே பசுபிக் கடலில் சாலமன் தீவுகள் என்ற குட்டி நாடு உள்ளது. அங்கு நேற்று முன்தினம் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. அதன் காரணமாக லடா மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகள் அதிர்ந்து குலுங்கின. அதனால் பீதி அடைந்த மக்கள் வீடுகளை விட்டு வெளியே ஓட்டம் பிடித்தனர். மேலும் அந்த நிலநடுக்கம் 7.5 டிகிரியில் பதிவாகியுள்ளது. அதனால் அங்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# ஈராக்கில் 115 பேர் உடல் சிதறிச் சாவு

### இரத்தக் களரியான றம்ழான் பண்டிகை



பாக்தாத்,ஜூலை 20

ஈராக்கில் றம்ழான் பண்டிகைத் தினமான நேற்றுமுன்தினம் ஐ.எஸ். தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைப் படைத் தாக்குதல் சம்பவங்களில் 115 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 170 பேர் காயமடைந் துள்ளனர்.

இந்தத் தாக்குதல் சம்பவங்களின் போது உடல் உறுப்புக்களை இழந்து தவிக்கும் சிலர் மருத்துவ உதவிகளை எதிர்பார்த்துக் காத்திருப்பதாகத் தகவல்கள் அறிய வருகின்றன. ஆங்காங்கே சிதறிக்கிடந்த சிறு குழந்தைகளின் உடல்களை மக்கள் அள்ளிச் சென்ற காட்சியும் பரிதாபத்தை ஏற்படுத்தியதாகத் தகவல்கள் தெரிவித்துள்ளன. இதன் காரணமாக அங்கு பாதுகாப்புப் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

றம்ழான் பண்டிகையை முன்னிட்டு ஈராக்கின் பாக்தாத் அருகேயுள்ள கான்பானிசாத் என்ற இடத்தில் உள்ள சந்தையில் விறு விறுப்பாக வியாபாரம் நடந்து கொண்டிருந்தது. ஏராளமான மக்கள் கூடிப் பொருள்களை வாங்கி கொண்டிருந்தனர். அப்போது அங்கு காரில் வந்த தற்கொலைப் படைத் தீவிரவாதி ஒருவர் சக்தி வாய்ந்த குண்டை வெடிக்க செய்துள்ளார். அதனால் அங்கு இருந்த பல கட்டடங்கள் இடிந்து தரை மட்டமாயின. கார்கள் வெடித்துச் சிதறி தீப்பிடித்து எரிந்தன. இடிபாடுகளுக்குள் சிக்கி பலர் உயிரிழந்துள்ளனர். உடல்கள் ஆங்காங்கே சிதறிக்கிடந்தன. இந்தத் தாக்குதல் சம்பவத்தின்போது 117 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. குண்டு வெடித்ததில் பாதிப்படைந்தவர்களின் உடல் உறுப்புகள் அங்குள்ள கட்டடத்தின் கூரைகளில் தொங்கிக் கிடந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே இந்தத் தாக்குதலுக்குஐ.எஸ்.தீவிரவாதிகள்பொறுப் பேற்றுள்ளனர். ஷியா பிரிவினரைக் குறி வைத்து தாக்குதல் நடத் தப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள் ளனர்.

இதற்கிடையே தீவிரவாதிகள் மேலும் தாக்குதல் நடத்தக்கூடும் என்பதால் டியாலா மாகாணத்தில் பூங்காக்கள்மற்றும்பொழுதுபோக்கு இடங்களை மூட அந்த அரசு உத்தர விட்டது. (ஐ)

## மலேசிய விமானத்தின் ஆதாரம் வெளியீடு

சிட்னி,ஜூலை 20

கடந்த வருடம் 298 பயணிகளுடன் சென்ற மலேசிய விமானத்தைச் சுட்டு வீழ்த்தியது, ரஷ்ய ஆதரவுக் கிளர்ச்சியாளர்கள் என்பதற்கான வீடியோ ஆதாரம் ஒன்று நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ளது.

மலேசியன் ஏயார்லைன்ஸின், எம்.எச்.17 என்ற விமானம், கடந்த வருடம் ஜூலை மாதம் ஆம்ஸ்டர்டாமில் இருந்து கோலாலம்பூர் செல்லும் வழியில், உக்ரைன் அருகே, ஏவு கணைப் பீரங்கியால் சுட்டு வீழ்த் தப்பட்டது. அதில், 298 பேர் உயிரிழந்தனர். உலகையே அதிர்ச் சியில் ஆழ்த்திய அந்தச் சம்பவத்துக்கு, ரஷ்யா ஆதரவுக் கிளர்ச்சியாளர் கள் தான் காரணம் என்று, சர்வதேச நாடுகள் குற்றஞ் சாட்டியுள்ளன. ஆனால், இதை ரஷ்யா மறுத்து வருகிறது.

இந்த நிலையில் விமான விபத்தில் உயிரிழந்தோரின் முதலாம் ஆண்டு நினைவுதினம், நேற்றுமுன்தினம் நெதர்லாந்தில் அனுஷ்டிக்கப்பட்டது. அதனை முன்னிட்டு ஆஸ்திரேலியாவின், 'சண்டே டெய்லி டெலிகிராப்'என்ற பத்திரிகை, விமான விபத்தின் போது எடுக்கப்பட்ட, 17 நிமிட வீடியோவை வெளியிட்டது. அதில், போர் விமானம் என்று நினைத்து, பயணிகள் விமானத்தை சுட்டு வீழ்த்தியதால், கிளர்ச்சியாளர்கள் பதற்றமாக இருப்பது பதிவாகியுள்ளது.

இதையடுத்து, தடயங்களை அழிக்கும் நோக்கில், விமானத்தின் கறுப்பு பெட்டியை கிளர்ச்சியாளர்கள் தேடுகின்றனர். உக்ரைனில், கிளர்ச்சியாளர்களின் முகாம் ஒன்றில் கிடைத்த இந்த வீடியோ ஆதாரம், விமான விபத் துக்கு, ரஷ்ய ஆதரவு கிளர்ச்சி யாளர்கள் தான் காரணம் என் பதை, தெளிவாக நிரூபிக்கிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, விமான விபத்துத் தொடர்பான புலனாய்வு அறிக்கையை, எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் வெளியிட உள்ளதாக, நெதர்லாந்து அறிவித்துள்ளது. (ஐ)




கொலம்பியாவின் தெற்கு கரோலினாப் பகுதியில் வெளியேற்றப்படவிருந்த ஒரு பகுதி இன மக்க ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட போது ..... (ஐ

## 4 வயதுச் சிறுமியின் திருமண ஆசை

வொஷிங்டன்,ஜூலை 20

அமெரிக்காவில் புற்றுநோய்த் தாக்கத்துக்கு உள்ளான 4 வயதுச் சிறுமியின் திருமண ஆசையை பணியாளர் ஒருவர் நிறைவேற்றியுள்ளார்.

லூக்கேமியா நோயால் பாதிக்கப்பட்டிருந்த ஆபி என்ற சிறுமி, நியூயோர்க்கில் உள்ள புற்றுநோயால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்குச் சிகிச்சை அளித்து வரும் அல்பேனி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். அந்த மருத்துவ மனையில் பணிபுரிந்து வரும் பணியாளரான மேட் ஹிக்கிலிங் என்பவரை






ஆபிக்கு மிகவும் பிடித்துப் போய் விட்டது. ஹிக்கிலிங்கை திருமணம் செய்ய ஆசைப்படுவதாகத் தனது தாயிடம் ஆபி தெரிவித்துள்ளார். அதற்கு ஹிக்கிலிங்கும் சம்மதம் தெரிவிக்கவே, திருமணத்துக்கான பாடுகள் நடைபெற்றன. திரும நடைபெறவிருந்த இடம் வதும் ரோஜா இதழ்கள் த பட்டி ருந்தது, பின்னர் இருவ ஒரு வருக்கொருவர் மோ அணிந்து கொண்டனர். மே கேக் வெட்டி இருவரும் உ பிறருக்கும் கொடுத்துள்ளன திருமணம் முடிந்த பின்னர் கள் இருவரும் செல்வதற் பொம்மைக் காரும் ஏற்பாடு யப்பட்டிருந்தது. இந்த நெ சியான சம்பவத்தை ஹிக் தனது பேஸ்புக் பக்கத்தில் வேற்றம் செய்துள்ளார்.

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களது 14 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு இந்தக்கட்டுரை பிரசுரம்

# என்றும் நினைவில் நிற்கும் நடிகர் திலகம் சிவாஜி கணேசன்



கலைத்தாயின் செல்வ மகனாகித், தமிழ்த் திரையுலகில் உணர்ச்சி பூர்வமாக வசனங்களைப் பேசுவதிலும், முகபாவனை நடிப்பிலும் இரசிகர்களைப் புதிய சகாப்தத்துக்குள் கொண்டுவந்த நடிப்புலக மாமேதை, நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ஆவார். அவரது நினைவுகளை அவரது வெற்றிச் சாதனைகளை நினைவு கூர்வது, அவரது 14 ஆவது நினைவு தினமான ஜூலை 21 ஆம் திகதி பொருத்தமானதாக இருக் கும்.



உலகெங்கிலுமுள்ள தமிழ் இரசிகர்களுக்கு அவரது சிறப்பான பண்பட்ட நடிப்பினால் பல நல்ல உயரிய காவியத் திரைப் படங்களைப் பார்த்து மெய் மறந்து நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும். ஆனால் அவரது அயராத உழைப்புக்குக் கிடைத்த பலர் வெற்றிச் சாதனைகள் பலருக்குக் கருத்தில் இல்லாமல் இருக்கலாம். ஆகவே அவரது உண்மைச் சாதனைகளை ஒரு முறை கவனத்தில் கொள்வோம். மேலோட்டமாகப் பார்க்கும் போது மற்றைய சில நடிகர்களின் திரைப் படங்கள் சாதனை செய்வது போல் தோன்றினாலும் கவனமாக ஆராய்ந்தால் சாதனை மன்னன் இவர் தான் என்பது விளங்கக் கூடியதாக இருக்கும்.

1.1952 ஆம் ஆண்டு தொடங்கிய இவரது திரைப்பட வாழ்க்கையில் 1987 ஆம் ஆண்டு வரையான 36 வருடங்களில், வரு டத்துக் குச் சராசரியாக 7 படங்கள் வெளி வந்துள்ளன. வேறெந்தத் தமிழ்க் கதா நாயக நடிகர்களுக்கும் இந்தச் சாத னைப் பயணம் இல்லை.

2.சராசரியாக 7 படங்கள் வெளிவந்தும் அதிக 100 நாள்கள் ஓடிய படங்கள் (90) இவருடையவையே. அதிக வெள்ளிவிழா (175 நாள்கள்) ஓடிய படங்கள் (25) இவருடைய வையே. அதிக 200 நாள்கள் ஓடிய படங்கள் (12) இவருடைய வையே.

3. சராசரியாக 7படங்கள் வெளிவந்தாலும் வருடத் துக்கு 3 படங்களாவது 100 நாள்களுக்கு மேல் ஓடி வெற்றிபெற்றுள்ளன.

4.இவரது முதலாவது, 25 ஆவது, 100 ஆவது, 125 ஆவது, 150 ஆவது, 175 ஆவது, 200 ஆவது படங் கள் 100 நாள்களுக்கு மேல் ஓடி வெற்றி பெற்றுள்ளன.

5.இவரது 100 ஆவது படமான நவராத்திரி சென்னை உட்படப் பல ஊர்களில் 100 நாள்களுக்கு மேல் ஓடி வெற்றி பெற்றுள்ளது. மற்றைய நடிகர்களில் சிவகுமாரின் 100 ஆவது படமும் சென்னை நகரிலும் 100 நாள்களுக்கு மேல் ஓடியது. வேறு எந்த நடிகரின் 100 ஆவது படமும் சென்னையில் 100 நாள்கள் ஓடவில்லை.

6.ஒரே நடிகை இவ்ருடன் அதிகப் படங்களில் கதாநாயகியாக நடித் துள்ளார். அந்த நடிகை நாட்டியப் பேரொளி பத்மினி இவருடன் 38 படங்களில் ஜோடியாக நடித்துள் ளமையாகும். அடுத்தது கே.ஆர். விஜயா (36 படங்கள்).

7 ஒரே இயக்குநர் இவரது 20 படங் களை இயக்கியுள்ளார். ஏ.சி.திரு லோகச்சந்தர் தான் அவர்.

8.ஒரே தயாரிப்பாளர் இவரை வைத்து 17 படங்கள் தயாரித்துள் ளார். நடிகர் கே.பாலாஜி தான் அவர்.

9.அதிக படங்களில் இரண்டு வேடங் களில் நடித்ததுடன், இரண்டுக்கும் மேற்பட்ட வேடங்களில் நடித்து அதிக படங்கள் வெற்றி பெற்றதும் இவருடையவைதான். (பலே பாண் டியா, தெய்வமகன், நவராத்திரி, சந்திப்பு, திரிசூலம்)

10.பாடல்கள் எதுவுமின்றி இவர் நடித்து 1954 இல் வெளிவந்த அந்தநாள் படம் 100 நாள்கள் ஓடி வெற்றி பெற்றது. மற்றைய எந்த நடிகருக்கும் இந்த வரலாறு இல்லை.

11. ஒரே நாளில் வெளியாகிய இரு படங்களும், 100 நாள்கள் ஓடி வெற்றி பெற்ற சாதனை நடிகர் திலகத்துக்கு 3 தடவைகள் உண்டு. (1954 இல் அந்தநாள், கல்யாணம் பண்ணியும் பிரமச்சாரி 1967 இல் இரு மலர்கள், ஊட்டிவரை உறவு, 1970 இல் சொர்க்கம், எங்கிருந்தோ வந்தாள் வேறெந்த நடிகருக்கும் இந்தச் சாதனை இல்லை)

12.யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும் அதிக 100 நாள்கள் ஓடிய படங்களும், அதிக வெள்ளி விழா (175 நாள்கள்) ஓடிய படங் களும் நடிகர் திலகத்தினுடை யவைதான்.

13.யாழ்ப்பாணத்தில் வெள்ளி விழா (175 நாள்கள்) கண்ட 3 திரைப் படங்களும் நடிகர் திலகத்தினு டையவைதான். (வசந்தமாளிகை, உத்தமன், பைலட் பிரேம்நாத்)

14.கொழும்பில் வெள்ளி விழாக் கண்ட அதிக படங்கள் (4) இவரு டையவைதான். (பராசக்தி, வசந்த மாளிகை, உத்தமன், பைலட் பிரேம் நாத்). (கமலஹாசனுடையவை 2, எம்.ஜி.ஆர் உடையது 1)

15.இன்னும் காலத்துக்குக் காலம் வருமானத்தில் முன்னைய சாத னைகளை முறியடித்து முன்னணி யில் இருந்த திரைக் காவியங்களும் இவருடையதுதான். (பராசக்தி, மனோகரா, உத்தமபுத்திரன், வீர பாண்டிய கட்டப்பொம்மன், பாச மலர், புதிய பறவை, நவராத்திரி, திருவிளையாடல், தில்லானா மோகனாம்பாள், தெய்வமகன், சவாலே சமாளி, பட்டிக்காடா பட்ட ணமா, வசந்தமாளிகை, தங்கப் பதக்கம், உத்தமன்,பைலட் பிரேம் நாத், திரிசூலம் ஆகியவை)

16.அமெரிக்க அரசின் கௌரவம், எகிப்தின் கெய்ரோ பட விழாவில் வெள்ளிப் பருந்து பரிசு, பிரான்ஸ் நாட்டின் அதியுயர் பட்ட மாகிய செவாலியே விருது ஆகிய வற்றையும் பெற்ற தனிப்பெரும் இந்திய நடிகராகவும் விளங்கு கிறார்.

இவ்வளவு சாதனைகளையும் ஆர்ப் பாட்டமின்றிச் செய்து முடித்துள்ள சிம்மக்குரலோனின் புகழ் எமது நெஞ்சிருக்கும் வரைக்கும் நிலைத் திருக்கும் எனக் கூறி அவரது புகழ் என்றும் வற்றாது நிரந்தரமாக இருக்கும் என அவரது 14 ஆவது நினைவு தினத்தில் கருத்தில் கொள் வோமாக.

**யாழ்.மாவட்ட**
**சிவாஜி ரசிகர்கள்**

# பசுமை வங்கியை அறிமுகம் செய்துள்ள கொமர்ஷல் வங்கி

முதல் தொகுதி புதிய தலைமுறை தன் னியக்க பணவைப்பு முறை இயந்திரங்களை கொமர்ஷல் வங்கி அறிமுகம் செய்துள்ளது. இந்த இயந்திர முறை காகித பாவனைக்கு முற்றாக முடிவு கட்டுகின்றது. பசுமை தொழில்நுட்பத்தில் வங்கி செய்து வரும் தொடர்ச்சியான முதலீட்டுக்கு இது மற் றொரு உதாரணமாகும்.

ராஜகிரிய கிளையில் அறிமுகம் செய்யப் பட்டுள்ள இந்தப் புதிய இயந்திரத்தில் ஒரே நேரத்தில் 200 நாணயத்தாள்களை ஏற்றுக் கொள்ளும் வசதி உள்ளது. இதன் மூலம் வாடிக்கையாளர்கள் 24 மணிநேரமும் வைப்புக்களைச் செய்யலாம். இரண்டு லட்சம் ரூபா வரை ஒரே தடவையில் சேமிப்புக் கணக்கிலோ அல்லது நடைமுறை கணக்கிலோ வைப்பிலிட முடியும்.

இதே இயந்திரத்தின் மூலம் கொமர்ஷல் வங்கியின் கிரடிட் கார்ட் தொடர்பான கொடுப்பனவுகளையும் செய்ய முடியும்.

இந்தப் புதிய பசுமை வங்கி முறையை வங்கியின் பிரதம செயற்பாட்டு அதிகாரி எஸ். ரெங்கநாதன் 2015 ஜூன் 30ஆம் திகதி தொடக்கி வைத்தார். கிளை வலையமைப் புக்கள் ஊடாக இத்தகைய மேலும் பல இயந்திரங்களை அறிமுகம் செய்ய திட்ட மிட்டுள்ளதாக வங்கி அறிவித்துள்ளது. இதன்மூலம் பண வைப்பு நடவடிக்கைகளின் போது கடதாசி பாவனை கணிசமாகக் குறைக் கப்படும்.



'இந்தப் புவியின் இயற்கை சூழலை பாதுகாக்க உதவும் வங்கியின் திட்டத்துக்கு இந்தப் புதிய இயந்திரத்தின் மூலம் எமது வாடிக்கை யாளர்களும் பங்களிப்புச் செய்ய முடியும். இதனூடாக பல வசதிகளையும் அவர்கள் அனு பவிக்க முடியும்' என்று ரெங்கநாதன் கூறி னார். 'இந்த முறை மூலம் பண வைப்புச் செய் கின்ற போது வைப்புச் சீட்டுக்களை நிரப்பத் தேவையில்லை. கரும பீடங்களில் நீண்ட நேரம் வரிசையில் காத்திருக்கத் தேவையும் இல்லை'என்று அவர் மேலும் கூறினார்.

ஐயாயிரம், ஆயிரம், ஐநூறு மற்றும் நூறு ரூபாய் என நான்கு வகை நாணயத்தாள் களை இந்த இயந்திரம் ஏற்றுக் கொள்ளும். பழுதான அல்லது சேதமடைந்த நாணயத் தாள்களயும் ஏனைய வகை வெளிநாட்டு நாணயத்தாள்களயும் இயந்திரம் ஏற்றுக் கொள்ளாது. நிராகரிக்கப்படும் நோட்டுக்கள் இயந்திரத்தின் நிராகரிப்பு பிரி வின் ஊடாக உடனடியாக வெளியேற்றப்படும். அதே போல் நாணயக் குற்றிகளும் ஏற்றுக் கொள் ளப்பட மாட்டா.

கிரடிட் கார்ட் கொடுப்பனவுகளை செலுத் தும் வாடிக்கையாளர்கள் அந்த கார்ட்டை உள்ளே செலுத்தி கொடுப்பனவுகளை செலுத்தும் தெரிவு உள்ளது. அல்லது இயந் திரத்துக்குள் பணத்தை செலுத்து முன் தங் களது கார்ட் இலக்கங்களைப் பதிவு செய் தும் மேற்படி கொடுப்பனவுகளை செய்யலாம். ஒவ்வொரு கொடுப்பனவுகளும் இயந்திரத் தில் உள்ள திரையின் மூலம் ஊர்ஜிதம் செய்யப்படும். அதேபோல் ஒவ்வொரு வைப்புக்குமான பற்றுச் சீட்டு ஒன்றையும் இயந்திரம் வழங்கும்.

இலங்கையின் மிகப் பெரிய தனியார் வங்கியான கொமர்ஷல் வங்கி நாடு முழு வதும் 243 கிளைகளைக் கொண்டுள்ளது. இவற்றுள் 60க்கும் மேற்பட்ட கிளைகள், வங்கி விடுமுறை தினங்களிலும் திறந்தி ருக்கும். 614 ஏ.ரி.எம் இயந்திர வலைய மைப்பையும் வங்கி கொண்டுள்ளது. இலங் கையில் தனியொரு வங்கி கொண்டுள்ள மிக விசாலமான பணப்பரிமாற்ற வலைய மைப்பு இதுவாகும்.

அதிகமான வாடிக்கையாளர்களை இலத்திர னியல் வங்கிப் பழக்கத்துக்கு திசை திருப்பி காகித பாவனையற்ற ஒரு சமூகத்தை உருவாக்கும் முயற்சிகளுக்கு மேலதிக மாக கொமர்ஷல் வங்கி சுற்றாடல் தொடர்பான பல முயற்சிகளை மேற் கொண்டுள்ளது. (த)

## பொதுத்தேர்தல் மக்களுக்கானதா? அரசியல்வாதிகளுக்கானதா?

நாட்டில் மக்களின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காகத் தேர்தல்கள் இடம்பெறுவதில்லை. அரசியல்வாதிகளின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகவே அவை இடம்பெற்று வருகின்றன.

தற்போது இடம்பெறப்போகும் பொதுத்தேர்தல் கூட மக்களின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக இடம்பெறவில்லை. ஏனென்றால் தேர்தல் இடம்பெற வேண்டுமென மக்கள் எங்குமே போராட்டம் நடத்தவில்லை. இந்த நிலையில் அரசியல்வாதிகள் தமது வசதிக்கு ஏற்றாற்போன்று தேர்தலுக்கு ஏற்பாடு செய்துள்ளனர்.

யாழ் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் ஒரு சிலர் தமது நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக முன்னாள் போராளிகளைப் பயன்படுத்துவது மனதை நெருடுகின்றது. இறுதிப்போரில் உயிர் தப்பியதே பெரிய விடயம். அதிலும் போராளிகளாக இருந்து சமுதாயத்தில் ஒன்றிணைந்து வாழ்வதென்பதே பெரிய விடயம். அரசின் கழுகுப் பார்வை எந்த நேரமும் இவர்களை வட்டமிட்டுக் கொண்டேயிருக்கும். இந்த நிலையில் தமது வாழ்க்கையையும் கொண்டு செல்ல வேண்டிய இக்கட்டான சூழ்நிலையில் இவர்கள் தவித்து வருகின்றனர்

இந்த நிலையில் அரசியலில் நுழைவதென்பது இவர்களுக்குக் கடினமானதொன்று. ஏற்கனவே புலிகளையும், முன்னாள் போராளிகளையும் வைத்து இனவாதப் பரப்புரைகள் தெற்கில் இடம்பெற்று வருகின்றன. இந்த நிலையில் முன்னாள் போராளிகளை அரசியலில் ஈடுபடுத்துவது, இனவாதிகள் தமது நோக்கத்தை நிறைவேற்றுவதை இலகுவாக்கிவிடும்.

ஆகவே முன்னாள் போராளிகள் விடயத்தில் கவனத்துடன் செயற்பட வேண்டிய காலமிது.

மேலும் பதவியொன்றில் அமர்ந்திருப்பவர்கள் அதற்கு மேல் நிலையில் காணப்படும் வேறொரு பதவியை அடைவதற்கு முயற்சி செய்யும் நிலையும் இங்கு காணப்படுகின்றது. இந்த நிலை தவிர்க்கப்படல் வேண்டும். ஒருவருக்கு ஒரு பதவி என்பதே விதியாக இருத்தல் வேண்டும். எவருமே தமக்குரிய பதவிக்காலம் முடிந்தவுடன் வேறொரு பதவிக்குப் போட்டியிடுவதே பண்பான செயலாகும்.

இடம்பெறப்போகும் நாடாளுமன்றத் தேர்தல் அமைதியாகவும், சுமுகமாகவும் இடம்பெறுவதற்கு அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும். இதைவிடுத்து அடாவடித்தனங்களில் இறங்கி வாக்கு வேட்டையாடுவது அநாகரிகச் செயலன்றோ!

***செ.சுதாகரன் மூளாய்***

## இவர்களைக் கட்டுப்படுத்துவது யார்? (இதோ எனது பதில்)

## வாசகர் திருமுகம்



திருமதி சர்மிலா அவர்கள், 16.07.2015அன்று எமது உதயன் வாசகர் திருமுகம் ஊடாக ஒரு அதர்ம காரியம் நடந்துள்ளதாகவும் அதனைபோல பல இடங்களில் பெண்களுக்கு அபகீர்த்தியும் ஆபத்துக்களும் அரங்கேற்றப்படுவதாகவும் அதனை கட்டுப்படுத்துவது யார்? என்றும் மிகவும் மனவேதனையுடன் எடுத்தியம்பியதை படித்த கணப்பொழுதில் நான் என் மனக்குமுறலுடனும் இக் கடிதத்தை அனுப்புகிறேன்.

தாம் அன்றைய தினம் குறிப்பிட்டது போல அயோக்கியத்தனமும் சண்டித்தனமும் மட்டுமல்லாது காமாந்தகர்களின் பிடிக்குள் இன்று யாழ் மண் கிடந்து சொல்லொணாத்துயரை அனுபவிக்கிறது என்பது 100% உண்மையே! இதில் இருந்து எப்படி எமது அன்பின் உறவுகளை காப்பது என தினமும் நாம் ஒவ்வொருவரும் துடிக்கிறோம். ஒரு சில பணபலம் படைத்தவர்கள் தம்மை தம் வசதி வாய்ப்பைக் கொண்டு காத்து விடுகிறார்கள். ஆனால் எத்தனையோ பாமரர்களும் ஏழைகளும் பற்பல துன்பங்களை அனுபவித்துக் கொண்டு கோவில் படிகளை தம் மௌனமான கண்ணீரால் கழுவி வருவதை நான் உணர்ந்துள்ளேன். பகவத் கீதையில் கண்ணன் சொல்வது....

எங்கெல்லாம் அதர்மம் தலை தூக்குகின்றதோ அங்கே நான் தர்மத்தை காப்பதற்கு அவதரிப்பேன் என்றான்.

இன்று நம்மை அவ்விதம் காக்கும் ஒரே ஒரு காவலனாக நான் ஐயா, மதிப்புக்குரிய மேல் நீதிமன்ற நீதிபதிஇளஞ்செழியனையே நினைக்கிறேன். எதிர்வரும் தேர்தலின் பின் இந்த உண்மைக் காவலனையும் ஒருவேளை எம்மிடம் இருந்து பறித்தாலும் பறித்து விடுவார்களோ தெரியாது. ஆனால் இன்று நாம் ஒரு கணமும் தாமதியாது எமது குறைகளை அந்த நீதி தேவனிடம் உடனுக்குடன் சமர்ப்பணம் செய்யலாம். இது என் மனதின் ஒரே ஒரு நம்பிக்கை முடிவாகும்.

எனது முடிவை யாழ் மண்ணில் வாழும் எந்த தர்மவானும் தன் சுயநலம் பாராது எங்கெல்லாம் அதர்மம் தலை தூக்குகின்றதோ... சற்றும் தாமதியாது ஐயாஇளஞ்செழியனுக்கு தகவல் அறிவியுங்கள்.

எனது இந்த முடிவு ஏற்புடையது என உதயன் ஆசிரியர் சமூகம் ஏற்றுக்கொள்ளும் என்றால்.... இளஞ்செழியன் ஐயாவுக்கு கடிதம் அனுப்பும் முகவரியை தமது பத்திரிகையில் தொடர்ந்து பிரசுரித்து கொண்டு வரலாம் என கேட்டுக் கொள்கின்றேன்.


அன்பானவர்களே! நாம் அரசியலால் ஆளப்படவும் வேண்டாம், ஆயுதத்தால் ஒடுக்கப்படவும் வேண்டாம், எம்மை நிம்மதியாக வாழவிடுங்கள் அது போதும். நாம் எமது சொந்தபந்தங்களுடன் வாழும் இந்த சிறிய நிம்மதியை மட்டும் சிதைத்து விடாதீர்கள். பெண் களுக்கு அநீதி செய்யும் எண்ணம் உள்ளவர்கள் சற்று, உன் அம்மாவை நீ சிந்தித்து பார்க்கமாட்டாயா?

அவளும் ஒரு பெண்தானே பணம் இன்று உன் குணத்தை மாற்றியதா? போதை தலைக்கேறியது உன் உறவுகளை கூடவா மதிக்கத் தவறியது? அலுவலகங்களில் பணிபுரியும் எத்தனையோ பெண்கள் தம் குடும்பத்தை வாழ்விப்பதற்காக தம் சுய கௌரவத்தை பறிகொடுக்க நேர்கிறதே! அவர்களின் கண்ணீர் இனி சும்மா விடுமா? தயவு செய்து தவறு செய்பவர்கள் இனி திருந்த வேண்டும். இல்லை என்றால்....

இனி மூலை முடுக்குகளில் இருந்து பறக்கும் ஈசல் போல யாழ் மண்ணின் அனைத்து பாகங்களில் ஏற்படும் சகல அதர்ம விவரங்களும் ஒன்று விடாமல் ஐயா! இளஞ்செழியனுக்கு உடனுக்குடன் தெரிவிக்கப்படும் என்று இக்கடித மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

***கே.சர்மிலாவுக்கு ஆதரவு தெரிவிப்பவன்***
***VSV நல்லூர்***

### கேலிச் சித்திரம்



நன்றி: லங்காதீப

# யார் நிலத்தை யார் கேட்பது?

விடுவிக்கப்பட்ட பகுதிகளில் மக்கள் இன்னமும் வந்து குடியமரவில்லை. பின்னர் ஏன், மேலும் காணிகளை விடுவிக்கச் சொல்லிக் கேட்கின்றீர்கள். இவ்வாறு இராணுவ அதிகாரி, பிரதேச செயலாளர்களைப் பார்த்துக் கேள்வி எழுப்பியிருக்கின்றார்.

பலாலியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடந்த கூட்டத்தில்தான், இந்தக் கேள்வியை இராணுவ அதிகாரி கேட்டிருக்கின்றார்.

வலி.வடக்கு மக்களின் காணி மீட்புப் போராட்டம் என்பது இன்னமும் முடிவுக்கு வரவில்லை. 1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த மக்களின் வாழ்வுத் துயரம் இன்னமும் முடிவுக்கு வரலில்லை. 2006 ஆம் ஆண்டு இடம் பெயர்ந்த சம்பூர் மக்களின் நில மீட்பு 9 ஆண்டுகளிலேயே வெற்றியில் முடிவடைந்துள்ளது.

காணி விடுவிப்பு தொடர்பில் கடந்த ஆட்சியில் பல ஏமாற்றங்கள் நிகழ்ந்திருந்தன. மஹிந்த அரசுடன் இணக்க அரசியல் நடத்திய தமிழ் தலைமைகளாலும், காணி விடுவிப்புக்களில் எந்த காத்திரமான வெற்றியையும் பெற்றுக் கொடுத்திருந்திருக்க முடியவில்லை. மாறாக மக்களை ஏமாற்றும் நடவடிக்கைகளிலேயே ஈடுபட்டிருந்தனர். மைத்திரிபால தலைமையிலான புதிய அரசு அமைந்ததும், வலி.வடக்கு காணி விடுவிப்பு ஓரளவு சாத்தியமாகியது. ஆயிரம் ஏக்கர் விடுவிக்கப்பட்டது. அது நல்ல விடயமாக அமைந்தது.

காணிகள் இனிமேல் விடுவிக்கப்படாது என்றிருந்த மக்களுக்கு, ஆயிரம் ஏக்கர் நிலம் விடுவிப்பு புதுத் தெம்பூட்டியது. தங்களின் காணிகளும் படிப்படியாக விடுவிக்கப்படும் என்று நம்பியிருந்தனர். ஆனால், கடந்த ஜூன் மாதம் இராணுவ பேச்சாளர், காணிகள் விடுவிப்பு தொடர்பில் அரசியல் ரீதியாகவே முடிவெடுக்க வேண்டும் என்று தெரிவிக்க, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவோ, இராணுவத்தினரே காணி விடுவிப்பு தொடர்பில் முடிவு செய்ய முடியும் என்று தெரிவித்திருந்தார். இதன் பின்னர் காணி விடுவிப்பு தொடர்பில் மக்களின் நம்பிக்கை தளர்ந்திருந்தது.

இவ்வாறானதொரு நிலையிலேயே பலாலியில் கலந்துரையாடல் இடம்பெற்றது. அதில், வளலாயில் எஞ்சிய பகுதி காணியை விடுவிக்குமாறு கேட்டபோதே, இராணுவத்தினர் விடுவிக்கப்பட்ட பகுதியிலேயே வந்து மக்கள் குடியமரவில்லை. பின்னர் ஏன் எஞ்சிய பகுதிகளைக் கேட்கின்றீர்கள் என்று பதில் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இராணுவத்தினர் ஏதோ தங்களின் சொந்தக் காணிகளை விடுவிக்குமாறு அரச அதிகாரிகள் கேட்பதாக நினைத்துக் கொண்டு பதில் வழங்கியிருக்கின்றனர். அரச அதிகாரிகள் கேட்டது, இராணுவத்தினர் அடாவடியாக - அத்துமீறி - அடாத்தாக - ஆயுத முனையில் பறித்து வைத்திருக்கும் மக்களின் காணியை விடுவிக்குமாறே கேட்டனர்.

இந்த சிறிய துண்டு காணி விடுவிப்புக்கு இவ்வளவு கேள்விகளைக் கேட்கும் இராணுவத்தினர், விடுவிக்கப்பட்ட பகுதிகளில் மக்கள் முழுமையாக குடியமர்ந்தால், வலி.வடக்குப் பிரதேசம் முழுவதையும் மக்களிடம் கையளித்து விட்டு தங்களின் ஊர்களுக்கு திரும்பிப் போவார்களா ?

மக்கள் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் ஏன் குடியமரவில்லை. அவர்களின் காணிகளை இராணுவக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும்போது, அந்த மக்களின் வீடுகளை இடித்து தரைமட்டமாக்கினர். இப்போது கட்டாந் தரையைக் காட்டி அதில் வந்து குடியேறுங்கள் என்று கேட்பது நியாயமா ? அந்த மக்கள் குடியமர்வதற்குரிய சூழல் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கின்றதா ? இராணுவத்தின் முற்றுகைக்குள் எந்த உதவிகளும் இன்றி - கட்டாந் தரையில் - மின்சாரம் இன்றி - இரவுப் பொழுதை கழிக்க முடியுமா ? அந்த மக்கள் இலகுவாகச் சென்று வரக் கூடிய பாதைகளை மூடி வைத்துக் கொண்டு, மக்கள் வந்து குடியேறவில்லை என்று கேட்பதில் என்ன நியாயம் இருக்கின்றது ?

முதலில், அந்த மக்கள் குடியேறவில்லை என்பதற்காக, அடாத்தாகப் பறித்த காணிகளை விடுவிக்க மறுப்பதில் எந்த நியாயமும் இராணுவத்தினரிடம் இல்லை.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் 2003 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட பொங்குதமிழில் முன்வைக் கப்பட்ட கோஷத்தை மீள இங்கு வலியு றுத்த வேண்டியிருக்கின்றது. நாங்கள் எங் கள் வீடுகளுக்குச் செல்ல நீங்கள் உங்கள் வீடுகளுக்குச் செல்லுங் கள்.

பத்தி எழுத்து

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நல்லாட்சி நிலைபெற வழி பிறக்க வேண்டும்

வடக்கில் மீண்டும் புலிகள் தலை தூக்கி விட்டார்கள். எங்கள் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்றது போன்று, வெளியிடங்களில் இருந்து சிங்கள மக்கள் அங்கு போகமுடியாது. அந்த அளவுக்கு அங்கு வன்முறைகள் ஆரம்பமாகிவிட்டன.

இவ்வாறு நாம் எதிர்பார்த்தவாறே அபாண்டமான பொய்யுரைகளை நிகழ்த்திக்கொண்டு, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர்கள் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை தமது பரப்புரையை அநுராதபுரத்தில் தொடங்கியிருக் கிறார்கள்.

புலிகளை அழித்துவிட்டோம் என்று கூறி முன்னைய தேர்தல்களின்போது பேரின சிங்கள மக்களின் வாக்குகளைப் பெற்று பதவிகளில் அமர்ந்து கொண்டவர்கள், ஜனவரி 8ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலில் தோல்வி கண்டதன் பின்னர், மீண்டும் புலிகள் தோன்றிவிட்டதாக--

புதிய அரசின் மீது பழி யைப் போட்டுக்கொண்டு அதன்மூலம் பேரினமக்கள் மத்தியில் புலிப் பூச்சாண்டி அச்சுறுத்தலை உருவாக்கப் பார்க்கிறார்கள். அதன் மூலம் அந்த மக்களின் வாக்குகளை அபரி மிதமாகப் பெற்று விடலாம் என்பது அவர்களின் கணிப்பும் இலக்கும்.

ஜனாதிபதித் தேர்தலின்போது இவர்கள் அளவுக்கு அதிகமாக ஜோதிடர்களின் மீது நம்பிக்கை வைத்து, தவறான கணக்குகளைப் போட்டுக் கொண்டு, தேர்தலில் குதித்து மண் கவ்வினார்கள்.

அதன் பிறகு பல்வேறு விதமான வியூகங்களையும் தந்திரோபாயங்களையும் பிரயோகித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை தங்கள் பக்கம் ஈர்த்துக் கொள்ள பெரும் பாடுபட்டார்கள். தோல்வியுற்ற ராஜபக்ஷ, பௌத்த கோயில்கள் தோறும் மலர்த் தட்டுக்களுடன் சென்று அங்கு கூடிய மக்களின் அனுதாபத்தைப் பெற்றுக்கொள்ள முயன்ற அதேவேளை அரசியல் மேடையில் ஏறாமலே, தமது அடிவருடி களை வைத்து இரகசியமாகக் காய்நகர்த்தி வந்தார். அதன்படி மைத்திரிபாலவும் நெருக்குதலுக்குள்ளாகி அவருக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் வேட்பாளராகப் போட்டியிட அனுமதி அளிக்க இசைந்தார்.

இது மஹிந்த ஆதரவாளர்களுக்கும் மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்தது. மைத்திரி பலவீன மானதோர் மனிதர் என்றும் தங்கள் இராஜதந்திரம் அல்லது நரித்தந்திரம் பலித்து விட்டது, மைத்திரி தம் வலையில் வசமாக மாட்டிக் கொண்டார் என்றும் புளகாங்கிதம் அடைந்தார்கள். அதுவரை மிக இழி வாக விமர்சித்தவர்கள் எல்லாம், தலைமேல் வைத்து புகழ ஆரம்பித்தார்கள்.

அதற்கு நேர்மாறாக, அதுவரை சிறிசேனவுடனிருந்து ஆதரித்தவர்கள் ஆச்சரியத்தில் மூழ்கிவிட்டமை ஒருபுறமிருக்க, அவருக்கு ஏற்பட்ட மன மாற்றத்தை அவர்களால் புரிந்து கொள்ள முடியாமல் போயிற்று. எனவே அவர்களில் பலரும் ஐ.தே.க. தலைமை யிலான நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியில் இணைந்து கொள்ள முடிவெடுத்தார்கள்.

இதற்கிடையில், மஹிந்த ராஜபக்ஷவுக்கு பிரதமருக்கான வேட்புமனு வழங்கப்படமாட்டாது என்பதில் சிறிசேன காட்டிவந்த விடாப்பிடியான நிலைப்பாட்டை தகர்த்தெறிந்து, அவரை கட்சியின் தலைமைப் பதவியிலிருந்தே தூக்கி எறிவதற்கான முயற்சிகளில், மஹிந்த தரப்பினர் மேற்கொண்ட முயற்சிகளுக்கு நீதிமன்றத்தடை மூலம் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சூழ்நிலையில் தான்கடந்த வாரம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர் என்ற முறையில் விடுத்துள்ள அறிவித்தலானது மஹிந்த தரப்பிலானவர்களுக்கு மீண்டும் பெரும் சவாலாக வெளிவந்துள்ளது.


முக்கியமாக வரும் பொதுத் தேர்தலில் தாம் எந்தக்கட்சிக்கும் சார்பாக செயற்படாமல் நடுவுநிலை வகிக்கப்போவதாக குறிப்பிட்டுள்ளதுடன், தேர்தலுக்குப்பின்னர் யாரை பிரதமர் பதவியில் அமர்த்துவது என்பதை முடிவு செய்வார் என்றும் கட்சியில் மஹிந்தவை விட சிரேஷ்ட உறுப்பினர்கள் பலர் இருக்கிறார்கள் என்பதாகவும் தெரிவித்திருந்தார்.

இவைகள் எல்லாவற்றுக்கும் மேலாக, கடந்த 8ஆம் திகதி இந்த நாட்டு மக்களால் ஏற்படுத்தப்பட்ட ஜனநாயக புரட்சியையும் அதற்காக முன்வைக்கப்பட்ட திட்டங்களையும் முறியடிக்க எடுக்கப்படும் எந்த முயற்சிக்கும் இடம்தரப்பட மாட்டாது. அதற்கு எதிராக நடத்தப்படும் சதி முயற்சிகள் முறியடிக்கப்படும் என்றும் அவர் உறுதியளித்துள்ளார்.

இவற்றை முன்னெடுக்கும் வகையில் செயற்படுவதற்கு தமக்கு ஆதரவளிக்கக் கூடியவர்களையே மக்கள் தெரிவு செய்யவேண்டும் என்றும் கேட்டுள்ளார்.

ஜனாதிபதியின் இந்தக் கருத்தை, நாட்டு மக்கள் சரியாகப் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும். அதன் மூலம் இந்த நாட்டில் மீண்டும் நல்லாட்சியொன்று மலர்ந்து, சகல மக்களும் தமது மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக உரிமைகளைப் பேணி அமைதியாகவும் நிம்மதியாகவும் வாழ்வதற்கு வழி பிறக்கும் என்று எதிர்பார்ப்போம்; நம்புவோமாக.

# இலங்கை மக்களின் கர்மவினைப் பயன் இன்னும் 30 நாள்களில் தெரிந்துவிடும்



■ சரா

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்த கடந்த 13 ஆம் திகதியன்றே அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள் தமது எதிராளிகள் மீது சேறு பூசுவதை கடும் கண்டனக் கணைகளைத் தொடுப்பதை ஆரம்பித்திருந்தனர்.

இதனிடையே கடந்த 14 ஆம் திகதி பிற்பகலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி செயலகத்தில் விசேட ஊடகச் சந்திப்பொன்றைக் கூட்டி உரையாற்றியிருந்தார். அந்த உரையில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தொடர்ச்சியாக தோல்விகளையே சந்திப்பார் எனவும் அவருக்கு வேட்புமனு வழங்கும் விடயத்தில் தாம் எதிராகவே நின்றதாகவும் அவருடன் எந்தவொரு உறவும் தமக்கில்லை எனவும், தெரிவித்திருந்தார். இந்தத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வெற்றி பெற்றாலும் கூட தாம் மஹிந்த ராஜபக்ஷவுக்கு பிரதமர் பதவியை வழங்கப் போவதில்லை எனவும் அவர் தமக்கு அடித்த அடி வேறு எந்தவொரு ஜனாதிபதிக்கும் விழுந்திருக்க மாட்டாது எனவும் தெரிவித்திருந்தார். எவ்வாறான போதிலும் ஜனாதிபதித் தேர்தலொன்றில் தோல்வி கண்ட ஒரேயொரு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தான் எனவும் கடந்த ஜனவரி 8 ஆம் திகதி தோல்வியைத் தழுவிக் கொண்ட அவர் எதிர்காலத்திலும் கூட நிச்சயமாக தோல்விகளையே தழுவிக் கொள்வார் எனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார். அடுத்து வரும் நாடாளுமன்றத் தேர்தல் பெறுபேற்றினுள் தாம் எதிர்பார்ப்பது ஜனவரி 8 ஆம் திகதிய கொள்கைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான பெரும்பான்மைப் பலத்தைப் பெறுவது மட்டுமே எனவும், அது எந்தக் கட்சியென்றாலும் தமக்குப் பிரச்சினையில்லை எனவும் அவர் தெரிவித்திருந்தார். எதிர்வரும் பொதுத்தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவுடன் எந்தவொரு கொடுக்கல் வாங்கலும் தமக்கில்லையெனவும் ஜனவரி 8 ஆம் திகதியன்று நிலவியிருந்த விரோதம் இன்றும் அவ்விதமே நிலவுவதாகவும் சுதந்திரமான நீதியான தேர்தலொன்றை நடத்தி முடிப்பதற்காக தேர்தல்கள் ஆணையருக்கும் பொலிஸ்மா அதிபருக்கும் தமது முழுமையான ஒத்துழைப்பை வழங்கி நடுவுநிலைமையில் நின்று கருமமாற்றுவதாகவும் தாம் சுதந்திரக் கட்சிக்குத்தலைமைத்துவம் வழங்கியது பெரும் தவறு என்று அவர் தெரிவித்திருந்தார். அதேவேளை மத்திய வங்கி ஆளுநரை பதவியை இராஜினாமாச் செய்துவிடுமாறு கூறும்படி தாம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பணிப்புரை விடுத்திருந்ததாகவும் அங்கு தெரிவித்திருந்தார். மேலும் தம்மீதுள்ள குற்றச்சாட்டுக்கள் விரைவிலேயே விலகிச் செல்லும் எனவும் அவர் தெரிவித்தார். ஜனாதிபதி மனம் திறந்து தமது உள்ளக்கிடக்கையை இவ்விதம் வெளிப்படுத்தியிருக்கும் நிலையில்– ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லவுள்ள ஜனாதிபதியின் பிரதிநிதியாக சுதந்திரக் கட்சியின் சார்பில் அங்கம் வகிக்கும் அனுர பிரியதர்ஷன யாப்பாவும் உள்ளடங்கும். அந்த விசேட குழு அநுராதபுரத்தில் இடம்பெறும். மஹிந்த ராஜபக்ஷவின் கன்னிக் கூட்டத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும் பங்கேற்கச் செய்வதற்கும் திட்டமிட்டிருந்தனர். ஆனாலும் நீதிமதின்றத் தடையுத்தரவின் காரணமாக அந்த மத்திய செயற்குழுவை நிறுவும் கூட்டம் கைகூடாது போயுள்ளது என்பது ஒருபுறமிருக்க மஹிந்தவுடன் மைத்திரிபால சிறிசேனவையும் ஒருங்கிணைத்து விடுவதற்கு முயல்வது எந்தவிதத்தில் நியாயமானது என்ற கேள்விக்கும் இடமிருப்ப தோடு மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான தமது சுயலாப அரசியல் சம்பாத்தியத்துக்குதுணை போக ஜனாதிபதி மைத்திரிபாலவை இன்னமும் பயன்படுத்திக் கொள்வதற்கு மஹிந்த ராஜபக்ஷவின் அராஜக நிர்வாகத்துக்கு துணையாக நின்றிருந்த இந்தப் பழைய கூட்டு முன்னணி அரசியல்வாதிகள் முயல்வது தெளிவாகவே புலப்படுத்துகிறது.

இந்தளவுக்கும் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட இந்தப் பழைய கூட்டம் தமக்கு எதிராகவுள்ள குற்றச் சாட்டுக்களில் இருந்தும் தப்பித்துக் கொள்வதற்காகவே எப்பாடுபட்டேனும் மீண்டும் நாடாளுமன்றத்தில் புகுந்து கொள்வதற்கு பகீரதப் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகிறார்கள் என்பதே அப்பட்டமான உண்மையாகும். இத்தகைய ஊழல் மோசடிப் பேர்வழிகளான பழைய கூட்டமே மீளவும் நாடாளுமன்றத்தில் புகுந்து கொள்ளவிருப்பது புலப்படுவதாகவும் அத்தகையோருக்கு வேட்புமனுக்களை வழங்குவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு 13 ஆம் திகதிக்கு முன்னராகவே மல்வத்தை மகாநாயக்க தேரர் ஊடகங்கள் வாயிலாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு வேண்டுகோள் ஒன்றை விடுத்திருந்தமையை இந்தச் சந்தர்ப்பத்தில் ஞாபகப்படுத்த வேண்டி நேர்கிறது. அடிவாங்கிக் களைத்துப்போன மக்கள் தமது விடிவு[illegible]க்காக சிந்தித்துச் செயற்பட்டு தேர்ந்தெடுக்கும் சில நல்ல அரசியல் தலைவர்கள் ஏனோ தெரியவில்லை. புத்தியைப் பறிகொடுத்து சரியான சந்தர்ப்பத்தில் இடறி விழுந்து விடுகின்றனர். இதை அத்தகைய நல்ல தலைவர்களைத் தேர்ந்தெடுத்தும் கூட தமது கர்ம வினைகளை அனுபவிக்க வேண்டியுள்ளநாட்டுமக்களின்தலைவிதியா? என்றே எண்ணத் தோன்றுகின்றது. மறுபுறத்தில் சுதந்திரக்கட்சிக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும் தலைமையேற்று தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடிய தமது கண்முன்னே எதிர்த்தனங்களை அரங்கேற்றி வந்திருந்த இந்த இருபக்கம் பாடும் துன்மார்க்க அரசியல்வாதிகளை என்றோ கைகழுவி விட்டு தம்மை ஏற்று அரவணைத்து ஜனாதிபதிக் கதிரையில் அமர்த்தி வைத்த 62 லட்சம் மக்களின் ஏகோபித்த வரவேற்பைப் பெற்றிருந்த இன்றைய ஐக்கிய தேசிய முன்னணித் தரப்புக்களை நன்றிக்கடன் மறவாது அரவணைத்துச் சென்றிருந்தால் ஜனாதிபதி மைத்திரிபால இந்தளவு சோதனைகளுக்கும் வேதனைகளுக்கும் உள்ளாகவேண்டி நேர்ந்திருக்க மாட்டாது.



ஜனாதிபதியின் அந்தப் 14ஆம் திகதிய உரை கண்கெட்ட பின் சூரிய நமஸ்காரம் என்ற முதுமொழியையே ஞாபகப்படுத்துகின்றது. எவ்வாறோ நாட்டுமக்களின் கர்ம வினைப்பயன் எவ்வாறானது என்பது இன்னும் முப்பது நாள்களில் தெரிந்துவிடப்போகிறது.





# விதியின் விளையாட்டு

சிங்கள மூலம் – மவ்பிம
தமிழில் – வீ எஸ் ரீ

**மொத்தத்தில் மஹிந்தவுக்கு இந்த நாட்டின் ஜனாதிபதிப் பதவியை ஈட்ட வழியமைத்துக்கொடுத்தது ஐ.தே.கட்சியே. சந்திரிகா வின் அரசை வீழ்த்தி மஹிந்தவுக்கு எதிர்க் கட்சித் தலைவர் பதவியைப் பெற உதவி, அதனூடாக நாட்டின் பிரதமர் பதவியை அடைய வழிசமைத்துக் கொடுத்தது ஐ.தே. கட்சி. அதேபோன்று மைத்திரிபாலவை நாட்டின் ஜனாதிபதியாக்கி வைத்ததும் ஐ.தே.கட்சியே. தற்போது அந்த மஹிந்தவும் மைத்திரிபாலவும் ஐ.தே.கட்சியிடமிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்கான கடும் மோதலில் ஈடுபட நேர்ந்திருப்பது விதியின் விளையாட்டே.**

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி என்பதே மஹிந்ததான். மஹிந்தவுக்கு கடந்த ஜனாதிபதித் தேர்தலில் 58 லட்சம் வாக்குகள் கிடைத்துள்ளன என்று கடந்த ஆறு மாத காலமாக மஹிந்தவின் ஆதரவாளர்கள் தரப்பு மந்திர உச்சாடனம் செய்து வந்தது.

அப்படியானால், பிரதமர் பதவிக்கான வேட்பாளர் நியமனமுமின்றி, முதன்மை வேட்பாளர் நியமனமுமின்றி, வெறும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்காக மஹிந்த போட்டியிட முடிவெடுத்தது ஏன் என்பது பொது மக்கள் தரப்பிலிருந்து எழுப்பப்படும் கேள்வி.

இதிலிருந்து, மஹிந்தவின் ஆதரவாளர் தரப்பு கடந்த ஆறு மாதங்களாகக் காற்று ஊதி நிரப்பிய பலூனை மஹிந்தவே உடைத்து நாசப்படுத்தியுள்ளமை புலப்படுகிறது. தாம் சுதந்திரக்கட்சி சார்பாகவல்லாது தனித்துப் போட்டியிட்டால் தனக்கும் கிட்டக்கூடிய வாக்குகள் குறித்து தமது ஆதரவாளர்களை விட, மஹிந்த நன்கறிந்திருந்தார். தனியாகப் போட்டியிட்டால் தமக்கான மதிப்பின் தரம் வெளியாகி விடும் என மஹிந்த அஞ்சினார். இதனாலேயே மைத்திரிபால சிறிசேனவின் காலைப்பிடித்தோ, கையைப்பிடித்தோ மஹிந்த சுதந்திரக்கட்சி சார்பாகத் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பைப் பெற்றுக் கொண்டார். ஆனால் இது அவருக்கு மேலும் அரசியல் பின்னடைவுக்கே வழிவகுப்பதற்கானதொரு சமிக்ஞையாக அமைந்துவிட்டுள் ளது.

மஹிந்த விரல் சூப்பும் சிறு பிள்ளையல்ல, மஹிந்த ஒரு போதும் தோற்கடிக்கப்பட முடியாத ஒருவரென உருவாக்கப்பட்ட பிம்பத்தை நிஜமென நம்பியதொரு தரப்பினரின் வாக்குகள் மஹிந்த ஜனாதிபதித் தேர்தலில் ஈட்டிக்கொண்ட 58 லட்சம் வாக்குகளின் ஒரு பகுதியே. மஹிந்த ஈட்டிக்கொண்ட 58 லட்சம் வாக்குகளில் பெருமளவிலானவை இத்தகைய மனநிலை கொண்டிருந்த வாக்காளர்களது வாக்குகளாகும். இன்று அவர் தோற்கடிக்கப்பட்ட நிலையில், சாதாரண நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்காகப் போட்டியிடுவதால், மேற்குறிப்பிட்ட தரப்பினரது வாக்குகள் மஹிந்தவுக்குக் கிட்டும் எனக்கருத முடியவில்லை. அந்த வாக்குகளில் மீதமான பகுதி மஹிந்தவின் பிரதிமைக்குக் கிட்டிய வாக்குகளாகும். போர் வெற்றிக்குப் பின்னர் மஹிந்தவின் வீரர் என்ற பிரதிபிம்பத்துக்கு கல்லெறியக்கூட எவருக்கும் துணிவு இருந்ததில்லை. ஊடகங்கள்கூட மஹிந்தவை விரல் நீட்டி விமர்சிக்க அஞ்சின. அரச சார்பு ஊடகங்கள் மட்டுமன்றி சுதந்திர ஊடகங்களும் இதில் அடக்கம். மட்டான எண்ணிக்கை கொண்ட வாசகர்களைக் கொண்டுள்ள சமூக ஊடகங்களே மஹிந்தவுக்கு எதிரான விமர்சனங்களை முன்வைத்தன. மஹிந்தவை மட்டுமல்லாது மஹிந்த குடும்பத்தைச் சேர்ந்த பஸில், கோத்தபாய, நாமல் ராஜபக்ஷ மீது கூட விமர்சனங்களை முன்வைக்க அரச சார்பு மற்றும் சுதந்திர ஊடகங்கள் அஞ்சின. ஆனால் மஹிந்த தோற்கடிக்கப்பட்டதன் பின்னரான கடந்த ஆறுமாத காலத்தைப் பார்த்துக்கொண்டிருக்கும் போதே மஹிந் தவின் பிரதிபிம்பம், மதிப்பு படிப்படியாக நலிவு கண்டது. மஹிந்த மற்றும் அவரது குடும்பத்தவர்களுக்கு எதிரான ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்கள் நாட்டின் மூலை முடுக்கெல்லாம் முன்னெடுத்துச் செல்லப்பட் டன. சகலதுறை ஊடகங்களும் பெருமெடுப் பில் அவை குறித்துப் பிரலாபித்தன. இன்று மஹிந்தவின் வீரதீர பிரதிபிம்பம் ஒரேயடியாக வீழ்ச்சி கண்டுள்ளது. எனவே அன் றைய மஹிந்தவின் பிரதிபிம்பத்தால் காந்தமெனக் கவரப்பட்ட வாக்காளர்களது வாக்குகள் இன்று மஹிந்தவுக்குக் கிட்டுமா என்பது கேள்விக்குறியே. அந்த வகையில் அன்று அவர் ஈட்டிய 58 லட்சம் ஆதரவு வாக் குகளில் இன்று வீழ்ச்சி ஏற்பட்டாக வேண் டும்.

மஹிந்த அன்று அந்த 58 லட்சம் ஆதரவு வாக்குகளை ஈட்ட முடிந்தமைக்கான மற்றொரு காரணம், அவருக்கு அதிகார பலம் வாய்த்திருந்தமையேயாகும். 58 லட்சம் வாக்குகளை ஈட்ட அவர் நாடளாவிய ரீதியில் தமது அதிகார பலத்தைப் பயன்படுத்தினார். பாதுகாப்புப் படையினர், பொலிஸார், அரசஅதிகாரிகள் ஆகிய தரப்பினரை மட்டுமன்றி அரச ஊடகங்களையும் அதற்காக அவர் பயன்படுத்திக் கொண்டார். இவை யாவற்றுக்கும் மேலாக மஹிந்தவின் 58 லட்சம் வாக்குகளின் இயந்திரமாக அமைந்தது சமுர்த்தி உதவி பெறும் குடும்பத்தவர்களது வாக்குகளே. நாட்டிலுள்ள 16 லட்சத்துக்கு மேற்பட்ட சமுர்த்திப் பயனாளிகள் குடும்பங்களைச் சேர்ந்த வாக்காளர்கள் 25 முதல் 30 லட்சம் வரையானவர்களது வாக்குகள் மஹிந்தவுக்கே கிட்டின. சுதந்திரக்கட்சியின் தேர்தலை வென்று கொடுக்கும் இயந்திரமான இந்த சமுர்த்தி பயனாளிகள் தரப்பை எஸ்.பி. திஸநாயக்கா உருவாக்கி வைத்தபோதிலும் அதற்கு எண்ணெய் பூசி திருத்தம் செய்து வைத்தவர் பஸில் ராஜபக்ஷவே. இன்று அந்த இயந்திரம் சஜீத் பிரமேதாசவின் கைகளைச் சென்றடைந்துள்ளது. இன்று சமுர்த்தித் திட்டத்தின் பெரும்பாலான பிரிவு கள் சஜீத் பிரேமதாசவின் அமைச்சின் கீழ் வந்துள்ளன.

தமது வாக்கு வங்கியைப்பலப்படுத்தும் சமுர்த்தித் திட்டம் தமது கைகளை விட்டுச் சென்றதால் ஏற்பட்ட பின்னடைவைக் கருத் தில் கொண்டே அண்மைக்காலமாக மஹிந்தவும் அவரது தரப்பினரும் சஜித் பிரேமதாசவுக்கு பல தரப்பட்ட இடையூறுகளை ஏற்படுத்தி வருகின்றனர். சமுர்த்தித் திட்டத்துக்கான நிதியை அபகரிப்பதாக சஜித்துக்கு எதிராக அந்தத் தரப்பினர் வழக்குத் தொடுத்ததையடுத்து சஜித் அந்த நிதியை சமுர்த்திப் பயனாளிகளுக்கு வீடமைக்க கடன் வழங்கும் திட்டத்துக்கு ஒதுக்கிக் கொடுத்தார். அந்த வேளை முதல் பஸிலின் சமுர்த்திச் செயலணி நலிவுற ஆரம்பித்தது. அந்தவகையில் மஹிந்தவின் 58 லட்சம் ஆதரவு வாக்குகளில் ஒரு பகுதியான சமுர்த்திப் பயனாளிகளது வாக்குகள் இந்த முறை மஹிந்தவின் கைகளை விட்டுத் தவற நேர்ந் துள்ளது.

மஹிந்தவின் மற்றொரு பெரும் சக்தியான உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகளுக்கு இன்று அதிகாரம் அற்றுப் போயுள்ளது. அவற்றின் ஆயுள்காலத்தை மைத்திரிபால நீடிக்காததன் காரணமாக உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள் இன்று ஓய்வூதியம் பெற்றுக்கொண்ட பொலிஸ் காரர்களின் நிலைக்கு உள்ளா கியுள்ளனர். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அவர்களூடாகக் கிட்டிய ஆதரவு வாக்குகள் இன்று மஹிந்தவின் கைகளை விட்டுப் போயுள்ளன.

இத்தகைய பின்னணியில் மஹிந்தவால் இந்தத் தேர்தலில் எவ்வாறு வெற்றி பெற இயலுமென்ற கேள்வி தலை தூக்குகிறது.

உண்மையில் அவரால் இம்முறை தேர்தலில் வெற்றிபெற இயலுமெனக் கருத முடியவில்லை. அவ்விதம் கருதியிருந்தால் மைத்திரிபால அவருக்கு சுதந்திரக்கட்சி சார்பாகப் போட்டியிட வாய்ப்பு வழங்கியிருக்கப் போவதில்லை. மைத்திரி – மஹிந்தவுக்கு வேட்புமனு வழங்கியமை குருடனும் முடவனும் கதைக்கு ஒப்பான ஒன்றாகும். மஹிந்தவுக்கு வேட்புமனு வழங்காது தனித்துப் போட்டியிட வைத்தால், தமது தரப்பு மஹிந்தவைவிட குறைந்த அளவு வாக்குகளையே பெற நேரிடும் என்பதை மைத்திரிபால முன்னரே தெரிந்து வைத்திருந்தார். அவ்விதம் நேருமானால் மைத்திரிபாலவின் அரசியல் வாழ்க்கை அன்றே முடிவுக்கு வரவேண்டியிருக்கும். தமது உண்மையான பலம் வெளிவருவதைத் தவிர்ப்பதே மைத்திரிபாலவின் தேவையாக இருந்தது. அதேசமயம் மஹிந்தவுக்கே, மைத்திரிபாலவின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு கூட்டு முன்னணியூடாகத் தேர்தலை எதிர்கொண்டு தமது உண்மையான பலம் வெளிவருவதைத் தவிர்க்கும் தேவையே ஏற்பட்டிருந்தது. இதனால் அவர் கூட்டு முன்னணிக்குள் உள்நுழைந்தார். இவ்விருவரும் தத்தமது உண்மையான பலம் வெளிவராது மறைப்பதற்காக ஒன்றிணைந்ததற்கு ஒரு வேளை ஐ.தே.கட்சி அந்தப் பெரும் பலத்தைப் பெற்றுவிடுமோ என்ற அச்சமே காரணம்.

கடந்த ஜனாதிபதி தேர்தலுக்குப் பின்னர் மேதின ஊர்வலமே ஐ.தே.கட்சிக்குத் தனது பலத்தை வெளிக்காட்டும் வாய்ப்பை வழங்கியிருந்தது. கடந்த மேதினக் கொண்டாட்டங்கள் மஹிந்தவினதும், மைத்திரிபாலவினதும் ஆதரவுத் தளங்களின் பின்னடைவை வெளிச்சம் போட்டுக் காட்டின. ஐ.தே.கட்சியின் மேதின எழுச்சியைக் கண்டஞ்சிய மஹிந்தவும் – மைத்திரிபால வும் அடுத்த நாளே தாமிருவரும் ஒன்றி ணைந்து பேசுவதென முடிவெடுத்தனர். ஆனால், ராஜித சேனாரத்ன மற்றும் சம்பிக்க ரணவக்க ஆகியோரின் மஹிந்த எதிர்ப்பு நிலைப்பாட்டால்அந்த முயற்சி தடைப்பட்டது. ஆனால் மஹிந்தவும் மைத்திரிபாலவும் தமது முடிவை முன்னெடுக்கும் முயற் சியைக் கைவிடவில்லை. பஸில் மற்றும் கோத்தபாய ஆகியோரூடாக தூதுச் செய் திகள் இரு தரப்புக்கள் மத்தியிலும் பரிமாறப்பட்டன. கடைசியில் இருவரும் இரகசியமாகச் சந்தித்துப் பேசி இணக்கப்பாடொன்றுக்கு வந்தனர். அதன் மூலம் முதலில் மைத்திரிபாலவே மண் கவ்வ நேர்ந்தது. அவரது பிரதிபிம்பம் நலிவு நிலை கண்டது. அடுத்து மஹிந் தவுக்கும் அதே கதிதான். கடந்த ஆறு மாத காலமாக மஹிந்த சிரமப்பட்டு உருவாக்கி வந்த அவரது ஆதரவு அலை ஒரேயடி யாக நலிவுற்றது.

மொத்தத்தில் மஹிந்தவுக்கு இந்த நாட்டின் ஜனாதிபதிப் பதவியை ஈட்ட வழியமைத்துக்கொடுத்தது ஐ.தே.கட்சியே. சந்திரிகாவின் அரசை வீழ்த்தி மஹிந்தவுக்கு எதிர்க் கட்சித் தலைவர் பதவியைப் பெற உதவி, அதனூடாக நாட்டின் பிரதமர் பதவியை அடைய வழிசமைத்துக் கொடுத்தது ஐ.தே. கட்சி. அதேபோன்று மைத்திரிபாலவை நாட்டின் ஜனாதிபதியாக்கி வைத்ததும் ஐ.தே.கட்சியே. தற்போது அந்த மஹிந்தவும் மைத்திரிபாலவும் ஐ.தே.கட்சியிடமிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்கான கடும் மோதலில் ஈடுபட நேர்ந்திருப்பது விதியின் விளையாட்டே.

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



**நம்மைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்பது பாவம்**

சுயநல எண்ணம் சிறிதும் இல்லாமல், பணம், புகழ் என்னும் எதிர்பார்ப்பு வைக்காமல் பிறருக்கு நன்மை செய்ய வேண்டும் என்பதற்காகவே ஒருவன் தொண்டு செய்தால், உலகத்தையே மாற்றி அமைக்கும் சக்தி அவனிடமிருந்து வெளிப்படும்.

நம்மைப் பற்றியே சிந்தித்துக் கொண்டே இருப்பது சுயநலங்களிலேயே மிகப் பெரிய பாவமாகும். சுயநலஎண்ணம் எவ்வளவு குறைகிறதோ அந்த அளவுக்கு ஒருவன் கடவுளை நெருங்க முடியும்.

நீங்கள் இறைவனை உணர்ந்தால் உங்கள் முகம் மாறிவிடும். உங்கள் குரல் மாறிவிடும், உங்கள் தோற்றமே மாறிவிடும். நீங்கள் மனித குலத்துக்கு ஒரு வரப்பிரசாதமாக இருப்பீர்கள்.

## நாளை

ஆடி—05
செவ்வாய்க்கிழமை
21.07.2015

**திதி:** பஞ்சமி
பி.ப. 02.34 வரை
**நட்சத்திரம்:** உத்தரம்
பி.இ.02.40 வரை
**சுபநேரம்:**
10.31-12.01 வரை
**இராகுகாலம்:**
03.01-04.31 வரை

## மரக்கறிகளின் நேற்றைய விலை நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 60 | 60 | 60 | 60 | 60 | 40 | 30 |
| கத்தரி | 50 | 50 | 70 | 50 | 40–50 | 80 | 50 | 30 |
| கரட் | 150 | 130 | 160–300 | 120 | 200–240 | 200 | 240 | 200 |
| மரவள்ளி | 60 | 50 | 60 | 50 | 50 | 60 | 60 | 45 |
| பயிற்றை | 100 | 80 | 70 | 100 | 80 | 80 | 120 | 100 |
| பாகல் | 150 | 160 | 160 | 160 | 120 | 160 | 120 | 110 |
| கருணைக்கிழங்கு | 120 | 100 | 100 | 120 | 100 | – | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 90 | 90 | 90–100 | 100 | 120 | 80–90 |
| சி.வெங்காயம் | 160 | 170 | 180 | 180 | 120–140 | 200 | 160 | 110–130 |
| பூசணி | 40 | 30 | 30 | 40 | 20–30 | 40 | 60 | 20–25 |
| தக்காளி | 160 | 160 | 140 | 140 | 140–160 | 200 | 120 | 120–150 |
| வாழைக்காய் | 70 | 60 | 50 | 50 | 40–60 | 60 | 60 | 30 |
| கீரை | 20 | 20 | 30 | 05 | 15–20 | 30 | 35 | 20 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 30 | 20 | 40 | 10 | 10 |
| பச்சை மிளகாய் | 350 | 300 | 280 | 360 | 360 | 400 | 500 | 300 |
| புடோல் | 60 | 60 | 50 | 50 | 60–80 | 60 | 80 | 60 |
| கோவா | 90 | 100 | 80 | 80 | 80–100 | 100 | 100 | 50–60 |
| வெண்டி | 100 | 60 | 80 | 80 | 100–120 | 120 | 120 | 50–60 |
| போஞ்சி | 200 | 160 | 200 | 180 | 180 | 180 | 200 | 210 |
| லீக்ஸ் | 100 | 140 | 160 | 100 | 120–140 | 160 | 120 | 120 |
| தேங்காய் | 50 | 35–40 | 60 | 40–50 | 40–60 | 50 | 35–45 | 35 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 70–80 | 80 | 90 | 120 | 100–120 |
| தேசிக்காய் | 80 | 80 | 80 | 60 | 60 | 80 | 100 | 50–60 |
| வல்லாரை | 25 | 20 | 10 | 10 | 30–40 | 20 | 20 | 10 |
| கறிமிளகாய் | 140 | 170 | 120 | 180 | 220–260 | 200 | 220 | 160–180 |
| இராசவள்ளி | 120 | 120 | – | – | 100 | 160 | 160 | 80 |
| முருங்கைக்காய் | 200 | 160 | 200 | 160 | 100–140 | 200 | 200 | 110 |

## சாப்பிட வேண்டிய காய்கறிகள்

**வாழைக்காய்**

இரும்புச்சத்து, பொஸ்பரஸ், விற்றமின் பி, சி, சத்துக்கள் அதிகம் உள்ளது. வாயுவைத் தூண்டும் குணமுள்ளதால் இதை சமைக்கும்போது அதிகளவில் பூண்டு சேர்த்துக் கொள்வது நல்லது, மலச்சிக்கலைத் தீர்க்கும்.

**மாங்காய்**

மாங்காயில் நார்ச்சத்து, விற்றமின் ஏ உள்ளது. சரும நோய், வயிற்றுவலி உள்ளவர்கள் சாப்பிடக்கூடாது. ஏனெனில் இது சூட்டைக் கிளப்பும். மாங்காய் சாப்பிட்டால் மலக்குடல் புற்றுநோய் வராமல் தடுக்கும். செரிமானத்தைத் தூண்டி மலக்குடலைச் சுத்தம் செய்யும், பசியைத் தூண்டும்.

**பாகற்காய்**

பாகற்காயில் பாலிபெப்டுடைட் எனும் இன்சுலின் சுரப்பை அதிகப்படுத்தும் வேதிப்பொருள் நிறைந்துள்ளது. சர்க்கரை நோயாளிகளுக்கு பாகற்காய் சிறந்த உணவாகும்.
அடிக்கடி சாப்பிட்டால் ஆண்மைக்குறைவு ஏற்படும். தொற்று நோய்களை தடுத்து கிருமிகளை அழிக்கும், வயிற்றில் பூச்சிகள் சேராமல் தடுக்கும்.

**பூசணிக்காய்**

பூசணிக்காயில் புரதம், கொழுப்பு உள்ளது, ஆஸ்துமா, தலைவலி, சைனஸ் நோயாளிகள், உடல் பருமனானவர்கள் இதனை சாப்பிடக் கூடாது. குழந்தைகளுக்கும், மூலச்சூடு நோய் உள்ளவர்களுக்கு மிகமிக நல்லது. நரம்புகளுக்கு வலுவூட்டும், வயிற்றுப் புண்களை ஆற்றும் தன்மை கொண்டது.

**கரட்**


விற்றமின்; ஏ, கார்போவைதரேட், தாது உப்புகள், மெலோனிசைட்ஸ் என்ற நிறமி அணுக்கள் இவற்றில் உள்ளன. குழந்தைப் பேறு இல்லாதவர்கள் அதிகம் சேர்க்க வேண்டாம். சர்க்கரை நோயாளிகள் சாப்பிடக்கூடாது. கண் பார்வைக்கு உகந்தது, காரட் சாறுடன் பத்து மிளகு சேர்த்து சாப்பிட்டுவர உடல் கழிவுகள் வெளியேறும்.

**சுண்டைக்காய்**

விற்றமின் சி அதிகம் உள்ளது, சிறுவர்கள் வாரம் இருமுறை சாப்பிட்டால் வயிற்றில் பூச்சி சேராது. ஆஸ்துமா நோயாளிகள் தினசரி சாப்பிட மூச்சுத்திணறல் குறையும். கர்ப்பிணிப் பெண்கள் மாதம் ஒருநாள் சாப்பிடலாம். கிருமிகள், வயிற்றுப் பூச்சிகளை அழிக்கும். நுரையீரலுக்கு செயல்திறன் தரும், சளியைக் கரைக்கும் தன்மை கொண்டவை.

## கடலுணவுகளின் நேற்றைய விலை நிலைவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 600 | 800 | 700 | 700 | 650 |
| நண்டு | 350 | 400 | 400 | 350 | 300 | 400 |
| கணவாய் | 650 | 500 | 700 | 600 | 600 | 550 |
| பாரை | 600 | 500 | 600 | 550 | 600 | – |
| சுறா | 650 | 500 | 600 | 600 | 700 | 450 |
| சீலா | 300 | 400 | 500 | 400 | 600 | – |
| விளை | 700 | 450 | 400 | 450 | 600 | 350 |
| மூரல் | 350 | 400 | 400 | 400 | 400 | – |
| கும்பிளா | 400 | 400 | 400 | 400 | 400 | – |
| கிழாக்கன் | 650 | 500 | – | 400 | 400 | 500 |
| ஒரா | 400 | 350 | 400 | 350 | 400 | – |
| திரளி | 250 | 300 | 220 | 300 | 200 | 300 |
| நகரை | 200 | 300 | 200 | 300 | 200 | 300 |
| சூடை | 150 | 200 | 200 | 100 | 200 | 80 |
| ஒட்டி | 250 | 300 | 250 | 300 | 300 | – |
| திருக்கை | 150 | 350 | 250 | 250 | 300 | 120 |
| பாலை | 400 | 300 | 350 | 400 | – | – |
| வாளை | 100 | 150 | – | 300 | 300 | – |
| கொய் | 100 | 150 | 60 | 120 | 100 | – |
| மதனம் | 150 | 250 | 220 | 280 | 200 | 200 |



# சுடோக்கு எண் விளையாட்டு


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 7 | 1 | 4 | | | | | 5 |
| | | | | 5 | | | 8 | |
| | | 3 | 9 | | 7 | 6 | | |
| | | | | | 1 | | | |
| | 9 | | 8 | | 6 | | | 3 |
| | | | | | | 8 | 2 | |
| | 6 | | | 4 | | 7 | | 8 |
| 3 | | | | | | | 9 | |
| | | | | 8 | 5 | | | |

**நேற்றைய சுடோக்கின் விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 7 | 6 | 2 | 3 | 9 | 4 | 8 | 1 |
| 1 | 4 | 2 | 6 | 7 | 8 | 9 | 3 | 5 |
| 8 | 9 | 3 | 5 | 4 | 1 | 2 | 7 | 6 |
| 4 | 2 | 1 | 8 | 9 | 3 | 5 | 6 | 7 |
| 3 | 6 | 7 | 4 | 1 | 5 | 8 | 2 | 9 |
| 9 | 5 | 8 | 7 | 6 | 2 | 1 | 4 | 3 |
| 6 | 1 | 5 | 3 | 8 | 4 | 7 | 9 | 2 |
| 2 | 3 | 4 | 9 | 5 | 7 | 6 | 1 | 8 |
| 7 | 8 | 9 | 1 | 2 | 6 | 3 | 5 | 4 |

**சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களை யும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டாங் கள், பகுதிகள், உப சதுரங் கள் என்றும் அழைக்கிறார் கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண் டும் மீண்டும்) வராது நிரப் பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங் கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற் கனவே நிரப்பப் பட்டி ருக்கும். தர்க்கரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டி யதே வேலை. சுடோக்கு என் பது ஜப் பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகர மாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.**

# ஜூலை மாத ராசி பலன்கள்



## சிங்கம்

உங்கள் ராசிக்கு அதிபதி சூரியன் 11 ஆம் இடத்தில் செவ்வாயுடன் கூடியிருப்பது விசேடமாகும். புதன், சுக்கிரன் ஆகியோரது சஞ்சாரமும் சாதகமாக இருப்பதால் முக்கியமான எண்ணங்கள் இப்போது நிறைவேறும். பதவி உயர்வு, ஊதிய உயர்வு, இடமாற்றம் ஆகியவை கிடைக்கும். முக்கியஸ்தர்கள், மேலதிகாரிகள் ஆகியோர் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். வியாபாரம் பெருகும். கணிதம், எழுத்து, பத்திரிகை, ஓவியம், சிற்பம், போன்ற துறைகளில் இலாபம் கிடைக்கும். கலைஞர்களுக்கு வெற்றி வாய்ப்புக்கள் அதிகரிக்கும். இயந்திரப்பணியாளர்களுக்கு ஆதாயம் கூடும். நிர்வாகம், அரசியல், சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் சாதனை பல ஆற்றுவார்கள். சொத்துக்களால் ஆதாயம் கிடைக்கும். தந்தையாலும், உடன்பிறந்தவர்களாலும் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் சிறுசிறு பிரச்சினைகள் இருந்து வரும். வீண் வம்பு வேண்டாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தி வருவது நல்லது. புதியவர்களிடம் விழிப்புடன் பழகுவது அவசியமாகும். பல வழிகளில் ஆதாயம் கிடைக்கும். புதிய பொருள்களின் சேர்க்கை நிகழும். மன மகிழ்ச்சி கூடும். கேளிக்கை, உல்லாசங்களில் ஈடுபாடு அதிகமாகும். பிள்ளைகளாலும் வாழ்க்கைத் துணைவராலும், தந்தையாலும் அனுகூலம் உண்டாகும். தந்தையாலும், உடன் பிறந்தவர்களாலும் பிரச்சினைகள் சூழும். அரச விவகாரங்களில் விழிப்புத்தேவை. உஷ்ணாதிக்கத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது. விபாபாரிகளும் மாணவர்களும் பொறுப்புடன் செயற்படுவது நல்லது. மகம் பூர நட்சத்திரக்காரர்களுக்கு சுப பலன்கள் அதிகரிக்கும் மாதமிது.

**தொழிலாளர்களுக்கு:**
தொழில், வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கும்.
பணியாளர்கள் அவ்வப்போது பணியில் பிடிப்பு நிலை இல்லாத நிலைக்கு ஆளாவர். வீண் அலைச்சலும் இருக்கும். அரச பணியாளர்கள் சிறப்பான நிலை பெறுவர். விரும்பிய இடமாற்றம் கிடைக்கும்.

**மாணவர்களுக்கு:**
மாணவர்கள் தொடர்ந்து கஷ்டப்பட்டுப் படிக்க வேண்டி இருக்கும். ஆனால், முயற்சிக்கு தகுந்த பயன் கிடைக்கும்.


**விவசாயிகளுக்கு:**
விவசாயிகளுக்கு சீரான விளைச்சல் கிடைக்கும். பழவகைகள், கீரை வகைகளில் இலாபம் அதிகரிக்கும். கால்நடைகள் மூலம் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும்.

**பெண்களுக்கு:**
பெண்கள் குடும்பத்தினரால் மதிக்கப்படுவர். கணவரின் அன்பு கிடைக்கும். புண்ணிய தலங்களுக்கு சென்று மகிழ்வர். தாய் வீட்டில் இருந்து சீதனம் கிடைக்கும். குடும்பத்தில் விட்டுக் கொடுத்துப் போகவும்.

**அதிர்ஷ்ட எண்: 4, 8**

**அதிர்ஷ்ட நிறம்:** சிவப்பு,வெள்ளை

**பரிகாரம்:** ராகு கேதுவுக்கு அர்ச்சனை செய்யுங்கள். ஏழைகளுக்கு உதவி செய்யுங்கள். முருகன், வீரபத்திரருக்கு தீபமேற்றி வழிபடுங்கள்.



## கன்னி



உங்கள் ஜன்ம ராசிக்கு 3 இல் சனியும் 10 இல் சூரியனும் செவ்வாயும் 11 இல் குருவும் சுக்கிரனும் உலவுவது சிறப்பாகும்.
துணிச்சலான காரியங்களில் ஈடுபாடு கூடும். எதிரிகள் அடங்குவார்கள். போட்டிகளிலும் பந்தயங்களிலும்; விளையாட்டு விநோதங்களிலும்; வழக்கு போன்ற விடயங்களில் வெற்றி கிட்டும். அரச உதவி கிடைக்கும். உடன் பிறந்தவர்களாலும் தந்தையாலும் அனுகூலம் ஏற்படும். தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும், உத்தியோகஸ்தர்களுக்கும் செழிப்பான சூழ்நிலை நிலவிவரும். ஆசிரியர்களது எண்ணம் ஈடேறும். தெய்வப் பணிகள் நிறைவேறும்.
பொருளாதார நிலை உயரும். ஒன்றுக்கு மேற்பட்ட இனங்களால் ஆதாயம் கிடைத்து வரும். திரவப்பொருள்கள் இலாபம் தரும். பொன்னும் பொருளும் சேரும். வாழ்க்கை வசதிகள் பெருகும். செய்து வரும் தொழில் விருத்தி அடையும். கணிதம், எழுத்து, பத்திரிகை, சிற்பம், ஓவியம், தரகு போன்ற துறைகள் ஆக்கம் தரும். கலைஞர்களுக்கு வரவேற்பு கூடும். பெண்களால் அனுகூலம் உண்டாகும். சுபச் செலவுகள் அதிகரிக்கும்.
பிள்ளைகளாலும்; வாழ்க்கைத்துணைவராலும் சங்கடம் உண்டாகும். பொருள் கொடுக்கல்–வாங்கலில் விழிப்புத் தேவை. உத்தியோகத்தர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் முன்னேற்றம் தடைப்படும். இடமாற்றமும் நிலைமாற்றமும் உண்டாகும். அரச விவகாரங்களில் நல்ல திருப்பம் உண்டாகும். இயந்திரப் பணிகள் இலாபம் தரும். கடல் சார்ந்த தொழிலில் வளர்ச்சி காணலாம். மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். அத்தம், சித்திரை நட்சத்திரக்காரர்களுக்கு விசேடமான சுப பலன்கள் உண்டாகும் மாத மிது.

**தொழிலாளர்களுக்கு:**
தொழில், வியாபாரத் தில் அரச வகையில் ஆதாயம் கிடைக்கும். வங்கிக் கடன் எளிதாக வந்து சேரும். புதிய தொழில் முயற்சியில் வெற்றி காண்பீர்கள். பணியாளர்கள் வேலையில் திருப்தி காண்பர். சிலருக்கு விரும் பிய இடமாற்றம் கிடைக்கலாம். அரச ஊழியர்களுக்கு கோரிக்கை எளிதில் நிறைவேறும்.

**மாணவர்களுக்கு:**
மாணவர்கள் சிறப்பான நிலையில் இருப்பர். படிப்போடு விளையாட்டு போட்டிகளிலும் வெற்றி காண்பர். ஓகஸ்ட்மாதம்முதலாம்திகதிவரைபுதன் சாதகமான இடத்தில் இருப்பதால் கூடுதல் நன்மையை எதிர்பார்க் கலாம்.


**விவசாயிகளுக்கு:**
விவசாயிகளுக்கு வருமானம் அதிகரிக்கும். கரும்பு, நெல், சோளம், காய்கறி, பழ வகைகளில் நல்ல வருமானம் கிடைக்கும். கால்நடையால் வருமானம் கூடும். புதிய சொத்து வாங்க முயற்சிப்பது நல்லது.

**பெண்களுக்கு:**
பெண்கள் கணவனின் அன்பைப் பெறுவர். அக்கம்பக்கத்தினர் நட்புடன் பழகுவர். வேலைக்குச் செல்லும் பெண்கள் சிறப்படைவர். பதவி உயர்வும் கிடைக்கும்.

**அதிர்ஷ்ட எண்: 1, 9**

**அதிர்ஷ்ட நிறம்:** செந்துரம், சிவப்பு

**பரிகாரம்:** புதன்கிழமை குல தெய்வத்தை வழிபட்டு பசுவுக்கு தழை போடுங்கள். செவ்வாயன்று முருகனையும், ராகுகாலத்தில் சர்வேஸ்வரரையும் வழிபடுங்கள்.



# பெண்களின் வித்தியாசமான திருமண ஆசைகள்

18 வயது முதல் 25 வயது வரையுள்ள பெண்களிடம் எடுக்கப்பட்ட கல்யாண ஆசைகள் பற்றிய கருத்துக்கணிப்பு ஒன்றில் அவர்கள் தங்களது வித்தியாசமான விருப்பங்களை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

- நண்பர்போலவும், திறந்த மனதோடும் பழகும் கணவர் தேவை என்று 80 சதவீத பெண்கள் தெரிவித்திருக்கிறார்கள்.
- கடைசி காலம் வரை தங்களைப் பாதுகாக்க வேண்டும், பராமரிக்கவேண்டும் என்ற ஆசை பெண்களிடம் இல்லை. ஏன் என்றால் தங்கள் எதிர்காலக் கணவரிடம் அவைகளை எல்லாம் எதிர்பார்க்கும் பெண்கள் 10 சதவீதம் தான். கணவரிடம் அதிகபட்ச அன்பு, ஆண்மை நிரம்பிய குணம் போன்றவைகளை எதிர்பார்க்கும் பெண்கள் 5 சதவீதம் மட்டுமே.
- மனதுக்குள் இருக்கும் எல்லாவற்றையும் பேசும் அளவுக்கு கணவர் நடந்து கொள்ள வேண்டும். சுதந்திரம் தர வேண்டும். எதற்கும் கட்டுப்பாடு விதிக்காதவராக இருக்க வேண்டும் என்று கிட்டத்தட்ட எல்லா இளம் பெண்களுமே எதிர்பார்க்கிறார்கள்.
- ஐந்து நிமிடம் பார்த்து, அடுத்த மாதமே திருமணம் செய்து கொண்டு, அவரோடு அவசர அவசரமாக தேனிலவுக்குப் புறப்பட்டுச் செல்லும் மனநிலை தங்களுக்கு இல்லை. குறைந்தது 6 மாதமாவது பழகிய பின்பே அவர் தங்களுக்கு தகுதியானவரா என்று கண்டுபிடிக்க முடியும். அதற்கான வாய்ப்பை தங்களுக்கு ஏற்படுத்தித்தர வேண்டும் என்று 90 சதவீத பெண்கள் எதிர்பார்க்கிறார்கள்.
- பழைய காலத்துப் பெண் பார்க்கும் சடங்கில் தங் களுக்கு விருப்பம் இல்லை என்றும்– இவர்தான் உன் வருங்கால கணவர் என்று கட்டாயப்படுத்தக்கூடாது என்றும் பெரும்பாலான இளம் பெண்கள் சொல்கிறார்கள். வயதான பெற்றோர்கள் வரனின் வேலை, சம்பளம், குடும்பம், சொத்து இவை களைத்தான் பார்க்கிறார்கள்.
- அவைகள் திருப்திபட்டால், அந்த மாப்பிள்ளைக்கு ஓ.கே. சொல்லிவிடுகிறார்கள். அவர் வாழ்க்கைக்கு எந்த அளவுக்கு சரிப்பட்டு வருவார் என்பது தங்களுக்குத் தான் தெரியும் என்று இளம் பெண்கள் கருத்து தெரிவிக்கிறார்கள்.
- எவ்வளவு நல்லவராக இருந்தாலும், நாங்கள் பார்த் துப் பேசி முடிவு செய்துவிட்டோம். நீ ஒத்துக்கொள் என்பது போல் பெற்றோர் சொன்னால் அதை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று, 68 சதவீத பெண்கள் அதிரடியாக சொல்கிறார்கள்.
- பத்து சதவீத பெண்கள், வாழ்க்கையில் திருமணம் அவ்வளவு முக்கியமில்லை என்கிறார்கள்.
- திருமணம் முடிந்த பின்பும் தங்கள் வருங்காலக் கணவரின் சுதந்திரத்தில் தலையிடமாட்டோம் என்று 40 சதவீத பெண்கள் சொல்கிறார்கள். ஆனால் தாங்கள் கொடுக்கும் சுதந் திரத்தை கணவர் தங்களுக்கு தரவேண்டும் என்றும் அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.
- கணவருக்கு வேறு பெண்களோடு இருந்த தொடர்பு பற்றி கேள்வி எழுப்பமாட்டோம் என்று 3 சதவீத பெண்கள் சொல்கிறார்கள். 90 சதவீத பெண்கள், திருமண வாழ்க்கையில் நிறைய சிக்கல்கள் இருந்தாலும் திருமணம் செய்துகொள்வோம் என்கிறார்கள்.
- 40 சதவீத பெண்கள் திருமணத்தில் ஆடம்பர அலங்காரங்கள் அவசியம் என்கிறார்கள். காரணம், வாழ்க்கையில் ஒரு முறைதான் திருமணம் செய்கிறோம். அதனால் அலங்காரத்துக்கு நிறைய பணம் செலவிடலாம் என்ற ஆசையை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.
- கல்யாணத்தை ஆடம்பரமாக நடத்தவேண்டியதில்லை என்று 58 சதவீத பெண்கள் சொல்லும்போது, 42 சதவீத பெண்கள் அந்தவிடயத்தில்பெற்றோர்எடுக்கும்இறுதிமுடிவை ஏற்றுக்கொள்கிறோம் என்றுகூறி, ஆடம்பரத்துக்கு ஆத ரவு தெரிவிப்பவர்களாக இருக்கிறார்கள்.
- திருமணம் முடிந்த மறுநாளே குப்பைக்கு போகும் அழைப்பிதழுக்காக நிறைய பணத்தை செலவிடவேண்டியதில்லை. அது ஆடம்பரம் இல்லாமல் இருந்தால் போதும் என்று 84 சதவீத பெண்கள் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். 70 சதவீத பெண்கள், தங்கள் கணவர் சினிமா கதாநாயகன்போல் இருக்க வேண்டியதில்லை என்று அதிரடியாக கூறியிருக்கிறார்கள்.
- நடத்தை, தொழில், எதையும் எளிதாக எடுத்துக்கொள்ளும் குணாதிசயம் போன்றவைகளுக்கு அடுத்த இடத்தில் தான் தோற்றத்தை வைப்பதாக அவர்கள் கூறுகிறார்கள்.
- மது அருந்தும் பழக்கம் கொண்டவர்கள் தங்களுக்கு வேண்டாம் என்றுதான் பெரும்பாலான பெண்கள் கூறியிருக்கிறார்கள்.

திலகம்

# போலிப் பிச்சைக்காரர்கள்

ஒரு நாள் அக்பரும் பீர்பாலும் மாறு வேடத்தில் நகர்வலம் வந்தனர். அப்போது கண் பார்வை அற்றவர்களும், உடல் ஊனமுற்றவர்களும், வயோதிபர்களுமாகப் பலர் பிச்சை எடுத்துக் கொண்டிருப்பதைப் பார்த்தனர். அக்பர் மிகவும் வேதனை அடைந்தார். பீர்பாலைப் பார்த்து, பீர்பாலே, இவர்களைப் பார்க்கும்போது மிகவும் பரிதாபமாக இருக்கிறது.இவர்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று தெரிவித்தார்.

இருவரும் ஆலோசனை செய்து அரசு சார்பில் அவர்களுக்கு இலவசமாக உணவு வழங்குவது என்று முடிவு செய்தனர்.

அதன் படி ஊனமுற்றோருக்கும் ஆதரவற்ற முதியவர்களுக்கும் இலவச உணவு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. நாளுக்கு நாள் பிச்சைக்காரர்களின் எண்ணிக்கை கணக்கில்லாமல் அதிகமாகியது. உழைக்க விரும்பாத சோம்பேறிகள் ஊனமுற்றவர்கள் போல் வேடமிட்டு இலவச உணவை உண்டு காலத்தைப் போக்க ஆரம்பித்து விட்டனர். அரசு உணவுக்காகச் செலவிடும் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து கருவூலமே காலியாகும் நிலை ஏற்பட்டு விட்டது. பயந்து போன அக்பர் அவசரமாக பீர்பாலுடன் ஆலோசனை நடத்தினார். போலிப் பிச்சைக்காரர் களைக் கண்டறிவது எப்படி என்று பீர்பால் சிந் தித்தார். அரசே, "நாளை மதியம் இதற்கு முடிவு கட்டி விடுவோம்" என்றார். மறு நாள் இலவச உணவு உண்பதற்காக எண்ணற் றவர்கள் கூடினர். அப்போது உணவு அளிப்பது ஒரு மணி நேரம் தாமதப்படுத்தப்பட்டது. அதனால் கூச்சல் குழப்பம் ஏற்பட்டது.


அப்போது ஒரு அதிகாரி கூட்டத்தினரைப் பார்த்து இன்று முதல் வடக்கேயுள்ள புதிய சத்திரத்தில் உணவளிக்கப்படும் என்று தெரிவித்தார். இதனைக் கேட்ட போலிப் பிச்சைக்காரர்கள் பாத்திரத்தைத் தூக்கிக் கொண்டு அலறியடித்து புதிய சத்திரத்துக்கு ஓடினர். உண்மையாகவே கண்பார்வையற்றவர்களும், ஊனமுற்றவர்களும் அங்கேயே இருந்து விட்டனர். அவர்களுக்கு மட்டுமே உணவு வழங்கப்பட்டது. அதன் பின்னர் போலிப் பிச்சைக் காரர்கள் எவருமே அங்கு வருவதில்லை. பீர்பாலின் சமயோசித அறிவாற்றலை எண்ணி அக்பர் வியந்தார்.





## வர்ணம் தீட்டலாம் வாங்க






# வெற்றி தரும் பொறுமை

ஓர் ஊரில் வாழ்ந்து வந்த அண்ணன் தம்பிகளில், தம்பி கெட்டிக்காரன், அண்ணன் சற்று சோம்பேறி. ஒரு நாள் இருவரும் காட்டுக்கு விறகு வெட்டச் சென்றனர். இருவரும், காலையிலிருந்து மதியம் வரை கஷ்டப்பட்டு விறகு வெட்டி அவற்றை இரு கட்டுக்களாகக் கட்டினர். பின்னர் தாங்கள் எடுத்துச் சென்ற சோற்றை உண்டு களைப்பைப் போக்கினர். அதன் பின்னர் அண்ணனும், தம்பியும் விறகுக்கட்டுக்களைத் தலையில் வைத்துக் கொண்டு நடக்கலாயினர். சிறிது தூரம் நடந்து சென்றவுடனேயே, விறகுக்கட்டுப் பாரமாக இருக்கிறது என்று புலம்பிக் கொண்டே நடந்தார் அண்ணன். ஆனால் தம்பி எதுவுமே சொல்லாமல் நடந்து கொண்டிருந்தார். இதைப் பார்த்த அண்ணன், எம் இருவரின் சுமையும் ஒரே அளவில்தானே இருந்தது, ஆனால் தம்பி எதுவும் சொல்லாமல் எளிதாக நடந்து வருகிறாரே என்று சிந்தித்தார். பின்னர் தம்பியிடம், உனக்கு விறகுக் கட்டுப் பாரமாக இல்லையா? என்று கேட்டார். அதற்குத் தம்பி, இல்லை, எனது சுமை பாரமாக இல்லை, ஏனெனில் நான் அதில் ஒரு மூலிகையை வைத்திருக்கிறேன் என்று சொன்னார். அப்படியா! அந்த மூலிகை என்ன வென்று சொன்னால் நானும் எனது சுமையில்அதனை வைத்துக் கொள்வேன் என்றார் அண்ணன். அதற்குத் தம்பி, அந்த மூலிகையின் பெயர் பொறுமை என்றார். வாழ்வில் ஏற்படும் இன்னல்களை, இடை யூறுகளை, தடைகளை, கடுகளவும் சினமுறாது, இன்முகத்துடன் அவற்றை ஏற்று வெல்வதுதான் பொறுமை.







# குருநாகல்

குருநாகல் இலங்கையின் வட மேற்கு மாகாணத்தில் அமைந்துள்ள ஒரு மாநகரமாகும். இது குருநாகல் மாவட்டத்தின் தலைநகரமாகும். குருநாகல் மாவட்டம் 14 நாடளுமன்றத் தொகுதிகளைக் கொண்டுள்ளது. இது ஆயிரத்து 610 கிராமசேவகர் பிரிவுகளையும் 27 பிரதேச செயலர் பிரிவுகளையும் கொண்டுள்ளது. இந்த மாவட்டத்தில் உள்ள ரம்பொடகல மகாவிகாரையில் ஒரே கல்லில் 67.5 அடி உயரத்தில் செதுக்கப்பட்ட புத்தர் சிலை ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. குருநாகல் இலங்கையின் வட மேல் மாகா ணத்தின் தலைநகரமுமாகும். இந்நகரம் இலங்கையின் பண்டைய இராசதானிகளில் ஒன்றின் தலைநகராகவும் விளங்கி வந்தது. இந்த மாவட்டத்தில் தெங்கு மற்றும் நெல் பயிர்ச்செய்கைகள் முக்கிய இடம் வகிக்கின்றன.

# ஜனாதிபதி மைத்திரிக்கு எதிராகத் தீர்மானம்

## தம்புள்ள சுதந்திரக் கட்சிக் குழு நிறைவேற்றியது

கொழும்பு, ஜூலை 20

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு எதிராக தம்புள்ள சுதந்திரக் கட்சிக் குழு தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் ஆற்றிய உரைக்கு இந்தக் கூட்டத்தில் கண்டனம் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி இந்தக் கருத்தை உடனடியாக மீளப் பெற்றுக் கொள்ள வேண்டுமென கோரியுள்ளது. யாபாகம பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சுதந்திரக் கட்சியின் துணைத் தலைவர் ஜனக பண்டார தென்னக்கோனின் இல்லத்தில் இந்தக் கூட்டம் நடைபெற்றுள்ளது. தம்புள்ள பிரதேச சபையின்தலைவர் கே.ஜீ.சோமதிலக்கவால் இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை கட்சியை பாதுகாக்க சகல வழிகளிலும் நடவடிக்கை எடுக்கப் போவதாக ஜனக பண்டார தென்னக்கோன் இந்தக் கூட்டத்தின் போது உறுதியளித்துள்ளார்.(ற)

# மின்கம்பத்துடன் மோதியது 'படி'

## 14 பேர் காயம்



யாழ்ப்பாணம், ஜூலை 20

யாழ்.சிறைச்சாலையை அண் மித்து நேற்று அதிகாலை இடம் பெற்ற படி விபத்தில் அதில் பயணித்த் 14 பேர் வரையில் காயமடைந்ததோடு 2 பேர் படுகாயமடைந்தனர். அவர்கள் அனைவரும் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த போதே இந்த விபத்து இடம்பெற்றது. கிளிநொச்சியில் கட்டட நிர்மாணத்துக்காக இரவிரவாகக் கொங்கிறீற் போட்டவிட்டு அதி காலை திரும்பிக் கொண்டிருந்த போதே விபத்து இடம்பெற்றது. கட்டுப்பாட்டை இழந்த படி வாகனம் அருகில் நின்ற மின் கம்பத்தை அடியுடன் முறித்துத் துண்டாக்கி பக்கத்தே நகர்த்தி கட்டடம் ஒன்று டன் சாய்த்துவிட்டு வேகத்தைக் கட்டுப்படுத்தியது.

அதனால்வாகனத்தில்முன்பக்கத்தின் அரைவாசிப் பாகம் மோசமாகச் சிதைந்தது. முன் இருக்கையில் இருந்து வந்தவர்கள் சிதைவினுள் இருந்து இழுத்து எடுத்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். (ற-4)

# விளக்கமறியலில் இருந்த 21 பேருக்கு பிணை அனுமதி

தென்மராட்சி, ஜூலை 20

பொலிஸாரைக் கடமை செய்யவிடாது தடுத்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கொடிகாமம் தவசிகுளம் வாசிகள் 21 பேருக்கு கடந்த வெள்ளிக்கிழமை பிணை அனுமதி வழங்கியது சாவகச்சேரி நீதிமன்று.

தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இரு ஆட்பிணையில் செல்ல அனுமதித்த நீதிவான் பிரதி சனிக்கிழமை கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிடுமாறும் உத்தரவிட்டார்

கடந்த மாதம் 20 ஆம் திகதி கொடிகாமம் தவசிகுளம் பகுதி வீடொன்றில் கசிப்பு விற்பனை செய்யப்படுவதாகக் கிடைத்த தகவலையடுத்து அங்கு சென்ற பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட சிலர் பொலிஸாரைக் கடமை செய்யவிடாமல் தடுக்கும் நோக்கில் கற்களால் வீசித் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதன்போது பொலிஸார் ஒருவருக்கு தலையில் காயமேற்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் மறுநாள் அப்பகுதியைச் சேர்ந்த 10 பெண்கள் உட்பட 21பேரைக் கைது செய்து சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்திய போது கடந்த மூன்றாம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது. மூன்றாந் திகதி வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது கடந்த வெள்ளிக்கிழமை வரை விளக்க மறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது 21 பேரையும் தலா 50 அயிரம் பெறுமதியான நீதிமன்றால் ஏற்றுக் கொள்ளக்கூடிய தலா இரு ஆள்பிணையில் செல்ல அனுமதித்து பிரதி சனிக் கிழமைகளில் பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிட வேண்டுமெனவும் உத்தரவிடப்பட்டது.

(ற-9)

# குழுக்களுக்கிடையே கைகலப்பு இருவர் காயம்

திருகோணமலை, ஜூலை 20

திருகோணமலை கந்தளாய் பிரதேசத்தில் இரு குழுவினருக்கு இடையில் கைகலப்பு ஏற்பட்டுள்ளது.

சனிக்கிழமை இரவு ஏற்பட்ட இந்தக் கைகலப்பில் இருவர் காயமடைந்த நிலையில் கந்தளாய் தள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதேவேளை, இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கருதப்படும் இருவரை கைதுசெய்ததாக கந்தளாய் பொலிஸார் தெரிவித்தனர்.

மதுபானம் அருந்திய நிலையில் மேற்படி இரு குழுவினருக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டதாகவும் கைகலப்பில் ஈடுபட்டவர்கள் பாடசாலை மாணவர்கள் எனவும் விசாரணையிலிருந்து தெரிய வந்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற-10)


## மரண அறிவித்தல்

### திருமதி இராசம்மா பொன்னம்பலம்

(பழைய மாணவி தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி, இளைப்பாறிய ஆசிரியை - தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி, காங்கேசன்துறை நடேஸ்வரா கல்லூரி)



கொல்லங்கலட்டி, தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும் மெல்போர்ன், ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கெண்ட திருமதி இராசம்மா பொன்னம்பலம் 17.07.2015 வெள்ளிக்கிழமை மெல்போர்னில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கோணேசர் கந்தையா-வள்ளிமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கதிர்காமர் பொன்னம்பலத்தின் (இளைப்பாறிய ஆசிரியர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற அன்னபூரணம், செல்வமாணிக்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஞானகலை(ஆஸ்திரேலியா), அமிர்தகலை(ஆஸ்திரேலியா), பரதலிங்கம்(லண்டன்), சிவகலை(கனடா), சத்துருக்கன்(லண்டன்) ஆகியோரின் அன்புத்தாயும் காலஞ்சென்ற முருகேசு லோகநாதன் மற்றும் சண்முகம் புவனேந்திரன், சப்த, கவினா ஆகியோரின் அன்பு மாமியும் குருநாத், ஜமலானத்,பக்தி, ஜயா, மகேஸ், மதுரங்கா, லக்ஷி, அரிஸ் ஆகியோரின் பேர்த்தியும் சூரியா, கதிரவன், பிரியா, ஜோஷ் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (22.07.2015) புதன்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் மெல்போர்ன் ஆஸ்திரேலியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு :- Gnanakalai(+614 507 09861), Amirthakalai (+614 148 43162), Parathalingam(+442 380 638998), Sivakalai(+141 675 29598) and Sathurukkan(+447 985 935415) (63112)

## மரண அறிவித்தல்

### காத்திகேசு சுப்பிரமணியம்

(இளைப்பாறிய தபால் அதிபர்)



துணவி வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வட்டுத்தெற்கு, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட காத்திகேசு சுப்பிரமணியம் 19.07.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் முன்னாள் துணவி அரசடிப்பிள்ளையார் கோயில் பரிபாலன சபை உறுப்பினரும் காலஞ்சென்ற அகிலாண்டதேவியின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான துணவி காத்திகேசு கற்பகம் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கந்தையா செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் வடிவாம்பிகை(மாதகல்), கதிர்ராசா(லண்டன்), ரவீந்திரன்(ரவி யாழ் போதனா வைத்தியசாலை), கலாரஞ்சினி, காலஞ்சென்ற சிறிதரன் மற்றும் அரியகுமார்(அரி) ஆகியோரின் அன்புத்தந்தையாரும் தருமரத்தினம்(இளைப்பாறிய தபால் விநியோகத்தர் மாதகல்), தயாழினி(லண்டன்), லோகராசா(லோகு வட்டுக்கோட்டை), விஜயகலா(பாலர் ஆசிரியர் மானிப்பாய்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சாய்றஞ்சினி(லண்டன்), வித்தியா(லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற குமாரசாமி(மலாயன் பென்சனர்), கனகரத்தினம், பொன்னம்மா, அன்னலட்சுமி, கனகம்மா, நேசமணி ஆகியோரின் அன்புச்சகோதரனும் சுப்பிரமணியம் புஸ்பதேவியின் அன்பு மைத்துனரும் இராசகோபால் குணவதியின் அன்புச் சிறிய தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியை அவரது இல்லத்தில் இன்று (20.07.2015) திங்கட்கிழமை மு.ப 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


நாவலடி ஒழுங்கை,
வட்டுத்தெற்கு,
வட்டுக்கோட்டை.

(c 48105)

தகவல் :-
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி மகேஸ்வரி செல்வராசா



வேலணை மேற்கு முடிப்பிள்ளையார் கோயிலடியைப்பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் கோணாந்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி செல்வராசா நேற்று (19.07.2015) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல் :-
குடும்பத்தினர்.
(செல்வா ஸ்ரோர்ஸ்)


(63111)

## மரண அறிவித்தல்

### ஐயாத்துரை சரவணபவன்(நயினாதீவு)

(ஓய்வுபெற்ற அதிபர் சோதிட கலாநிதி)

பிறப்பு
12
09
1928



இறப்பு
19
07
2015

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் உடையார் ஒழுங்கையை வதிவிடமாகவும் கொண்ட ஐயாத்துரை சரவணபவன் நேற்று (19.07.2015) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை கமலாம்பாள் தம்பதிகளின் கனிஸ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி மனோன்மணி தம்பதியரின் மருமகனும் மங்கையர்க்கரசியின் பாசமிகு கணவரும் கடம்பமலர்(அதிபர் யா/கோண்டாவில் பரம்சோதி மகாவித்தியாலயம்) கலாநிதி, கௌரிபாலன்(பொறியியலாளர் மாகாணப்பொறியியலாளர் உள்ளூராட்சித் திணைக்களம் கிழக்கு மாகாணம்) ஆகியோரின் அன்புத்தந்தையும் விமலராஜா, சுந்தரகுமார்(காணிப்பதிவகம் கச்சேரி யாழ்ப்பாணம்) Dr.காயத்திரி (திட்டமிடல், பொது சுகாதார வைத்திய உத்தியோகத்தர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரணவன்(யா/கொக்குவில் இந்துக்கல்லூரி), பிரணவி(யா கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலயம்), கௌரி(யா/வேம்படி மகளிர் உயர்கல்லூரி),பவன் (மட்/கோட்டமுனை கனிஷ்ட வித்தியாலயம்), ராம்ஜி (மட்/சென்மேரிஸ் சர்வதேச பாடசாலை) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2015) திங்கட்கிழமை பி.ப 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடையார் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(63108)

தகவல் :-
குடும்பத்தினர்.

உதயன் | திங்கட்கிழமை | ஜூலை 20 2015

# வைத்தியசாலைகளில் இடவசதியை இணையம் மூலம் அறியும் வசதி

## செயற்றிட்டம் ஒன்று சுகாதார அமைச்சால் ஆரம்பிப்பு

கொழும்பு, ஜூலை 20

புதிதாகப் பிறக்கும் சிசுக்களை சேர்ப்பதற்கு அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் உள்ள கட்டில்கள் இடவசதிகளை இணையத்தளங்கள் மூலமாக தேடிக் கண்டறிந்து கொள்ளும் செயற்றிட்டம் ஒன்று சுகாதார அமைச்சால் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக. சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் பாலித மஹிபால தெரிவித்தார்.

கடந்த 15 ஆம் திகதி கொழும்பு குடும்ப சுகாதாரச் செயற்பாட்டுப் பிரிவில் மேற்படி செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அந்த நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

புதிதாக பிறக்கும் சிசுக்களை அனுமதிப்பதற்கு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் உள்ள கட்டில் இடவசதினை இணையத்தளங்கள் மூலமாக கண்டறியும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதுவரையில் 92 வைத்தியசாலைகளில் அதீதிவிர சிகிச்சைப் பிரிவுகள் நிறுவப்பட்டுள்ளன. அத்துடன் 590 கட்டில்கள் உள்ளன. சிசுக்களுக்கான அதீதிவிர சிகிச்சைப் பிரிவுகள் நிறுவப்பட்டுள்ள வைத்தியசாலைகள் இணையத்தள மயமாக்கப்பட்டுள்ளன.

குறைந்த மாதத்தில் பிறக்கும் குழந்தைகளின் கண்களைப் பரிசோதிக்கும் செயற்றிட்டமொன்றும் உள்ளது. அதனைப்போன்றே சிறு குழந்தைகளின் இதய நோய்களை முன்கூட்டியே இனங்காணும் செயற்றிட்டமொன்றும் அமைச்சினால் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

குழந்தைகளின் உடலில் உள்ள தைறொக்ஸின் ஹோர்மோன்களை பரிசோதிப்பது தொடர்பாக இரசாயன கூடங்களின் சேவை களைப் பலப்படுத்துவதற்காக மருத்துவ ஆய்வுகள் நிறுவனம் 30 கோடி ரூபா பெறுமதி கொண்ட சாதனங்களை வழங்கியுள்ளது.– என்றார். (ற–22)

# எம்மைத் தூக்கி நிலத்தில் அடித்து விட்டார் மைத்திரி

## எஸ்.பி. திஸாநாயக்க கூறுகின்றார்

கொழும்பு, ஜூலை 20

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எம்மைத் தூக்கி நிலத்தில் அடித்து விட்டார் என அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

மைத்திரி அண்மையில் ஆற்றிய உரையின் மூலம் எம்மைத் தூக்கி நிலத்தில் அடித்தது போன்றதொரு நிலைமை ஏற்பட்டது.


இந்த நிலைமயானது எங்களுக்கு மிகவும் பாதகத்தன்மையை ஏற் படுத்தும். எனினும் கட்சியை பிளவடையச் செய்ய அனுமதிக்க முடியாது.

எனது கிராமிய அபிவிருத்தி அமைச்சுக்கு மேலதிகமாக உயர்கல்வி அமைச்சையும் ஜனாதிபதி எனக்கு வழங்கி னார்.

நான் சட்டென ஜனாதிபதியிடம் சென்று சொன்னேன், எனக்கு உயர்கல்வி அமைச்சு பதவி வழங்கினால் பல்கலைக்கழகத் தரப்பினர் உங்களை கெட்ட வார்த்தைகளினால் திட்டுவார்கள். ஏனெனில் நான் குப்பைக் கூடைக்குத் தள்ளி விரட்டிய அனைவரும் மைத்திரிபால ஜனாதிபதியுடன்தான் இருந்தார்கள்.

இதனால் நான் உயர்கல்வி அமைச்சை ஏற்கவில்லை, அதன் பின்னர் சரத் அமுனுகமவுக்கு இந்த அமைச்சுப் பதவி வழங்கப்பட்டது. – என்றார்.

உடுநுவர தம்புலகல பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டமொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். (ற)



# தொற்றா நோய் குறித்த விழிப்புணர்வுப் பவனி

அம்பாறை பொது வைத்தியசாலையிலிருந்து மட்டக்களப்பு மாவட்டத்தின் பாசிக்குடா கடற்கரை வரை தொற்றா நோய்கள் பற்றிய விழிப் புணர்வு சைக்கிள் பவனியொன்று நேற்று நடத்தப் பட்டுள்ளது.

இந்த விழிப்புணர்வுப் பேரணி அம்பாறை உஹன, கொனாகொல்ல வெல்லாவெளி, களுவாஞ்சிக்குடி, காத்தான்குடி, மட்டக்களப்பு, ஏறாவூர், செங்கலடி ஊடாக பாசிக்குடா கடற்கரையைச் சென்றடைந்தது.

பொதுமக்கள் பயணிகள் கிராமத்தவர்கள், ஆகியோருக்கு விழிப்புணர்வையூட்டும் வண்ணம் இந்த சைக்கிள் பவனி இடம்பெற்றது.

அம்பாறை பொது வைத்தியசாலையில் கடமைபுரியும் ஆண் பெண் வைத்தியர்கள், தாதியர்கள், மற்றும் ஊழியர்கள் உட்பட சுமார் 40 பேர் இந்த தொற்றா நோய் பற்றிய சைக்கிள் விழிப்புணர்வுப் பவனியில் பங்குபற்றியிருந்தனர்.

நோய்கள் இன பாகுபாடில்லாமல் எவரையும் பீடிக்கும் என்பதால் அம்பாறை சிங்களப் பிரதேசத்தில் இருந்துதமிழ்முஸ்லிம்பிரதேசங்களை ஊடறுத்து இந்த விழிப்புணர்வு ஊர்வலம் இடம்பெற்றதாகவும் தொற்றா நோய்களிலிருந்து மக்கள் தங்களைப் பாதுகாக்கும் அறிவு இந்த விழிப்புணர்வு ஊர்வலத்தின் மூலம் கிடைக்கும் என்றும் அம்பாறை பொது வைத்தியசாலையின் நிருவாக அதிகாரி பி.கே. சமரசிங்ஹ தெரிவித்தார். (ற)

# வேட்பாளர் ஒழுக்கவிதி அடங்கிய வர்த்தமானி

## இவ்வாரம் வெளியிடப்படவுள்ளது

வேட்பாளர்களுக்கான ஒழுக்க விதிகள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல், இவ்வாரம் வெளியிடப்படவுள்ளதாக தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக தேர்தல் காலத்தில் வேட்பாளர்கள் கடைப்பிடிக்கவேண்டிய ஒழுக்க விதிகள் குறித்து இவ் வர்த்தமானி அமையுமென, மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.எம். எல்.ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களையோ, அல்லது அரச உத்தியோகத்தர்கள் மற்றும் வாக்காளர்களையோ, வீடுகளுக்கு அழைத்து உபசரிப்பது, ஒரு வேட்பாளர் மற்ற வேட்பாளரை பற்றி விமர்சிப்பது, சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடியவாறு பிரசாரங்களை முன்னெடுப்பது உள்ளிட்ட விடங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

தேர்தல்கல்கள் ஆணையாளரின் பணிப்புரைக்கமைய, பொலிஸ்மா அதிபரின் வழிகாட்டலின் பேரில், பிரசாரப் பணிகளின்போது வாக்காளர்கள் நடந்துகொள்ளும் விதம் குறித்து பொலிஸார் உன்னிப்பாக கவனித்து வருகின்றமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. தேர்தல் காலத்தில் வாக்காளர்கள் நடந்துகொள்ள வேண்டிய விதம் குறித்து இதுவரை காலமும் பேசப் பட்டு வந்தாலும், இம்முறையே அது வர்த்தமானி ஊடாக வெளியிடப் படுகின்றது.(ற)

### ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய பொதுக்கூட்டம் இன்று நடைபெறாது

யாழ் மாவட்ட பகிரங்க ஓய்வூதிய நம்பிக்கை நிதியத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் இன்று நடைபெறாது. குறித்த பொதுக் கூட்டம் கடந்த மே மாதம் நடைபெற்றது என்று சங்கத்தின் தலைவர் தெரிவித்தார். நேற்றைய உதயனின் 5 ஆம் பக்கத்தில் குறித்த பொதுக் கூட்டம் இன்று நடைபெறும் என்று செய்தி தவறுதலாக வெளயாகியிருந்தது.

MORA E-fac tamils - 2017

## மொறட்டுவைப் பல்கலைக்கழக பொறியியற் பீட தமிழ் மாணவர்கள் நடத்திய க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான 6 ஆவது முன்னோடிப் பரீட்சை – 2015 முன்னிலை மாணவர்களின் பெறுபேறுகள்

### கணிதப் பிரிவு

| Name | district | Maths | Physics | Chemistry | Z-Score | Island Rank | District Rank |
|---|---|---|---|---|---|---|---|
| MohanaKumaran Ganaatheban | Batticaloa | A | A | A | 2.6908 | 1 | 1 |
| NANTHAKUMAR MANOJ | Jaffna | A | B | A | 2.5290 | 2 | 1 |
| Sivarasa Lavanaraj | Jaffna | A | A | A | 2.5184 | 3 | 2 |
| Vinajagaraseekaran Sajeevan | Jaffna | A | A | B | 2.4873 | 4 | 3 |
| Navaratnarajah sutharsanan | Jaffna | A | A | A | 2.4423 | 5 | 4 |
| S.Braveenan | Colombo | A | A | B | 2.3947 | 6 | 1 |
| Kanagarajah Sathursan | Jaffna | A | A | A | 2.3900 | 7 | 5 |
| Jeyakumar Biranna | Trincomalee | A | A | B | 2.3046 | 8 | 1 |
| Sivakumaran Sarwakjan | Jaffna | A | A | B | 2.2949 | 9 | 6 |
| Nisangani Gowrikanthan | Batticaloa | A | A | B | 2.2366 | 10 | 2 |
| RAGAVAN PRASANNA | Jaffna | A | A | B | 2.1534 | 11 | 7 |
| Krishnananthalingam Tharmigan | Jaffna | A | B | B | 2.1361 | 12 | 8 |
| J.Ajanthasingam | Colombo | A | B | A | 2.0976 | 13 | 2 |
| Srithas Thanushan | Jaffna | A | C | A | 2.0858 | 14 | 9 |
| Anantharaja Kirushigan | Jaffna | A | A | B | 2.0838 | 15 | 10 |
| Sriranjan Sriukan | Vavuniya | A | A | B | 2.0792 | 16 | 1 |
| Panchalingam Thenesan | Jaffna | A | A | B | 2.0412 | 17 | 11 |
| Kunarasa Mathivathanan | Jaffna | A | B | C | 2.0000 | 18 | 12 |
| Kumaramoorthy Sujani | Jaffna | B | B | A | 1.9779 | 19 | 13 |
| Sritharan Dilukshan | Jaffna | B | B | A | 1.9695 | 20 | 14 |
| JEYAVEERASJHAMANI AMUTHESAN | Jaffna | A | C | A | 1.9626 | 21 | 15 |
| Ratneswaran Shiveswaran | Jaffna | B | A | B | 1.9294 | 22 | 16 |
| Rajendran Janarthanan | Jaffna | A | B | C | 1.9121 | 23 | 17 |
| BASKARAN NISHANTH | Jaffna | A | A | C | 1.9064 | 24 | 18 |
| INDIRAN KRICHIKESHAN | Jaffna | A | B | B | 1.8925 | 25 | 19 |
| Thangavadivel Shobethan | Jaffna | A | C | A | 1.8684 | 26 | 20 |
| Thiyagarasa Nirojan | Jaffna | B | A | B | 1.8571 | 27 | 21 |
| Cabila Subramaniyam | Batticaloa | A | B | C | 1.8562 | 28 | 3 |
| VITHURSHA LIMGARETNAM | Jaffna | A | C | B | 1.8541 | 29 | 22 |
| M.J.Mohammed Janian | Batticaloa | B | B | B | 1.8399 | 30 | 4 |

### உயிரியல் பிரிவு

| Name | District | Biology | Physics | Chemistry | Z-Score | Island Rank | District Rank |
|---|---|---|---|---|---|---|---|
| Anantharajah Harishankar | Jaffna | A | A | A | 2.6795 | 1 | 1 |
| Rajaratnam Sutharsan | Jaffna | A | B | A | 2.5223 | 2 | 2 |
| ELUXANA BASKARAN | Jaffna | A | A | B | 2.3173 | 3 | 3 |
| KALAICHELVI KAMALAKANNAN | Jaffna | A | A | A | 2.3075 | 4 | 4 |
| M.Sarujan | Ampara | A | A | A | 2.2764 | 5 | 1 |
| A.C.Fayaz Ahamad | Colombo | A | A | A | 2.2632 | 6 | 1 |
| Varnakulendran Sarangan | Trincomalee | A | A | A | 2.2530 | 7 | 1 |
| Majuri Subramanijam | Jaffna | A | B | A | 2.2431 | 8 | 5 |
| P.Dineshraj | Ampara | B | A | A | 2.2267 | 9 | 2 |
| R Thishothman | Batticaloa | A | A | B | 2.1901 | 10 | 1 |
| Sivajoganathan Jegathesan | Jaffna | A | B | B | 2.1782 | 11 | 6 |
| Senthilkanthan Laxshikan | Jaffna | B | A | A | 2.1655 | 12 | 7 |
| Saranya Amarasingam | Jaffna | A | B | A | 2.1377 | 13 | 8 |
| Viajayakumar Jathusan | Jaffna | A | B | A | 2.1308 | 14 | 9 |
| I Ajithan | Batticaloa | A | B | A | 2.1242 | 15 | 2 |
| Sunthareswaran Vithiyasagar | Jaffna | B | A | A | 2.1194 | 16 | 10 |
| Thuvaragesh V | Colombo | B | A | B | 2.1175 | 17 | 2 |
| J Nithushan | Batticaloa | B | A | A | 2.1093 | 18 | 3 |
| ARULJENANY KUMUTHARANJAN | Jaffna | A | B | A | 2.1027 | 19 | 11 |
| Karunakaran Hiran | Jaffna | A | B | A | 2.0929 | 20 | 12 |
| L Punkavi | Batticaloa | B | A | A | 2.0864 | 21 | 4 |
| M Rakees | Batticaloa | A | B | B | 2.0330 | 22 | 5 |
| S Sivavekan | Batticaloa | B | A | B | 2.0264 | 23 | 6 |
| PIRATHIKA THURAISINGAM | Jaffna | B | A | A | 2.0053 | 24 | 13 |
| G Arthika | batticaloa | B | A | A | 1.9377 | 25 | 7 |
| Mathuranayagam Sathursan | kilinochchi | B | B | B | 1.9341 | 26 | 1 |
| Rajendram Aathavi | Trincomalee | A | B | B | 1.9205 | 27 | 2 |
| Sriranganathan Aravinthan | Jaffna | B | A | B | 1.9191 | 28 | 14 |
| Samsudeen Azhan Khan | Trincomalee | B | B | A | 1.9145 | 29 | 3 |
| J Joshan | batticaloa | B | B | B | 1.9092 | 30 | 8 |

பரீட்சை முடிவுகளை பார்வையிட www.moraetamils.com

ஊடக அனுசரணையாளர் Uthayan Publication
பிரதான அனுசரணையாளர் IIS City Campus
அச்சு அனுசரணையாளர் Harikanan Printers

# தேர்தலுக்குப் பிறகு தொழிலாளருக்கு நியாயமான சம்பள உயர்வு கிட்டும்

## இ.தொ.கா. கூறுகின்றது

கொழும்பு, ஜூலை 20

சம்பள அதிகரிப்பைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில்தான் இ.தொ.கா., தொழிலாளர்களை மெதுவாக பணி செய்யும் போராட்டத்தில் ஈடுபட கோரிக்கை விடுத்தது. மாறாக, அவர்களை கஷ்டத்தில் தள்ளுவதற்கு அல்ல. இனிமேல் தொழிலாளர்கள் வழமையான பணிகளில் ஈடுபடலாம். சம்பள விவகாரத்தை தேர்தலுக்குப் பின்னர் பேசுவதற்குக் கம்பனிகள் உடன்பட்டதால் இந்த முடிவுக்கு வந்துள்ளோம்."

– இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

கொட்டகலையில் நேற்று மதியம் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே இதொ.கா. தலைவர் முத்து சிவலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு:–

"தொழிலாளர்களைக் கஷ்டத்தின் மத்தியில் தள்ளுவதற்கோ சுயநலத்திற்கோ நாம் போராட்டங்களை முன்னெடுத்த கட்சியல்ல என்பதை வரலாறு கூறும். அதிக சம்பள அதிகரிப்பைப் பெற்றுக்கொள்வதற்கான அழுத்தங்களைப் பிரயோகிக்க தொழிற்சங்கங்கள் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவது மரபு. இந்த விடயம் பாரம்பரிய தொழிற்சங்க அனுபவம் உள்ள வர்களுக்கே தெரியும்; புரியும். கட்சி அரசியல் செய்பவர்களுக்கு ஒன்றும் தெரியாது. எனினும், தேர்தல் காலகட்டங்களில் தொழிலாளர்களைக் குழப்பியடித்து எமது போராட்டத்திற்கு சேறு பூசும் முயற்சியில் பலர் இறங்கியுள்ளனர்.

ஆகவே, நாம் சம்பள விவகாரத்தைத் தேர்தலுக்குப் பின்னர் பேசலாம் என முடிவெடுத்தோம். இது குறித்து கடந்த வாரம் ஜனாதிபதியைச் சந்தித்து விளக்கினோம். "இது ஒரு நல்ல முடிவு" என அவர் தெரிவித்தார். ஆனாலும் கூட்டு ஒப்பந்தம் தொடர்பில் எந்தவிதத் தெளிவும் இல்லாத சிலர் மெதுவாக பணிசெய்யும் போராட்டத்தை விமர்சித்து தொழிலாளர்களைக் குழப்பியடித்தனர்.

ஒருசில தோட்டங்களில் எமது தொழிற்சங்கத்தின் பெயரைக்கூறி கலவரங்களில் ஈடுபட்டுள்ளனர். அவர்களை நாம் அறிவோம். தேர்தலுக்குப் பின்னர் நாம் நிச்சயமாக தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளத்தைப் பெற்றுத்தருவோம். அதில் எந்தவித சந்தேகங்களும் தேவையில்லை. நாம் எக்கட்டத்திலும் பேச்சுகளிலிருந்து வெளியேறவில்லை. கம்பனிகள் கூறிய தொகைக்கு நாம் உடன்படவில்லை என்பதே உண்மை'' – என்றார். (ற–சி)

# மட்டக்களப்புக்கே நீளமான வாக்குச்சீட்டு

எதிர்வரும் நடாளுமன்றத் தேர்தலுக்காக மட்டக்களப்பு மாவட்டத்துக்கு சுமார் இரண்டரை அடி நீளமான (30 அங்கும்) வாக்குச்சீட்டு அச்சிடப்படுவதாக அரச பதில் அச்சகர் ஏ.ஜி.பொன்சேகா தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 16 அரசியல் கட்சிகளும் 30 சுயேட்சைக் குழுக்களுமாக மொத்தம் 46 குழுக்கள் தேர்தலில் போட்டியிடுகின்றன. அதனால் இந்த நாடாளுமன்றத் தேர்தலிலே மிக நீளமான வாக்குச்சீட்டு மட்டக்களப்பு மாவட்டத்துக்கு அச்சிடப்படுகிறது.

அதையடுத்து, கொழும்பு மாவட்டத்துக்கான வாக்குச்சீட்டு மிக நீளமானதாக அமைந்துள்ளது. இங்கு 36 அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் போட்டியிடுவதால் சுமார் 2 அடி (24 அங்குலம்) நீளமான வாக்குச்சீட்டு அச்சிடப்படுகிறது என்றும் ஏ.ஜி.பொன்சேகா தெரிவித்துள்ளார். (ற–10)

**31 ஆம் நாள் ஆத்ம சாந்திப்பிரார்த்தனை**

**அமரர் ஐயாத்துரை வரதராஜா**

(ஓய்வுநிலை பிரதம முகாமைத்துவ உதவியாளர்-யாழ் செயலக திட்டமிடல் பிரிவு)



மண்ணில் வாழ்ந்த காலம் : 16.03.1949 - 20.06.2015

(திதி : சதுர்த்தி)

தலைமகனே உங்கள் கலைமுகத்தை மறப்போமா?
ஜீவநதியாய் நீளும் நினைவலைகள் தாயகத்தே
தீக்கங்குகளாய் சுடர்பரப்பி ஞானத்தை தேடினவோ?
என் கடன் முடிந்ததென்று வாணிபதம் பற்றினீரோ?

இன்று (20.07.2015) நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் முற்பகல் 11.00 மணிக்கு இடம்பெறும் அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு உறவினர் நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

59, கலைமகள் வீதி,
அரியாலை.

(63109)

குடும்பத்தினர்.
077 229 2547

# மைத்திரி எதிர்த்தாலும் மஹிந்தவே பிரதமர்

## ஜீ.எல்.பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 20

"ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் ஓகஸ்ட் 17இன் பின்னர் மஹிந்ததான் நாட்டின் பிரதமராவார்'' – என பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு தெரிவித்த அவர், மேலும் தெரிவித்தவை வருமாறு:–

நாடாளுமன்றத்தைக் கலைத்ததன் பின்னர், அதன் சட்டத்தை மீறும் வகையில் அரசு செயற்படுகின்றது. அதுமட்டுமன்றி, தேர்தல் சட்டங்களையும் மீறும் வகையில் செயற்படுகின்றது. ஓகஸ்ட் 17ஆம் திகதியின் பின்னர் இதற்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான புதிய அரசை உருவாக்குவோம்.


ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் மஹிந்த ராஜபக்ஷ தான் ஓகஸ்ட் 17இன் பின்னர் இந்த நாட்டின் பிரதமராவார். ஏனெனில், பிரதமர் யார் என்பதை நாடாளுமன்றம்தான் தீர்மானிக்க வேண்டும். அந்த வகையில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் மஹிந்த ராஜபக்ஷ வைத்தான் பிரதமராக நியமிப்பர்.

19ஆவது திருத்தச்சட்டத்தினூடாக ஜனாதிபதிக்குரிய நிறைவேற்று அதிகாரங்கள் நாடாளுமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ளன. அதனால், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மஹிந்தவை பிரதமராக நியமிக்கும்'' – என்றார். (ற–சி)

**வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றிநவிலலும்**

**அமரர் தங்கம்மா இரகுநாதன்**

தோற்றம் 11 * 08 * 1934



மறைவு 21 * 06 * 2015

கடந்த 21.06.2015 இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவி அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (21.07.2015) செவ்வாய்க்கிழமை மு.ப 11 மணியளவில் உடையார்வளவு புன்னாலைக்கட்டுவன் தெற்கு இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

21.06.2015 அன்று அன்னாரின் மரணச்செய்தி கேட்டு வந்து உதவிகள் புரிந்த அயலவர், உற்றார், உறவினர், அன்பர்கள், நண்பர்களுக்கும் தபால்மூலம், தொலைபேசி மூலம், இணையத்தளம் மூலம் துயரத்தில் பங்கு கொண்ட அனைவருக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவிபுரிந்த அனைத்து உள்ளங்களிற்கும் குடும்பத்தினர் சார்பில் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உடையார்வளவு,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு.

(63110)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# அரச வாகனங்களுக்கு கட்டணம் செலுத்த தயார்

## மஹிந்த கூறுகின்றார்

தன்னால் பயன்படுத்தப்படும் இரண்டு உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு கட்டணம் செலுத்தப்பட வேண்டுமாயின் அது குறித்து உடனடியாக அறிய தருமாறு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி. அபேகோனிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இன்று முற்பகல் அந்த கோரிக்கையை விடுத்ததாகவும் அவர் கூறியுள்ளார். குருநாகல் கல்கமுவ பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்திலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

தனக்கு வழங்கப்பட்டுள்ள இரு வாகனங்களை தான் தேர்தல் பரப்புரைப் பணிகளுக்காக பயன்படுத்துவதாகவும் அவர் அறிவித்துள்ளார். இதனால், அதற்கான கட்டணத்தை செலுத்த வேண்டுமாயின் அது பற்றி அறிய தருமாறும் அவர் கோரியுள்ளார்.

அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்களை தேர்தல் பரப்புரைக்குப் பயன்படுத்தினால், அதற்காக ஒரு லட்சம் ரூபாவை கட்ட ணமாக பெறுவது என அரசு அண்மையில் தீர்மானித்தது.

அரசின் இந்த தீர்மானம் காரணமாக தானும் கட்டணத்தை செலுத்த தயார் என முன்னாள் ஜனாதிபதி கூறியுள்ளார். (ற)

**கண்ணீர் அஞ்சலி**



எமது கழக அங்கத்தவர் மதிராஜ் அவர்களின் அன்புத் தந்தை **பாலசிங்கம் சந்தானகோபால்** அவர்களின் மறைவுச்செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைவதோடு அவர்களின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக் கின்றோம்.

சம்பியன் லேன்,
கொக்குவில் கிழக்கு.

வளர்மதி முன்னேற்றக்கழகமும்
வளர்மதி நிறைவாழ்வகமும்

(c 18104)

## கோத்தாவும்

என எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்கக் குடியுரிமையைக் கொண்டுள்ள பாதுகாப்புச் செய லாளர் கோத்தபாய ராஜபக்ஷ பொதுத் தேர்தலில் களமிறங்கு வார் என்றே பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது. எனினும், அரசமைப்பின் 19ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் இரட்டைப் பிரஜாவுரிமை கொண்ட நபர் தேர்தலில் போட்டியிடுவதில் சிக்கல்நிலை காணப்பட்டதாலேயே அவர் தேர்தலில் இறங்கவில்லை எனக் கூறப்படுகிறது.

இந்த நிலையில், கோத்தபாய ராஜபக்ஷவுக்கு தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வழங்கப்படும் எனவும் கூறப்பட்டது. ஆனால், 29 பே ர் கொண்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பெயர்ப் பட்டியலில் அவரின் பெயர் இல்லை. (ற–சி)

## தமிழினம்

வடக்கு கிழக்கு மாகாணங் களில் எம்மால் நிறுத் தப்பட்ட வேட்பாளர்கள் அனைவரை யும் வெற்றி பெறச் செய்து தமிழ் இனம் என்றும் யாருக்கும் அடிபணியமாட்டாது என்பதை தெளிவாக எடுத்துக் காட்ட வேண்டும். இந்தத் தேர்தலில் எமக்கு தோல்வி ஏற்படுமாயின் எமது வேட்பாளர்களுக்கு கிடைக்கும் தோல்வி என்பதை விட எமது மக்களுக்கு கிடைக்கும் தோல்வியாகவே கருதவேண்டும்.

– இவ்வாறு தெரிவித்தார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட முதன்மை வேட்பாளருமான மாவை சேனாதிராசா.

நேற்று சாவகச்சேரி தொகுதிக்கான தேர்தல் பரப்புரை அலுவலகத்தைத் திறந்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

கடந்த பொதுத் தேர்தலில் எம்மால் முழுமையாக தேர்தல் பரப்புரைகளைக் கூட செய்யமுடியாத அளவுக்கு இராணுவ ஆக்கிரமிப்புகள் அதிகமாக இருந்தது. தேர்தல் நாளன்று கூட வாக்களிப்பு நிலையங்களுக்கு அருகில் பெருமளவு படையினர் குவிக்கப்பட்டதுடன் சிவில் உடையில் காணப்பட்ட இராணுவ புலனாய்வாளர்கள் பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டனர். அதனால் வாக்களிப்போர் வீதம் குறைவடைந்ததால் குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில் ஏனைய கட்சிகளைச் சேர்ந்தவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். ஏதிர்வரும் தேர்தலில் அவ்வாறான நிலைமை இல்லாத தால் தமிழ் மக்கள் அனைவரும் தமது வாக்குகளைச் செலுத்தி யாழ் மாவட்டத்தில் மட்டுமல்ல வடக்கு கிழக்கு மாகாணங்களில் எமது கட்சி சார்பில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களையம் வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

முன்னைய ஆட்சிக் காலத்தில் மக்களிடையே காணப்பட்ட அச்ச நிலை இன்னமும் நீங்கவில்லை என்பதை கூட்டங்களில் கலந்து கொள்ளும் மக்களின் அளவுகளைக் கொண்டு கணிப்பிட முடிகிறது. இவ்வாறான கூட்டங்களில் கலந்து கொள்வோர் அந்த மக்களின் அச்சத்தைப் போக்கக் கூடிய வகையில் அவர்களை ஊக்கப்படுத்தி தேர்தலில் வாக்களிக்கச் செய்யவேண்டும். தமிழ் மக்கள் ஏனோதானோ எனச் செயற் படுவது எதிரணியினருக்கு வாய்ப்பாக அமைந்து விடும்.

கடந்த 2010 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் கொத்துக் கொத்துக்களாக குண்டுகளை வீசி உறவுகளை இழந்த குடும்பங்கள் உயிர் தப்பிச் சென்ற வேளையில் அவர்களை முட்கம்பி வேலிக்குள் அடைத்து வைத்து அங்கு எவரும் தேர்தல் பரப்புரைகளில் ஈடுபடாமல் பார்த்துக் கொண்டதுடன் அங்கு படையாகச் சென்ற ஜனாதிபதி பல்வேறு வாக்குறுதிகளை முட்கம்பி வேலிக்குள் அடைக்கப்பட்டிருந்த மக்களுக்கு வழங்கிய போதிலும் அதற்குச் செவி சாய்க்காத தமிழ் மக்கள் அவர்களுக்கு எதிராகவே வாக்களித்தனர். அதேபோன்று பல்வேறு வாக்குறுதிகளை வழங்கி தேர்தல் பரப்புரைகளில் ஈடுபடுவோருக்கு முகத்தில் கரி பூசுவது போல அவர்களை ஓரம் கட்டும் வகையில் வாக்களிக்க வேண்டும்.

ராஜபக்ஷ மேற்கொண்ட ஊழல்களிலிருந்து தப்பித்துக் கொள்ள குடும்ப ஆட்சியை மீண்டும் கொண்டுவர நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகிறார்.

போர்க் குற்ற விசாரணைகளை துரிதப்படுத்துமாறு சர்வதேச சமூகத்திடம் நாம் வேண்டுகோள் விடுத்துள்ளோம். இந்த விசாரணையின் அடிப்படையில் தமிழ் மக்களின் இனப்பிரச்சினை தொடர்பான விடயங்களும் உள்ளடங்கியுள்ளதால் நாம் பலமாக இருந்தாலே விசாரணைகளை மேலும் விரைவுபடுத்த முடியும்.இதற்கு மக்களின் வாக்கு பலம் அதிகம் எமக்குத் தேவை. தலைவர் சம்பந்தன் கூறுவது போல எமது கட்சிக்கு குறைந்தது 20 இடங்கள் கிடைப்பின் நிச்சயமாக பலம் பொருத்திய நிலையில் சர்வதேச சமூகத்திடம் எமது கோரிக்கைகளை விரைவுபடுத்துமாறு கோரலாம். எமக்கு கிடைத்துள்ள சர்வதேச சந்தர்ப்பத்தை இழந்து விடக்கூடாது எனவே வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபைகளின் உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டு எமது மக்களின் விடிவுக்கு பாடுபடவேண்டும்.

சாவகச்சேரி தொகுதிக்கு களமிறக்கப்பட்டுள்ள க.அருந்தவபாலன் கடந்த தேர்தலின் போது குறைந்த எண்ணிக்கையான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி வாய்ப்பை இழந்தவர். போர்க் காலத்திலும் சரி போருக்குப் பின்னரும் சரி தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு தலைமை தாங்கி போராடியவர் என்பது எமக்குத் தெரியும். அவரது வெற்றியைத் தீர்மானிக்கும் பொறுப்பு தொகுதி மக்களிடமே உள்ளன. தொகுதி மக்களின் வாக்குகளுடன் மாவட்ட மக்களின் வாக்குகளும் இணைந்து அவரை தொகுதியின் பிரதிநிதியாக ஆக்க முடியும். இன்று ஆரம்பிக்கப்படும் கட்சி அலுவலகம் நீங்கள் காட்டும் பெருமுயற்சி நாடாளுமன்ற உறுப்பினரின் அலுவலகமாக மாற வேண்டும் என்பதே எனது அவா. – என்றார். (ற)

## வயலுக்கு

பொலிஸார் தீவிர விசாரணைகளை நடத்தினர். எனினும் குழந்தையைக் கண்டறிய முடியவில்லை. காடுகள், குளங்கள், கிணறுகள் என ஒன்றுவிடாமல் பொலிஸார், கடற்படையினர் தேடுதல் நடத்தினர். பொதுமக்களும் சேர்ந்து பல இடங்களிலும் தேடிய போதும் குழந்தையைக் கண்டு பிடிக்க முடியவில்லை.

ஒரு கட்டத்தில் பொலிஸார் குழந்தையின் தாயின் மீதே சந்தேகப்பட்டனர். தாயின் வாக்கு மூலம் முன்னுக்கு பின் முரணாகக் காணப்பட்டதாக அவர்கள் கூறினர். சிறுமி கடத்தப்பட்டிருக்கலாம் என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

குழந்தை வெளிநாட்டுக்குக் கடத்தப்படுவதைத் தடுக்க அதனது ஒளிப்படம் விமான நிலையங்களுக்கு அனுப்பப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டது. கிளிநொச்சி தாண்டிய அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் தகவல் வழங்கப்பட்டு குழந்தையின் படமும் அனுப்பப்பட்டது.

திடீரெனத் தாய் தன் குழந்தையைக் காட்டேறிதான் கடத்தியது என்று பொலிஸாருக்குத் தெரிவித்திருந்தார். அது மட்டுமல்லாமல் தன்னையும் சிறுவய தில் காட்டேறிதான் கடத்தியதாகவும் தெரிவித்தார். காட்டேறி கடத்தினால் ஓரிரு மாதங்களில் விடுவித்து விடும் எனவும் கூறியிருந்தார். குழந்தையைக் காட்டேறியிடம் இருந்து மீட்க சடங்குகளும் பரிகாரங்களும் விசேட பூஜைகளும் உருத்திரபுரம் எள்ளுக்காட்டு பகுதியில் இடம்பெற்றதாகவும் தெரியவந்தது.

எனினும் பொலிஸார் தமது தேடுதலில் தீவிரமாக இருந்தனர். குழந்தையின் படம் அடங்கிய தேடப்படும் சுவரொட்டிகளை அவர்கள் எல்லா இடங்களிலும் ஒட்டினர்.

இந்நிலையில் நேற்று கிளிநொச்சி பொறிக்கடை அம்மன் கோவிலுக்கு முன்பாக உள்ள குஞ்சுப்பரந்தன் வயலுக்குள் இருந்து பெண் குழந்தை ஒன்றின் உருக்குலைந்த சடலம் மீட்கப்பட்டது.

வயலுக்கு நேற்றையதினம் மருந்து அடிக்க சென்ற நபர் ஒருவர் சடலத்தைக் கண்டு பொலிஸா ருக்கு தகவல் கொடுத்தார். அந்த இடத்திற்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டு விசாரணைகளை ஆரம்பித்தனர். சடலம் காணாமற் போன 3 வயதுக் குழந்தையினுடையதாக இருக்கும் என்று பொலிஸார் நம்புகின்றனர்.

சடலம் எவ்வாறு வயலுக்குள் கொண்டு வரப்பட்டது என்று தமது விசாரணைகளைப் பொலிஸார் முடுக்கி விட்டுள்ளனர். எனினும் குழந்தையின் சாவு மற்றும் காணாமற்போனமை தொடர் பிலான மர்மங்கள் நீடிக்கின்றன. குழந்தையின் உடல் உடற்கூற்றுச் சோதனைக்காக கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டுள்ளது. (உ–21, 101)

## பிரதமர்

எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"புதிதாக ஆரம்பிப்போம் என்பது தான் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் கருப் பொருளாக இருக்கிறது. தனது ஆட்சிக் காலத்தில் எதையும் செய்யவில்லை என்பதையே இது உறுதிப்படுத்துகிறது. இதற்காக பாவமன்னிப் புக் கோரும் நோக்குடனேயே இவ்வாறானதொரு தொனிப் பொருள் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

ஊழல், மோசடி மிக்க வேட்பாளர்களுக்கு வேட்புமனு வழங்கக் கூடாது என வலியுறுத்தப்பட்டிருந்தது. எனினும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பட்டியலிலுள்ளவர்களில் 70 சதவீதமானோர் பல்வேறு சம்பவங்களுடன் தொடர்புடையவர்களாவார்கள். எமது பட்டியலில் தரமானவர்களே களமிறக்கப்பட்டுள்ளனர்.

பிரதமரைத் தெரிவுசெய்யும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை என சரத் என். சில்வா, பீரிஸ், பந்துல குணவர்த்தன ஆகியோர் கூறிவருகின்றனர். நாடாளுமன்றத்தின் பெரும்பான்மையைப் பெற்றிருந்த எவரும் பிரதமரானதில்லை. ஜனாதிபதியின் எண்ணத்தின் அடிப்படையில் நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை ஆதரவு இருக்க வேண்டும். இது விடயத்தில் ஜனாதிபதிக்கு இருக்கும் அதிகாரத்தில் எவரும் தலையிடமுடியாது.

பிரதமரை நியமிக்கும் விடயத்தில் ஜனாதிபதிக்கு அதிகாரம் இல்லையெனில், தான் ஜனாதிபதி யாகத் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் 50 பேருடன் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவை அவர் எப்படி பிரதமராக நியமித்திருக்க முடியும்? தற்போது முன்வைக்கப்பட்டுவரும் வாதங்களை அப்போது முன்வைத்திருக்கலாம் அல்லவா?

அதேவேளை, தனக்கு ஆதரவு வழங்கிய கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்திய பின்னரே தேர்தல் தொடர்பில் தனது நிலைப்பாட்டை ஊடகங்கள் ஊடாக ஜனாதிபதி நாட்டுக்கு அறிவித்தார். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மஹிந்தவுக்கு அவர் பிரதமர் பதவியை வழங்கமாட்டார். எதிர்வரும் 18ஆம் திகதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் பிரதமராவது உறுதி" – என்றார். (ற–சி)

## மயிலிட்டி

யோரும் கலந்துகொண்டிருந்தனர்.

இந்தக் கலந்துரையாடலில், வலி. வடக்கு மற்றும் வலி. கிழக்கில் ஏற்கனவே விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் மக்கள் இலகுவாக நடமாட முடியாமல் மூடப்பட்டுள்ள பாதைகளை விடுவிப்பது தொடர்பில் ஆராயப்பட்டது. பாதைகளை விடுவிக்க இராணுவத்தினர் மறுத்தனர்.

இதேவேளை, மயிலிட்டி துறைமுகத்தை மக்கள் பாவனைக்கு விடுவிப்பது தொடர்பிலும் இந்தச் சந்திப்பில் பேசப்பட்டது. எனினும் துறைமுகத்தை விடுவிக்கும் நோக்கம் படையினருக்கு இருப்பதாக அவர்களது கருத்துக்களில் இருந்து தெரியவரவில்லை என்று பெயர் குறிப்பிட விரும்பாத அதிகாரி ஒருவர் உதயன் பத்தரிகையிடம் தெரிவித்தார்.

"2004ஆம் ஆண்டு சுனாமிப் பேரழிவின்போது மயலிட்டித் துறைமுகம் கடுமையாகச் சேதமடைந்து விட்டது என்று கடற்படையினர் தெரிவித்தனர். அதற்குப் பதிலாக புதிய மீன்பிடித் துறைமுகம் ஒன்றைக் கட்டி மயிலிட்டி மக்களை, வளலாயில் குடியமர்த்தும் யோசனையை கடற்படையினர் முன்வைத்தனர்" என்றார் அந்த அதிகாரி.

மயிலிட்டித் துறையை அண்டிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தமது சொந்த இடத்திற்குத் திரும்பும் எதிர்பார்ப்புடன் 25 வருடங்களுக்கும் மேலாகக் காத்திருக்கிறார்கள். அவர்களில் பலர் இன்னும் இடம்பெயர்ந்தோர் முகாம்களிலேயே தங்கியுள்ளனர்.

இந்தக் கூட்டத்தில், வலி. வடக்கில் மேலும் மீள்குடியமர்வுகளை மேற்கொள்வதற்கான எந்தச் சமிக்ஞையும் வெளியிடப்படவில்லை என்றும் உதயன் பத்திரிகை அறிந்தது. (ற–5)

## மஹிந்த

வைச் சந்தித்து, தேசியப் பட்டியலில் இடம்பெறும் வேட்பாளர்கள் குறித்து கவனமாகப் பரிசீலித்தார்.

அதில் மஹிந்த ராஜபக்ஷவால் முன்மொழியப்பட்டிருந்த முன்னாள் கடற்படைத்தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட, முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா, முன்னாள் இராஜதந்திரி தயான் ஜெயதிலக ஆகியோரது பெயர்களை நீக்குமாறு அவர் உத்தரவிட்டார்.

அதற்குப் பதிலாக உள்ளடக்கப்பட வேண்டிய பெயர்களையும் அவர் எடுத்துக் கூறினார் என்றும் ஆங்கில வார இதழ் தகவல் வெளியிட்டுள்ளது. (ற–சி)

## 1 கிலோ கிராம்

சுமார் 1 கிலோ 400 கிராம் கேரள கஞ்சா யாழ்.பொலிஸாரால் நேற்றுக் கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து நேற்று மதியம் 1.30மணியளவில் குறித்த பகுதியில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பெண்கள் பயன்படுத்தும் ஸ்கூட்டி மோட்டார் சைக்கிளை சோதனை செய்தபோதே பொதிகளில் சுற்றப்பட்டிருந்த கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண தலைமை பொலிஸ் பரிசோதகர் வுட்லர் உதயகுமார தலைமையில் யாழ்.மாவட்ட போக்குவரத்து பொறுப்பதிகாரி சஞ்சீவ பெரேரா மற்றும் பொலிஸ் புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரி பொன்சேகா உட்பட்ட பொலிஸ் குழுவினர் இந்தச் சுற்றிவளைப்பை மேற்கொண்டனர். இது தொடர்பில் இருவர் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 37 மற்றும் 25 வயதுடைய பருத்தித்துறை ஓராங்கட்டை மற்றும் வியாபாரிமூலை பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸ் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

யாழ்.பொலிஸ் நிலைய தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்கள் இன்று யாழ்.நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப் படவுள்ளனனர் எனப் பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற–ரி)


## கமரூனை

கிறது. அவர் தற்போது இலங்கையில் தங்கியிருந்து பரப்புரைப் பணிகள் குறித்த ஆலோசனைகளை வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் அழைப்பை ஏற்று அவர் இவ்வாறு இலங்கை வந்துள்ளார். தேர்தல்களின்போது பொருளாதார மற்றும் கொள்கைப் பிரகடனங்கள் போன்றன விசேட நிபுணராக க்ரொஸ்பி திகழ்கின்றார். (ற–சி)

# மைத்திரி விரைவில் வெளியேற்றப்படுவார்

## கூறுகிறார் வாசுதேவ



கொழும்பு, ஜூலை 20

நாடாளுமன்றத் தேர்தலை அடுத்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இருந்து ஜனாதிபதியை வெளியேற்றப்போவதாக வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தல் தற்போது நெருங்கியுள்ள நிலையில், தலைவர் பதவிகளில் மாற்றங்களைச் செய்ய முடியாத நிலை உள்ளதாகவும், தேர்தலின் பின்னர் ஜனாதிபதியை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இருந்து நீக்குவது எனவும், இதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர்களில் பெரும்பாலனவர்கள் தீர்மானித்துள்ளதாகவும் ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இதன்பின்னர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலை வராக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நியமிக்கவுள்ள தாகவும் இதன்போது வாசுதேவ கூறினார். (த)

# மஹிபால ஹேரத்தின் வாகனத்தில் கஞ்சா

கொழும்பு, ஜூலை 20


சப்ரகமுவ மாகாண முதலமைச்சர் மஹிபால ஹேரத்தின் பாதுகாப்பு வாகனத்தில் சுமார் 3கிலோ கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

பொல்காவெல பிரதேசத்தில் நேற்று முன் தினம் பிற்பகல் மேற்கொள்ளப்பட்ட பொலிஸ் சோதனையின்போதே இவை மீட்கப்பட்டுள்ளன.

சம்பவத்தை அடுத்து பலர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், வாகனமும் பொலிஸ் தடுப்பில் வைக்க பட்டுள்ளது. கைதானவர்களை கேகாலை நீதிமன்றத்தில் முற்படுத்த நட வடிக்கை எடுக்கப்பட்டது. இதே வேளை, தனது வாகனத்தில் கஞ்சா மீட்கப்பட்டதை அறிந்த முதலமைச்சர் தனது வாகனம்காணாமற் போய் விட்டதாக கேகாலை பொலிஸ் நிலை யத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (த)

# மஹிந்த ஒரு சந்தர்ப்பவாதி

## சாடுகிறார் சஜித்



கொழும்பு, ஜூலை 20

மஹிந்த ராஜபக்ஷ ஒரு சந்தர்ப்பவாத அரசியல்வாதி மட்டுமல்லாது தனது குடும்பத்துக்காகவே அரசியலில் மீண்டும் வந்துள்ளதாக அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். திஸ்ஸமஹாராமையில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

முன்னாள் ஜனாதிபதியின் அரசியல் ஆரம்பம் அம்பாந்தோட்டை மக்களால் வழங்கப்பட்டது. அவர் அனைத்தையும் மறந்து தற்போது குருணாகல் மாவட்டத்தில் போட்டியிட இறங்கியுள்ளமையின் மூலம் இவர் ஒரு சந்தர்ப்பவாத அரசியல்வாதி என்பது தெளிவாகத் தெரிகிறது. அத்துடன் மஹிந்த தனது குடும்பத்துக்கும் தன்னுடன் இருந்த வர்களுக்குமாகவே அரசியலில் மீண்டும் நுழைந்துள்ளார்– என்றார்.(த)

# துமிந்த திஸாநாயக்கவை தோற்கடிக்கத் திட்டமாம்

## மஹிந்தவின் தலைமையில்

கொழும்பு, ஜூலை 20

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிடும் துமிந்த திஸாநாயக்கவை தோல்வியடைய வைக்க முன்னாள் ஜனாதிபதி மஹிந்த திட்டம் வகுத்துக் கொடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அநுராதபுர மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிடும் துமிந்த திஸாநாயக்கவைத் தோல்வியடையச் செய்ய முன்னாள் ஜனாதிபதி மஹிந்த அநுராதபுர மாவட்டக் குழுவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகத் தகவல்கள் கசிந்துள்ளன.

துமிந்த திஸாநாயக்க கொள்கை தீர்மானத்துக்கு அமையக் கூட்டங்களில் கலந்து கொள்ளமாட்டேன் என்றும், அநுராத புர மாவட்டத்தில் இடம்பெற்ற பேரணி வெற்றியடைய முழுமையான ஆதரவு வழங்குவதாகவும் தெரிவித்திருந்தார். ஆனால் குறித்த பேரணியில் அவர் கலந்துகொள்ளவில்லை.

இதனாலேயே மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு தெரிவித்து வரும் துமிந்த திஸாநாயக்கவை தேர்தலில் தோல்வியடையச் செய்ய மஹிந்தவும் அவரது தரப்புக்களும் முனைப்புக் காட்டி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# கெஹலிய, கிரியெல்ல மீது தேர்தல் விதியை மீறியதாக வழக்கு

கொழும்பு, ஜூலை 20

தேர்தல் ஆணையாளரின் அறிவுறுத்தலுக்கு அமைய முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல மற்றும் அமைச்சர் லக்ஜஸ்மன் கிரியெல்ல ஆகியோருக்கு எதிராக வழக்கு தொடரப்படவுள்ளது.


கடந்த 13 ஆம் திகதி வேட்பு மனுத் தாக்கல் செய்த பின்னர் தேர்தல் சட்டத்தை மீறிப் பேரணி நடத்தியதாக இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் தேர்தல் ஆணையாளரின் அறிவுரைக்கு அமைய கண்டி பொலிஸாரினால் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

அன்றைய தினம் பேரணி நடத்துவதற்கு தேர்தல் ஆணையாளரால் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.இதனையும் மீறிப் பேரணி நடத்தியவர்களுக்கு எதிராகவே வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# எனக்கு குழி தோண்டியோருக்கு சரியான பதிலளிப்பார் கடவுள்

## கூறுகிறார் மேர்வின் சில்வா



கொழும்பு, ஜூலை 20

தனக்குக் குழி வெட்டியவர்களுக்குக் கடவுள் எதிர்வரும் ஓகஸ்ட் 17ஆம் திகதி சரியான பதில் கொடுப்பார் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

சிங்களப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலே... அவர் இவ்வாறு தெரிவித்து... ளார்.

முன்னாள் ஜனாதிபதி மஹி... தவின் குடும்பச் சக்கரத்... சிக்கியதால் எனக்கு வே... மனு கிடைக்கவில்லை.

இருப் பினும் இதுவரை கா... மும் அரசியலில் மக்களு... காக சேவையாற்றிய... நான். தொடர்ந்தும் என... சேவையை மக்களுக்... ஆற்றவுள்ளேன் என்று அ... தெரிவித்தார்.

அத்துடன் கடந்த கால... ளில் கட்சிக்காகச் சிறைக்... சென்ற நிலையும் ஏற்பட்... அது எனக்கு இப்போதும் ... கனவாக உள்ளதாக ... வின் சில்வா கூறினார். (...

# சொகுசு வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி

*– பொன்சேகா*

கொழும்பு, ஜூலை 20

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாட்டில் நல்லாட்சியை முன்னெடுத்துச் செல்லப் பாடுபடுகின்றார். ஆனால் அவரின் கட்சியிலுள்ள பெரும்பாலானோர் ஊழல் மோசடிகளில் சுதந்திரமாக ஈடுபட்டவர்கள். நல்லாட்சி ஏற்படுமானால் அவர்களின் சொகுசு வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு விடும். எனவேதான் அவர்கள் நல்லாட்சியை எதிர்க்கின்றனர் என்று ஜனநாயகக் கட்சியின் தலைவர் பீல்ட்மார்ஷல் சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார். (ற)

# பிறரைத் தோற்கடிக்கும் முயற்சியை கைவிடுங்கள் என்கிறார் சேகுதாவூத்

கொழும்பு, ஜூலை 20

பிறரைத் தோற்கடிக்கும் முயற்சியை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும் அதன் தலைமையும் கைவிட வேண்டும் என அந்தக் கட்சியின் தவிசாளரும் முன்னாள் அமைச்சருமான பசீர் சேகுதாவூத் தெரிவித்தார்.

அமைச்சர் ரவூப் ஹக்கீமின் பங்குபற்றலுடன் முன்னாள் அமைச்சர் பசீர் சேகுதாவூத்தின் வீட்டில் நடைபெற்ற ஆதரவாளர்களுடனான கலந்து ரையாடலிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்று கையில்,

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும் அதன் தலைமையும் தங்களின் கட்சி சார்பாக தேர்தல் களத்தில் இறக்கியுள்ள வேட்பாளர்களை வெற்றிபெறச் செய்யும் முயற்சியில் இறங்க வேண்டும். இது மட்டக்களப்பு மாவட்டமாக இருந்தாலும் சரி, தேசிய ரீதியாக இருந்தாலும் சரி. முஸ்லிம் காங்கிரஸும், அதன் தலைமையும் திட்டமிட்டு வியூகங்களை அமைக்க வேண்டும். அதற்காக தங்களது நேரத்தையும், பெறுமதிமிக்க தங்களது கட்சியின் சமூக நோக்கங்களை வேறு பாதைக்கு மாற்றக் கூடாது. பிரதேசங்களை பிரதிநிதித்துவப் படுத்துக்கின்ற சமூகங்கள் பொருந்திக்கொள்ள முடியாதவாறு மாற்றுக் கட்சிகளின் வேட்பாளர்களை தோற்கடிக்கும் முயற்சியை கைவிட வேண்டும்.

மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸானது எப்பொழுதும் தனது வேட்பாளர்களை வெற்றிபெறச் செய்வதனை இலட்சியமாகக் கொண்டு செயற்பட்டு அதன்பால் கிடைக்கும் வெற்றியோடு தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு அடுத்தபடியாக அரசியல் செல்வாக்கு மிக்க கட்சியாக மாவட்டத்திலேயும் மாகாணத்திலேயும் இருக்க வேண் டும் என்பதற்காகவே நான் இந்த முறை கட்சியின் சார்பாக வேட்பாளராகக் கள மிறங்குவதைத் தவிர்த்தேன்.– என்றார். (ற–10)

# ஊழல் மோசடிகள் ஆணைக்குழுவுக்கு ஐ.ம.சு.முவினரால் கடும் அழுத்தங்கள்

கொழும்பு, ஜூலை 20

ஊழல் மோசடிகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு பல்வேறு அழுத்தங்கள் கொடுக்கப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த மஹிந்த ஆட்சியில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவுக்கே இவ்வாறு அரசியல் மட்டத்தில் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டு வருவதாகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஊழல் மோசடிகள் தொடர்பில் இடம்பெற்று வரும் விசாரணைகளைத் தடுக்கும் நோக்கில் கொழும்பில் உள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அரசியல்வாதிகள் உள்ளிட்டவர்களே இந்த அழுத்தங்களைப் பிரயோகித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 5ஆ ண்டுகளில் இடம்பெற்ற நிதி மோசடிகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை ஆணைக்குழுவுக்கு சுமார் 800 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இவற்றில் தற்போது 200 முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த அரசில் இருந்த சில அரசியல்வாதிகள் மற்றும் நிதிநிறுவனங்களின் அதிகாரிகள் உட்பட பலருக்கு எதிரான முறைப்பாடுகளே தற்போது விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை, முன்னாள் பிரதி அமைச்சர் ஒருவர் தனது அமைச்சின் கீழ் உள்ள நிறுவனம் ஒன்றில் தனது அரசியல் நடவடிக்கைகளுக்காக சுமார் 132 லட்சம் ரூபாவைப் பெற்றுக்கொண்டுள்ளமை ஆணைக்குழுவின் விசாரணைகள் மூலம் கண்டறியப்பட்டுள் ளது.(த)

## இன்றைய ஆட்டங்கள்



யாழ்ப்பாணம், ஜூலை 20

***கலைமதி வி.கழகத்தொடர்***

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இந்தத்தொடரில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து திக்கம் இளைஞர் அணி மோதவுள்ளது. பி.ப. 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் ஞானகலா அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் அணி மோதவுள்ளது.

***வளர்மதி வி.கழகத்தொடர்***

வளர்மதி சனசமூக நிலையத்தின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வளர்மதி விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 7பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டம் ஒன்று இன்று திங்கட்கிழமைகழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. பி.ப. 4மணிக்கு இடம்பெறும் குறித்த அரையிறுதியாட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து நாவாந்துறைசென்.மேரிஸ்அணி மோதவுள்ளது. (ம-23)

## சென்.ஜேம்ஸ் வி.கழகத்தின் முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 20

அருட்தந்தை சாள்ஸ் கொலின்ஸ் அடிகளாரின் குருத்துவத்திருநிலைப் படுத்தலின் 25ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஊர்காவற்றுறை சென்.ஜேம்ஸ் விளையாட்டுக்கழகமும் சென்.ஜேம்ஸ் சனசமூக நிலையமும் இணைந்து அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்திய விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் ஊர்காவற்றுறை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டங்களில் வெற்றிபெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு: புங்குடுதீவு காந்தி அணிக்கும் புங்குடுதீவு பாரதி அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் புங்குடுதீவு பாரதி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. மெலிஞ்சி முனை இருதயராஜர அணிக்கும் புங்குடுதீவு ஜங்கரன் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் மெலிஞ்சி முனை இருதயராஜர அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. அம்பிகைநகர் மகேஸ்வரி அணிக்கும் நாரந்தனை அண்ணா அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் நாரந்தனை அண்ணா அணி, 2:0என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

# கொடிகட்டிப் பறந்தது கொற்றாவத்தை அ.த.க. பாடசாலை



மாங்குளம், ஜூலை 20

தேசியவிளையாட்டு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான 13வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் கொற்றாவத்தை அ.த.க. பாடசாலை அணி வதிரி தேவரையாளி இந்து கல்லூரி அணியை 9-0 என்ற அடிப்படையில் அபாரமாக வீழ்த்தி சம்பியனாகியது.

ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய கொற்றாவத்தை அ.த.க. பாடசாலை அணியினரின் ஆட்டத்தைக் கட்டுப்படுத்தமுடியாமல் தேவரையாளி இந்துகல்லூரி அணியினர் திணறினர். தேவரையாளி இந்துக்கல்லூரி தடுமாற்றத்திலிருந்து சுதாகரித்துக்கொண்டு மீள்வதற்குள் கொற்றாவத்தை கோல் மழையில் கொடிகட்டிப்பறக்க ஆரம்பித்துவிட்டது. ஆட்டம் ஆரம்பித்து ஐந்துநிமிடங்கள் முடியும் முன்னரே கொற்றாவத்தையின் சார்பாக மூன்றுகோல்கள் பதிவாகி விட்டன. முதல் மூன்று கோல்களை யும் விளாசிய சந்தோஸ் 6வது நிமிடத்திலும் மேலும் ஒருகோலைப்போட்டு அசத்த ஆட்டத்தின் முதல் பாதி 4-0 என்ற கொற்றாவத்தையின் ஏக ஆதிக்கத்துடன் முடிவுக்கு வந்தது.

ஆட்டத்தின் இரண்டாவது பாதியிலும் கொற்றாவத்தையின் ஆதிக்கம் தொடர்கதையாகத் தொடரத்தான் செய்தது. விழி பிதுக்குவதைத் தவிர வேறெதும் செய்ய முடியவில்லை தேவரையாளி இந்துக் கல்லூரியால். இரண்டாம் பாதியில் இரட்டிப்பு வேகம்காட்டிய கொற்றாவத்தை இந்துக்கல்லூரி இரண்டாம் பாதியின் 1ஆவது, 2ஆவது, 4ஆவது, 5ஆவது, 7ஆவது நிமிடங்களில் ஐந்துகோல்களைப் பதிவு செய்ய முடிவில் கொற்றாவத்தை அணி 9-0 என்ற கோல்களின் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியனாகியது. (ம-422)

# உடுப்பிட்டி சிவகுமரன், அல்வாய் மனோகரா இளைஞர் கழகங்களில் சம்பியன்களாகின





கரணவாய், ஜூலை 20

கரவெட்டிப் பிரதேச இளைஞர் கழகங்களுக்கிடையிலான ஆண்களுக்கான கரப்பந்தாட்டத் தொடரில் உடுப்பட்டி சிவகுமரன் விளையாட்டுக்கழகமும் பெண்களுக்கான வலைப்பந்தாட்டத்தில் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகமும் வெற்றிபெற்று நடப்பு வருடத்தின் பிரதேச சம்பியன்களாகின.

இமையாணன் மத்திய விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த இறுதியாட்டங்களில் முதலில் இடம்பெற்ற பெண்களுக்கான வலைப்பந்தாட்ட இறுதியாட்டத்தில் நவிண்டில் கலைமதி இளைஞர் கழகமும் அல்வாய் மனோகரா இளைஞர் கழகமும் மோதின. ஆரம்பம் முதல் ஆட்டத்தில் சமநிலைத்தன்மை அழையா விருந்தாளியாக இடம்பிடித்து வந்தாலும் இறுதியில் அதிரடியாக விளையாடிய மனோகரா இளைஞர் கழகம் 12:9 என்ற புள்ளிகளைப் பெற்று நடப்பு வருடச் சம்பியனாகியது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆண்களுக்கான கரப்பந்தாட்டத்தில் உடுப்பட்டி சிவகுமரன் விளையாட்டுக் கழகமும் வல்வெட்டித்துறை கருணாகரன் இளைஞர் கழகமும் மோதின. மூன்று செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் சிவகுமரன் இளைஞர் கழகம் 2:1 என்றநேர் செற்களில் வெற்றிபெற்றுச் சம்பியனாகியது

குறித்த நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக வரணி கிராமிய வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி வி.கமலநாதனும் சிறப்புவிருந்தினர்களாக பிரபல தொழிலதிபர் எஸ்.விக்கினேஸ்வரன், யாழ் மாவட்ட இளைஞர் சேவைகள் மன்ற உதவிஇயக்குனர் ஐ.தவேந்திரன், யாழ். மாவட்ட சம்மேளனத் தலைவர் எஸ்.விஜிதரன் மற்றும் இமையாணன் அ.த.க. வித்தியாலய அதிபர் கு.ரவீந்திரன் உட்படப் பலரும் கலந்துகொண்டனர். (ம-108)

# குழப்பங்களுக்கு மத்தியில் மகுடம் சூடியது உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம்

கரணவாய், ஜூலை 20

கரவெட்டிப் பிரதேச இளைஞர் கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் நவசக்தி இளைஞர் கழகத்தை 1-0 என்று திரிலாக வீழ்த்தி சம்பியனானது உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி.

ஆட்டம் ஆரம்பமானது முதல் இரு அணிகளுக்கும் வாய்ப்புக்கள் கிடைப்பதும் அவை தவறவிடப்படுவதும் தவறாமல் நடந்துகொண்டிருந்தது. இதே நிலைமை பெரும்பாலான நேரம் நீடிக்க கோல் கணக்கு ஆரம்பிக்கப்படாமல் 0-0 என்ற நிலையில் முதல்பாதி முடிவடைந்தது.

இரண்டாம் பாதியிலும் இதே நிலைமைதான். ஆனாலும் வாய்ப்புக்கள் அமைவதிலும் பார்க்க அமைத்துக்கொள்ள வேண்டும் என்ற முனைப்பில் நவஜீவன்ஸ் தீவிரம் காட்டியது. முயற்சிக்குப் பலனாக ஆட்டம் நிறைவடைவதற்கு ஒருநிமிடம் இருக்கும்பொழுது மைதானத்தின் மத்திய பகுதியில் இருந்து உயரமாக உதைக்கப்பட்ட பந்தொன்றை நவஜீவன்ஸ் அணியின் இடதுகரை முன்னணிவீரர் சுரேஸ் கோல் கம்பங்களுக் கண்மையில் வைத்து உயர எழும்பி தலையால் இடித்துக் கோலாக மாற்ற நடுவரும் கோல் பதியப்பட்ட முறையில் எந்தத் தவறும் இல்லை என்று நவஜீவன்ஸ் பக்கம் பச்சைக்கொடி காட்டினார். ஆனால் நடுவரின் தீர்ப்பை எதிர்த்த நவசக்தி அணியினர் தொடர்ந்து விளையாட மறுப்புத் தெரிவித்தனர். இதனால் நடுவர்களும் ஏற்பாட்டாளர்களும் இணைந்து நவஜீவன்ஸ் அணி வெற்றிபெற்றதாக அறிவித்தனர். இதன் அடிப்படையில் 1:0 என்ற கோல் கணக்கில் நவஜீவன்ஸ் வெற்றி பெற்று நடப்பு வருட பிரதேச சம்பியனாகியது. (ம-108)

# மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டிகள்

கொழும்புத்துறை, ஜூலை 20

ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் 28 ஆவது ஆண்டு நிறைவையொட்டி மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டிகள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றன.

கால்களை இழந்த ஆண்கள், பெண்களுக்கான 5 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டிகள், முச்சக்கர வண்டி ஓட்டம், சக்கர நாற்காலி ஓட்டம் என்பன வீதி நிகழ்வுகளாக இடம் பெற்றன. துடுப்பாட்டம், கரப்பந்தாட்டம், பூப்பந்தாட்டம், வினோத உடைப்போட்டி, கயிறு இழுத்தல் போட்டிகள், வலைப்பந்தாட்டம் ஆகியன மைதான நிகழ்வுகளாக சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

குறித்த நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக ஊவா மாகாண சபை விவசாய அமைச்சரும் மாற்றுத் திறனாளியுமான செனரத் அத்தநாயக்க கலந்துகொண்டார்.(ம-135)



# வளர்மதி விளையாட்டுக்கழகத் தொடர் இளைஞர், வாலிபர் சம்பியன்



யாழ்ப்பாணம், ஜூலை 20

வளர்மதி சனசமூக நிலையத்தின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வளர்மதி விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரின் 'ஏ' பிரிவு, 'பி' பிரிவு அணிகளுக்கு இடையிலான இறுதி ஆட்டங்கள் நேற்று முன்தினம் சனிக்கிழமை கழக மைதானத்தில் இடம்பெற்றன. இதன்படி 'ஏ' பிரிவில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியும் 'பி' பிரிவில் அச்சுவேலி தோப்பு வாலிபர் அணியும் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றின.

முதலில் இடம்பெற்ற 'ஏ' பிரிவு அணிகளுக்களுக்கான இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய அணி மோதிக் கொண்டது. 5 செற்களைக் கொண்ட இந்த இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி 3:2 என்ற செற்கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் ஆனது. 'ஏ' பிரிவில் சிறந்த வீரனாக ஆவரங்கால் மத்திய அணியின் சிவசொரூபன் தெரிவானார்.

தொடர்ந்து இடம்பெற்ற 'பி' பிரிவு அணிகளுக்களுக்கான இறுதியாட்டத்தில் அச்சுவேலி தோப்பு வாலிபர் அணியை எதிர்த்து நாயன்மார் கட்டு பாரதி அணி மோதிக் கொண்டது. 5 செற்களைக் கொண்ட இந்த இறுதியாட்டத்தில் அச்சுவேலி தோப்பு வாலிபர் அணி நான்காவது செற்றுக்கு வேலைவைக்காமல் 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் ஆனது. 'பி' பிரிவில் சிறந்த வீரனாக அச்சுவேலி தோப்புவாலிபர் அணியின் வினோதன் தெரிவானார்.

இறுதியாட்டங்களுக்கு பிரதம விருந்தினராக உதயன் பத்திரிகையின் அதிபரும் யாழ்.மாவட்ட முன்நாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை அதிபர் ஆர்.தங்கவேல், கிளிநொச்சி விளையாட்டுத்துறை இணைப்பாளர் எல்.அனுர காந்தனும் கௌரவ விருந்தினர்களாக மட்டுவில் தெற்கு கிராம அலுவலர் க.வாமதேவன், தென்மராட்சி பிரதேச செயலக பதில் விளையாட்டு அதிகாரி ஆர்.நித்தில நாயகம், கைதடி ஸ்ரீ முத்துமாரி அம்மன் மரத் தொழிற்சாலையின் உரிமையாளர் செ.பஞ்சலிங்கம் ஆகியோர் கலந்து கலந்துகொண்டனர். (ம-23)

# வெற்றியை அண்மிக்கிறது ஆஸ்திரேலியா



இங்கிலாந்து ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான 5 டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட ஆஷஸ் தொடரின் இரண்டாவது ஆட்டம் தற்பொழுது இங்கிலாந்தின் லோட்ஸ் மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இந்த ஆட்டத்தின் மூன்றாம் நாளான நேற்றுமுன்தின முடிவில் ஆஸ்திரேலியா இரண்டாவது இன்னிங்ஸிற்காக இலக்குகள் இழப்பில்லாமல் 108 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலியா எதிர்பார்த்ததைப் போல் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்க 566–8 என்ற நிலையை எட்டியபொழுது ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தார் கிளார்க். பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பாக புரோட் 4 இலக்குகளையும் ரூட் 2 இலக்கு களையும் வூட் மற்றும் அலி இரு வரும் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

567 ஓட்டங்களைப் பெற்றால் முன்னிலைபெறலாம் என்ற முனைப்பில் களமிறங்கிய இங்கிலாந்து இரண்டாம்நாள் முடிவில் 85–4. தொடர்ந்து மூன்றாம் நாளுக்காக துடுப்பெடுத்தாட குக் 21 ஓட்டங்களுடனும் ஸ்ரோக்ஸ் 38 ஓட்டங்களுடனும் களமிறங்கினர். இங்கிலாந்து 30 ஓட்டங்களைப் பெற்றிருந்தவேளையில் நான்காவது இலக்கு வீழ்த்தப்பட்டுவிட்டது. ஆனால் ஐந்தாவது இலக்கினை வீழ்த்துவதென்பது ஆஸ்திரேலிய வீரர்களுக்கு எட்டாக்கனியாகவே இருந்துவந்தது. ஸ்ரோக்ஸ் பதட்டங்களை உணராதவராக ஆடிக் கொண்டிருந்தாலும் நிதானத்துக்கு மேல் நிதானம் காட்டிக்கொண்டிருந்தார் குக். இணைப்பாட்டமாக நூறு ஓட்டங்கள் பகிரப்பட்டாயிற்று நான்கு இலக்குகளை மிகக்குறுகிய இடைவெளியில் சரித்த ஆஸ்திரேலியப் பந்துவீச்சாளர்கள் இணைப்பாட்டத்தைப் பிரிக்க முடியாமல் தடுமாறிக்கொண்டிருந்தனர். 145 ஓட்டங்கள் இணைப்பாட்டமாகப் பகிரப்பட்டு அணியின் ஓட்ட எண்ணிக்கை 175ஆக இருந்தபொழுது 87 ஓட்டங்களுடன் மார்ஸின் பந்தில் போல்ட்டாகி பவிலியன் திரும்பினார் ஸ்ரோக்ஸ். 96 ஓட்டங்களுடன் சதத்தைத் தவற விட்டு பவிலியன் திரும்பினார் குக். பின்வரிசை தொடர் சொதப்பல். முடிவில் இங்கிலாந்து 312.

254 ஓட்டங்கள் முன்னிலையுடன் மேற்கொண்டு அணியைப் பலப்படுத்த களத்தில் வோர்ணர் மற்றும் றோயேர்ஸ். அடித்தாடி விரைவாக ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தை இடைநிறுத்த வேண்டும் என்பதே வியூகம். அதற்கு ஏற்றால்போல் விளாசித்தள்ளினார் வோர்ணர். 30 என்ற சராசரியை விட்டுத் தாண்டாத றோயேர்ஸ் நேற்றுமுன்தினம் 60 என்ற சராசரிக்கு குறையாமல் ஆடிக்கொண்டிருந்தார். இலக்குகள் இழப்பில்லாமல் இணைப்பாட்டம் நூறினை எட்டியது அரைச்சதத்தைப் பதிவுசெய்தார் வோர்ணர். மூன்றாம்நாள் முடிவில் ஆஸ்திரேலியா 108–0. (ம)

# மீண்டும் களமிறங்க தயாராகிறார் சமி



தொடர்ந்து ஆட்டங்களில் பங்கெடுத்து வந்த காரணத்தினாலும் முழங்காலில் அறுவைச் சிகிச்சை செய்யவிருந்த காரணத்தினாலும் சமிக்கு இந்திய அணியிலிருந்து விருப்ப ஓய்வு அளிக்கப்பட்டது. இந்த நிலையில் அறுவைச்சிகிச்சை முடிவடைந்ததும் மீண்டும் இந்திய அணிக்குத் திரும்புவதுக்கான பயிற்சியில் இறங்கியுள்ளார் சமி.

பெங்களூர் தேசிய பயிற்சிப்பட்டறையில் சமி தனது பயிற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும், தென்னாபிரிக்கா – இந்தியா, இலங்கை – இந்தியா இவ்வாறான பெரிய தொடர்களுக்கு முன்னதாக சமி தயாராகிவிடுவார் என்றும் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை தெரிவித்துள்ளது. நேற்றுமுன்தினம் சமிக்குப் பெண்குழந்தை பிறந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

# ஐ.பி.எல். ஏமாற்றம் தருகிறது

ஐ.பி.எல். சூதாட்ட வழக்கில் சென்னை சூப்பர் கிங்ஸ், ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிகள் தடைசெய்யப்பட்டது ஏமாற்றமளிக்கிறது என்று கூறிய இந்திய 'ஏ' அணியின் பயிற்சியாளர் ராகுல் ராவிட், ஒரு சிலரின் தவறால் ஒட்டுமொத்த வீரர்களும் பாதிக்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

சென்னை, ராஜஸ்தான் தடை தொடர்பாக ராவிட் மேலும் தெரிவித்ததாவது; இது மிகவும் ஏமாற்றமளிக்கிறது. சில சமயங்களில் ஓரிருவர் செய்யும் தவறுகளினால் அனைவரும் பாதிக் கப்படுகின்றனர். இதில் படிமுறை அமைப்பில் கீழ் உள்ளவர்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். இளம் வீரர்களுக்குத்தான் இந்த முடிவு பெரிய பாதிப்பை ஏற்படுத்தும். அது தான் எனக்கு ஏமாற்றமளிக்கிறது, ஆனால் உச்ச நீதிமன்ற தீர்ப்பினை முழுதும் மதிக்கிறேன். அவர்களிடத்தில் கூடுதல் தகவல்கள் இருந்தன என்றார். (ம)



# சிம்பாப்வே அணிக்குள்ளும் பனிப்போர்

சிம்பாப்வே கிரிக்கெட் வீரர் உத்சயா தனது அணியின் இயக்குனரான அலிஸ்டர் கேம்பல் மீது (ஓய்வுபெற்ற சிம்பாப்வே வீரர்) இனவெறி புகார் கொடுத்து இருப்பது தற்போது தெரியவந்துள்ளது.

இனவெறிப்புகார் தொடர்பான கடிதத்தை உத்சயா உலகக்கிண்ணத் தொடர் முடிந்ததும் சிம்பாப்வே கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையிடம் கொடுத்துள்ளார். அதில் தன்மீது கேம்பல் இனபாகுபாடுடன் நடந்து கொண்டதாக குறிப்பிட்டுள்ளார். உலகக்கிண்ணத் தொடருக்கான 15 வீரர்கள் கொண்ட அணியில் உத்சயா இடம்பெற்றிருந்தாலும் ஒரு ஆட்டத்திலேனும் களமிறக்கப்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# ஹடினுக்கு அச்சுறுத்தல்



சிட்னி நகரில் வசித்துவரும் ஆஸ்திரேலிய அணியின் இலக்குக்காப்பாளர் பிராட் ஹடின் வீட்டுத் தோட்டத்தில் மண்ணில் புதைத்து வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டுகளை ஆஸ்திரேலிய பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இது வீட்டிலேயே தயாரிக்கப்படும் வெடிகுண்டு ரகம் என்றும் யாரோ தனிப்பட்ட பகையால் ஹடின் வீட்டில் இதனைப்புதைத்து வைத்துள்ளார்கள் என்றும் பொலிஸாரின் முதல்கட்ட விசாணையில் தெரிய வந்துள்ளது. இங்கிலாந்தில் நடைபெற்று வரும் ஆஷஸ் தொடரில் பங்கேற்று விளையாடி வரும் ஹடினுக்கு இந்த தகவல் தெரிவிக்கப்பட்டதும் அவர் தனது குடும்பத்தினரைப் பார்க்க அவசரஅவசரமாக புறப்பட்டுவிட்டாராம். இதனால் தான் 2ஆவது டெஸ்ட் ஆட்டத்தில் ஹடின் பங்கேற்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)





காடுகளை ஊடுருவி கார் பந்தயம் என்ற தொனிப்பொருளில் கோவாவில் நடைபெறும் பிரபல ஆர்.எப்.சி. கார் பந்தயத்தின் இரண்டாவது சீசன் எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. ஜூலை 24ஆம் திகதி தொடங்கி 31ஆம் திகதி வரை சவாலான மலைப்பாதையில் நடைபெறும் இந்த தொடர் மொத்தம் 24 நிலைகளாக நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)



மைதானத்தில் தான் எதிர் கொண்ட சுவாரஷ்யமான சம்பவங்கள் சிலவற்றை தனது ருவிட்டர் வலைத் தளத்தில் பட்டியலிட்ட ஆஸ்திரேலியாவின் அதிரடி வீரர் மக்ஸ்வெல் அவற்றிலொன்றாக இலங்கைக்கு எதிரான ஆட்டத்தில் இலங்கை ரசிகர்கள் தன்னை நோக்கி ஆனந்தமாக கூக்குரலிட்டதைக் குறிப்பிட்டுள்ளார். (ம)

## அறிமுக வீரர்களுடன் களமிறங்கிய இந்தியாவை பிரித்து மேய்ந்தது சிம்பாப்வே

இந்தியா சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான இரண்டாவதும் இறுதியுமான ரி–20 ஆட்டத்தில் பத்து ஓட்டங்களால் இந்தியாவை வீழ்த்தி தொடரை 1–1 என்று சமன்செய்தது சிம்பாப்வே.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாப்வே முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்க களத்தில் மசகட்சாவுடன் சிப்ஹபா. வழக்கத்துக்கு மாறாக பதின்மத்துடன் முதலில் விடைபெற்றார் மசகட்சா. ஒருமுனையில் சிப்ஹபா சிறப்பான போராட்டம் காட்டினாலும் இணைப்பாட்டமொன்றை எதிர்கொள்ளும் அளவுக்கு சிம்பாப்வேயின் எந்த வீரர்களும் தாக்குப் பிடிக்கவில்லை. வில்லியம்ஸும் சிப்ஹபாவும் இணைந்து 37 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்ததே சிம்பாப்வே சார்பாக பதியப்பட்ட அதிகபட்ச இணைப்பாட்டம். 17ஓட்டங்களுடன் வில்லியம்ஸ் பவிலியன் திரும்ப சிம்பாப்வேயின் ஓட்டங்களும் ஓட்டங்களைப் பெறும் வேகமும் ஸ்தம்பிதமடையத் தொடங்கியது. ஆனாலும் போராட்டத்தைக் கைவிடவில்லை சிப்ஹபா. கோண் வேர்ட்டி 4, எர்வின் 7, உட்செயா 7 என்று ஒருவர் பின்னர் ஒருவராக வந்த இடத்துக்குச் செல்ல 20 பந்துப்பரிமாற்றங்களின் முடிவில் சிம்பாப்வே 145–7.




120 பந்துகளில் 146 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற எட்டக்கூடிய இலக்கினை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு, வெறும் நான்கே ஓட்டங்களுடன் ரஹானேயின் ஆட்டம் முடிவுக்கு வர தொடக்கம் சொதப்பலாகவே அமைந்தது. விஜய்யும் விடைபெற்றார் 13 ஓட்டங்களுடன். பாண்டே வந்ததும் தெரியாது போனதும் தெரியாது. தற்பொழுது இந்திய அணி 57–3. ஏற்பட்ட பின்னடைவை சரிசெய்வதுக்காக வெழுத்து வாங்கினார் உத்தப்பா. 150இற்கும் அதிகமான சராசரியில் விரைந்து கொண்டிருந்தார். உத்தப்பாவுக்கு துணையாக நின்ற பின்னியும் ஆட்டமிழந்துவிட்டார். அரைச்சதத்தை தவறவிட்டார் உத்தப்பா. பின்வரிசை ஒற்றையிலக்கங்களுடன் ஓட்டம்பிடிக்க சிம்பாப்வேயின் வெற்றி படிப்படியாக உறுதியாகிக் கொண்டிருந்தது. இறுதிப் பந்துப்பரிமாற்றத்தில் 16 ஓட்டங்கள் பெற்றால் வெற்றியென்ற நிலைமை. துல்லியமாக வீசினார் மொவ்வு. முடிவில் இந்தியா 135 ஓட்டங்களில் வீழ்ந்தது. (ம)

Success Language Centre
*வெளி நாடு செல்ல இருப்பவர்களுக்கான
EASY SPOKEN ENGLISH
(RS. 20.000/=)
* German/Swiss டொச் வகுப்புகள்.
* சிங்கள மொழி வகுப்புகள்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(லிங்கன் கிறீம் ஹவுஸ் முன்பாக)
T.P: 077 6408622

NEW SCIENCE WORLD
Navalar Road-Brown Road Junction. Jaffna.
க.பொ.த(உ/த) 2015 இறுதிப் பரீட்சை
பௌதிகவியல் II
காலம்:- 22.07.2015 புதன்கிழமை
நேரம்:- காலை 09.00 - 12.00மணி
(தொடர்ந்து 12.30 - 3.30மணிவரை
பௌதிகவியல் கருத்தரங்கும் இடம்பெறும்)
R.குமரன் & R.குகன்

## காணவில்லை



கனடாவில் வசித்துவரும்
**இராசையா பாக்கியநாதன்**
என்பவர் வவுனியாவில் உள்ள உறவினர் வீட்டில் தங்கியிருந்து 18.07. 2015 (சனிக்கிழமை) வவுனியா நகருக்குச் சென்றவர் இதுவரை வீடு திரும்பவில்லை. இவர் வீட்டை விட்டுப் புறப்படும் போது கறுப்பு நிற ஜீன்ஸ், நீலக்கட்டம் போட்ட சேட்டும் , கறு ப்புச் சப்பாத்தும் அணிந் திருந்தார். இவரைக் கண்டவர்கள் கீழ் குறிப்பிடப் பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:- 077 6561693, 024 222 4716, 076 698 2757, 076 5375768

## பிரேஸிலின் தங்கமகன் மீண்டும் மருத்துவமனையில்

பிரேஸிலின் தங்கமகன் என்று அழைக்கப்படும் கால்பந்து ஜாம்பவான் பீலே முதுகெலும்பில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பிரேஸிலின் சாவோ பாலோ நகரில் உள்ள அல்பிரட் ஐன்ஸ்டீன் மருத்துவமனையில் பீலே அனுமதிக்கப்பட்டுள்ளார். பிலேயின் குடும்பத்தினர் வேண்டுகோளின்படி மருத்துவமனை வட்டாரம் அவரது சிகிச்சை குறித்து எந்தவிதமான அதிகாரப்பூர்வ தகவலையும் தெரிவிக்கவில்லை. கடந்த வியாழக்கிழமை அறுவை சிகிச்சை நடைபெற்றதாவும், தற்போது பீலே நலமுடன் இருப்பதாகவும், இன்று அவர் வீட்டிற்கு திரும்பலாம் என்றும்; உள்ளூர் ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. முதுகெலும்பில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக பீலேவுக்கு காலில் பலம் குறைந்திருக்கிறது. அவரது வலது காலில் முழுமையாக பலம் இல்லை என்றும் கூறப்படுகிறது.

பீலே கடந்த 2012ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து உடல் நலம் பாதிக்கப்பட்டு வருகிறார். கடந்த ஆண்டு நவம்பர் மாதம் அவருக்கு சிறுநீரகத்தில் ஏற்பட்டிருந்த கல் அகற்றப்பட்டது. அதன் பின்னர் சிறுநீரகத் தொற்று பாதிப்பு காரணமாக கடந்த மே மாதம் அவர் நான்கு நாட்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். பிரேஸில் நாட்டிற்காக மூன்று முறை உலகக்கிண்ணம் வென்று கொடுத்த ஒரே வீரர் பீலே என்பது குறிப்பிடத்தக்கது. (ம)



இப்பத்திரிகை. நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.07.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.